November 2025

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™
IDLI/DOSA BATTER
Let's Eat Fresh!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers
VARSHA
VARSHA

ஐ தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

November 2025
சுவடி — 15
ஓலை — 9

**வணக்கம் பல**

மனிதருக்கு நடத்தையும் செய்த நற்காரியங்களுமே பெரும் புகழாக விளங்கும். பிரபலமாக இருப்பது எல்லாம் புகழ் வாய்ந்ததாகாது. பிரபலம் என்பது காற்றடித்தால் உச்சிக்குச் சென்று சேர்வன போலத்தான். உண்மையான புகழ் என்றென்றும் நிலைத்திருப்பதேயாகும். சிறந்த விருதுகளும் பட்டங்களும், ஒரு மனிதருக்கு நீடித்த புகழையும் பெருமையும் தருவது கண்கூடு. தானாக வந்து சேர்ந்தால்தான் பட்டம்! நாமாகப் பெற்றுக் கொள்ள முனைவது தம்பட்டம்! தருவோர்க்கும், அதைப் பெறுவோர்க்கும் பெருமை சேர்ப்பதே சிறந்த விருதாகும். கேட்டுப் பெறுவதும், கேட்டால் தருவதும் விருதென்றால், அது பெருமைக்குப் பதில் சிறுமையே ஏற்படுத்தும். உலக அளவில் மிகப் பெரிய பரிசாகவும் விருதாகவும் கருதப்படுவது நோபல் பரிசு. கவனமாக அலசி ஆராயப்பட்டு, அந்தந்தத் துறை சார்ந்த தகுதி வாய்ந்த நபர்களுக்கு ஆண்டுதோறும் சிறப்பாக வழங்கப்படுகிறது.

வாள் வீச்சு விற்பன்னர்களைப் போல, சில வாய்வீச்சு விற்பன்னர்களுக்கு அப்பரிசு இவ்வாண்டு சென்று விடுமோ எனப் பலர் ஆதங்கப்பட்ட நிலையில், நல்ல வேளையாக அமைதிக்கான நோபல் பரிசு, வெனிசுலா நாட்டு மக்களின் உரிமைக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டு போராடுபவருக்கு வழங்கப்பட்டிருக்கிற நிலையில் அவ்விருதும், அதைப் பெறுவோரும் மீண்டும் உயர்வான அங்கீகாரத்தை எட்டி இருக்கிறார்கள். அந்த வகையில் நோபல் பரிசுக் குழுவினரையும் அப்பரிசினைப் பெறுவோரையும் வாழ்த்துவோமாக!

ரஷ்யா, இந்தியா, சீனா போன்ற பல நாடுகளின் மீது கட்டுப்பாடுகளை விதித்திருப்பவர், மீண்டும் பல உலக நாடுகளின் அதிருப்திக்கு ஆளாகி இருக்கிறார். நேரடியாகத் தொடுப்பது மட்டுமே போர் ஆகாது. மறைமுகமாக மக்களின் வாழ்வாதாரத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளும் கூட போருக்கு ஒப்பானதுதான்! ஒருபுறம் போர் நிறுத்தம் செய்வதாக நாடகம் ஆடிக் கொண்டும், பல நாடுகளின் மீது தன் பொருளாதார ஆதிக்கத்தைச் செலுத்தி அந்நாடுகளின் சீர்குலைவுக்குக் காரணமாக இருப்பவரின் போக்கு கண்டிப்பாக மாற வேண்டும்! இன்றைக்கு இளைய தலைமுறையினர், கைப்பேசியை வைத்துக்கொண்டு எவ்வளவு கவனச் சிதறல்களைச் சந்தித்துத் தள்ளாடுகிறார்கள் என்பதை விளக்கும் அலசல் கட்டுரையுடன், கதை, கவிதை, மருத்துவம், ஆன்மிகம், ஆராய்ச்சி என்றெல்லாம் நல்ல பல ஆக்கங்களுடன் கதம்ப மலராக மலர்கின்ற இம்மாத ‘அய் தமிழ்’ இதழை வாசியுங்கள்!.. வரவேற்று நேசியுங்கள்!..

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...




இலவு காத்த கிளி!
ஆணவப் போர்
தமிழே தமிழே
உடைந்ததா பிம்பம்
சேரமான் கனவு
தல வலம்
அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்
ஆதாரம் அழிக்கும் அறிவு
மருத்துவ தமிழ்
மகிமை காணும் மனம்

**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
editor@ithamil.com

(பொறுப்பு துறப்பு: இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது. படைப்புக்கள் யாவும் படைப்பாளிகளின் கருத்துக்களே. அதற்கு எவ்வகையிலும் அய் தமிழ் பொறுப்பேற்காது.)



# இலவு

## அமைதிக்கான நோபல் பரிசு வென்ற வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் !

நிகழாண்டு அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுலாவின் எதிர்க்கட்சியான வென்டே வெனிசுலாவின் தலைவர் மரியா கொரினா மச்சாடோவுக்கு (58) அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக அந்தப் பரிசுக்கான தேர்வுக் குழு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

உலக நாடுகளில் ஒப்பீட்டளவில் மக்களாட்சி நாடாக வெனிசுலா வளமாக இருந்தது. தற்போது அது எதேச்சதிகார நாடாக மனிதத்தன்மைக்கு எதிரான நெருக்கடியாலும், பொருளாதார சிக்கலாலும் பாதிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டில் காரிருள் சூழ்ந்துவரும் வேளையில், மக்களாட்சியின் சுடரை அணையாமல் பாதுகாத்து அமைதிக்காகப் பாடுபட்டு வரும் மரியா கொரினா மச்சாடோவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட உள்ளது.

அந்நாட்டில் நியாயமாகவும் நேர்மையாகவும் தேர்தல் நடைபெற வேண்டும் என்று 20 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் குரல் எழுப்பத் தொடங்கினார். நாட்டு மக்களின் சுதந்திரத்துக்காக அவர் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வந்துள்ளார். அந்நாட்டில் சுதந்திரமாக தேர்தல் நடைபெற வேண்டும், பிரதிநிதித்துவ அரசு அமைய வேண்டும் என்பது எதிர்க்கட்சிகளின் பொது நோக்கமாக உள்ளது. அந்தக் கட்சிகள் ஒரு காலத்தில் ஒற்றுமையில்லாமல் பிளவுபட்டிருந்த நிலையில், எதிர்க்கட்சிகளை ஒன்றுசேர்க்கும் சக்தியாக மரியா உள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில், அவர் எதிர்க்கட்சிகளின் அதிபர் வேட்பாளராக இருந்தார். ஆனால், அந்நாட்டு அரசு அவரைப் போட்டியிடவிடாமல் தடுத்துவிட்டது. எதிர்க்கட்சிகளை அவர் ஒன்றுசேர்த்துள்ளார். வெனிசுலா சமூகத்தை ராணுவமயமாக்குவதற்கு எதிராகப் போராட அவர் எப்போதும் தயக்கம் காட்டியதில்லை. மக்களாட்சி முறைக்கு அமைதியான முறையில் மாறுவதற்கு எப்போதும்





# காத்த கிளி !


அவர் ஆதரவு அளித்து வந்துள்ளார். இதன்மூலம், நோபல் பரிசு உருவாகக் காரணமான ஆல்ஃபிரட் நோபலின் உயிலில் எந்தக் காரணங்களுக்காக ஒருவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதோ, அந்தக் காரணங்களை மரியா பூர்த்தி செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

தலைமறைவு வாழ்க்கை: கடந்த ஆண்டு வெனிசுலாவில் நடைபெற்ற தேர்தலைத் தொடர்ந்து, தமக்கு எதிராக எழும் குரல்களை நசுக்க அதிபர் நிகோலஸ் மதுரோ தலைமையிலான அரசு நடவடிக்கை மேற்கொண்டது. அப்போது முதல் மரியா தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். எனவே, வரும் டிச.10—ஆம் தேதி நா

□வேயில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் அவர் பங்கேற்பாரா என்பது தெரியவில்லை என்று பரிசுத் தேர்வுக் குழு தெரிவித்தது.

பரிந்துரை ஜனவரியிலேயே நிறைவு: அமைதிக்கான நோபல் பரிசுக்குரிய பரிந்துரைகள் கடந்த ஜனவரி 31—ஆம் தேதியே நிறைவடைந்த நிலையில், அதன்பிறகும் தனக்கு நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என டிரம்ப் தொடர்ச்சியாகக் கூறி வந்தார்.

இந்தியா—பாகிஸ்தான், கம்போடியா—தாய்லாந்து, இஸ்ரேல்—ஈரான், கொசோவோ—செர்பியா, காங்கோ—ருவாண்டா, எகிப்து—எத்தியோப்பியா, ஆர்மீனியா—அஜர்பைஜான் நாடுகளுக்கு இடையிலான போர்களை நிறுத்தியதால், தனக்கு அமைதிக்கான நோபல் பரிசு அளிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் பெரிதும் எதிர்பார்த்தார். இந்நிலையில், அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுலாவின் மரியா






கொரினா மச்சாடோவுக்கு அறிவிக்கப்பட்டதால் டிரம்ப் ஏமாற்றம் அடைந்துள்ளார்.

பரிசளிப்பில் அரசியல்: அமெரிக்க அதிபர் மாளிகை

அமைதிக்கான நோபல் பரிசளிப்பதில் தேர்வுக் குழு அரசியல் செய்வதாக அமெரிக்க அதிபர் மாளிகை விமர்சித்துள்ளது. இதுகுறித்து அமெரிக்க அதிபர் மாளிகையின் தகவல் தொடர்புப் பிரிவு இயக்குநர் ஸ்டீவன் ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்ததாவது: அமைதிக்கான நோபல் பரிசு பெறும் விருதாளரைத் தேர்வு செய்வதில் அமைதிக்கு அளிக்கப்பட்ட பங்களிப்பைக் கருத்தில் கொள்வதைவிட, அரசியல் செய்வதற்கு பரிசுத் தேர்வுக் குழு முன்னுரிமை அளிக்கிறது. இதை மீண்டும் ஒருமுறை (டிரம்ப்பை தேர்வு செய்யாமல் மரியாவை தேர்வு செய்ததன் மூலம்) தேர்வுக் குழு உறுதி செய்துள்ளது. அமைதி ஒப்பந்தங்கள், போர்களை நிறுத்துவது, மனித உயிர்களைக் காப்பாற்றுவது ஆகிய பணிகளை அதிபர் டிரம்ப் தொடர்வார் என்று தெரிவித்தார்.

‘வெனிசுலா மக்களுக்கும் டிரம்ப்புக்கும் அர்ப்பணிப்பு’: மரியா கொரினா மச்சாடோ ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்ட பதிவில், ‘அமைதிக்கான நோபல் பரிசை எனக்கு அறிவித்ததன் மூலம், வெனிசுலா மக்களின் போராட்டத்துக்குப் பெரும் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அங்கீகாரம் சுதந்திரத்தை அடைய வேண்டும் என்ற வெனிசுலா மக்களின் பணியை நிறைவு செய்ய உத்வேகம் அளித்துள்ளது.

துயரத்தில் உள்ள வெனிசுலா மக்களுக்கும் எங்கள் போராட்டத்துக்கு உறுதியான ஆதரவு அளித்த அமெரிக்க அதிபர் டிரம்ப்புக்கும் இந்தப் பரிசை அர்ப்பணிக்கிறேன்.

வெற்றியின் தொடக்க நிலையில் வெனிசுலா மக்கள் உள்ளனர். சுதந்திரம் மற்றும் மக்களாட்சியை அடைவதில், எங்கள் கொள்கை கூட்டாளிகளாக அமெரிக்க அதிபர் டிரம்ப், அந்நாட்டு மக்கள், லத்தீன் அமெரிக்க மக்கள் மற்றும் உலகில் உள்ள மக்களாட்சி நாடுகள் மீது முன்னெப்போதையும்விட வெனிசுலா நம்பிக்கை கொண்டுள்ளது’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

லத்தீன் அமெரிக்காவில் மக்களின் துணிச்சல் மற்றும் ஜனநாயகத்தின் அடையாளமாக உருவாகியிருக்கிறார். அரசுக்கு எதிராக அமைதியான வழியில் பல போராட்டங்களை நடத்தியிருக்கும் இவர், வெனிசுலாவில் கடந்த 2024ம் ஆடு நடந்த தேர்தலில் பங்கேற்பதிலிருந்து தடை செய்யப்பட்டதுடன் அரசால் தேடப்பட்டு வந்தார். வெனிசுலாவில் உயிருக்கு ஆபத்து இருந்த சூழலிலும் நாட்டை விட்டு வெளியேறாமல் இருந்தார்.

வெனிசுலாவின் அரசியல் சூழல்

கடந்த 1992ம் ஆண்டு வெனிசுலாவில் அரசுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்ட இயக்கத்தின் தலைவர் ஹுகோ சாவேஸ், கைது செய்யப்பட்டு, பின்னர் 1994ம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டர்.

பிறகு அவர் ஆரம்பித்த அரசியல் கட்சி,




1998 தேர்தலில் வெற்றிபெற்றது. சோசலிச கொள்கைகளின்படி ஆட்சி செய்த அவர், பொலிவேரியன் அரசியலமைப்பை உருவாக்கினார். வறுமை ஒழிப்பு, கல்வி, சுகாதார வளர்ச்சியில் கவனம் செலுத்தி மக்கள் மனதில் இடம்பிடித்தார்.

2007ம் ஆண்டு நாட்டின் அனைத்து இடதுசாரி கட்சிகளையும் இணைத்து கட்சியை உருவாக்கினார். அவரது பிற்கால ஆட்சியில் அதிகாரத்தை குவித்தல், ஊடகங்களைக் கட்டுப்படுத்துதல், எதிர்க்கட்சிகளின் குரலை அடக்குதல் ஆகிய விமர்சனங்கள் அவர் மீது எழுந்தன.

பல ஊடகங்கள் அரசினால் கட்டுப்படுத்தப்பட்டன. எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். ஒரு நபர் இரண்டு ஆட்சிக்காலம் மட்டுமே ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியும் என்ற வரம்பை நீக்கி, அவரது மரணம் வரை ஜனாதிபதியாக இருந்தார். 2013ம் சாவேஸுக்குப் பிறகு அவரது அரசில் முக்கிய பொறுப்பு வகித்த 'நிக்கோலஸ் மதுரோ' கட்சியின் தலைவராகவும் ஜனாதிபதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர்தான் இன்றைய வெனிசுலா ஜனாதிபதி.

நிக்கோலஸ் மாதுரோவின் ஆட்சியை சர்வாதிகார ஆட்சி என அமெரிக்கா விமர்சித்துள்ளது. அவர் ஆட்சிக்கு வந்ததுமே எண்ணெய் விலை கவிழ்ந்து கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. தொடர்ந்து சாவேஸின் அடக்குமுறைகள் அதிவேகத்தில் தொடர்ந்தன. சோசலிசத்தின் பெயரில் ஊழல் மண்டிய கட்சியாக மாறியது. வெனிசுலாவின் அரசியல் அடக்குமுறைகள், ஊடக கட்டுப்பாடுகள் குறித்து ஐநா சபை கவலை எழுப்பியுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் சிறைவைக்கப்படுவது குறித்து மனித உரிமைகள் ஆணையம் கேள்வி எழுப்பியுள்ளது.

2018ம் ஆண்டு நடந்த தேர்தலில் மதுரோ பல்வேறு முறைகேடுகளைக் கையாண்டு வெற்றிபெற்றதாக சர்வதேச சமூகங்கள் விமர்சித்தன. ஐரோப்பிய ஒன்றியம் அவர் ஒரு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் அல்ல என்றது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் வெனிசுலா மீது பொருளாதார தடைகள் விதித்ததுடன், அரசியல் அழுத்தம் கொடுத்து வருகின்றன. எனினும் ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் வெனிசுலாவுக்கு ஆதரவளித்து வருகின்றன.

இந்த ஆபத்தான சூழலில் எதிர்க்கட்சிகள் கூட ஜனாதிபதி நிக்கோலஸ் மாதுரோவுக்கு எதிராக பேச அஞ்சின. நீண்ட கனமான அமைதியை உடைத்தவர் மரியா கொரினா மச்சாடோ.

மரியா கொரினா மச்சாடாவின் அரசியல் வாழ்க்கை

மரியா கொரினா மச்சோடா 1967ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி பிறந்தார். கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்த தனியார் பள்ளியில் கல்விபெற்றவர். பொறியாளராக உருவானார். இவரது குடும்பம் சமூக சேவைகளில் ஈடுபாடு கொண்டிருந்ததால், மனித உரிமை செயல்பாடுகளை மேற்கொண்டார்.

1999 முதல் 2025 வரை 25 ஆண்டு அரசியல் வாழ்க்கையில் வெனிசுலாவின் முக்கிய சக்தியாக உருவெடுத்துள்ளார் மரியா. 2000ம் ஆண்டு முதல் 2010 வரை தேர்தல் அரசியலில் ஈடுபடாவிடாலும், 2002ம் ஆண்டு அலெஜான்ட்ரோ பிளாஸ் என்பவருடன் இணைந்து **Súmate** என்ற




வெற்றியைப் பல சர்வதேச அமைப்புகளும் வெனிசுலா மக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. அமெரிக்கா, அர்ஜென்டினா, உருகுவே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் எதிர்க்கட்சி சார்பாக போட்டியிட்ட எட்மண்டோ கோன்சாலெஸ் உர்ருதியாவே வெற்றிபெற்றதாகக் கூறுகின்றன. ஆனாலும் அதிகாரப்பூர்வமாக மதுரோ வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார்.

2025 ஜனவரி மாதம் பொதுவெளியில் தோன்றியபோது கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டார். அதன்பிறகும் அவரைப் பொதுவெளியில் காணப்படவில்லை. தொடர்ந்து அரசாங்கத்தின் மிரட்டல்களுக்கு ஆளாகும் அவர், தனது உயிருக்கே ஆபத்தான சூழல் இருந்தாலும் வெனிசுலாவை விட்டு அவர் வெளியேறவில்லை. வெனிசுலாவில் சோசலிச — சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து தொடர்ந்து போராடிவரும் மச்சோடா, தனியார்மயப்படுத்தப்பட்ட சந்தை, வெளிநாட்டு முதலீடு, அமெரிக்கா உள்ளிட்ட ஜனநாயக நாடுகளுடன் நல்லுறவு ஆகியவற்றை ஆதரிக்கிறார். அவரது தொண்டர்களால் சுருக்கமாக **MCM** என்றும் 'இரும்புப் பெண்மணி' என்றும் அழைக்கப்பட்டார்.

அமைப்பை உருவாக்கி, ஜனநாயகம் மற்றும் தேர்தல் வெளிப்படைத்தன்மைக்காகப் பணியாற்றினார்.

அதன்பிறகு 2010ம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று 2011—2014 வரை நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தார். அதன்பிறகு அரசின் தடுப்பு மற்றும் பாதுகாப்பு காரணங்களால் மிகக் குறைவாகவே பொதுவெளியில் தோன்றினார். குறிப்பாக 2024ம் ஆண்டு தேர்தலுக்கு முன்பாக எதிர்க்கட்சிகள் பிராசரம் செய்ய பல தடைகளை விதித்தது வெனிசுலா அரசு. பாதுகாப்பு காரணங்களுக்காக அறிவிக்கப்படாத இடங்களில் பிராசரம் செய்தார் மச்சோடா. அரசு ஊடகங்கள் அவரது பிரசாரத்தை காட்டவில்லை, தனியார் ஊடகங்களும் அழுத்தம் காரணமாக மிகக் குறைவாகவே காட்டின. பெரும்பாலும் சமூக வலைத்தளங்களையும் இணையத்தையும் நம்பி பிரசாரத்தில் ஈடுபட்டார்.

மச்சோடா தேர்தலில் நிச்சயமாக நிக்கோலஸ் மதுரோவை வெற்றி பெறுவார் என எண்ணப்பட்ட சூழலில் கடைசி நேரத்தில் அவர் தேர்தலில் பங்கேற்க தடைவிதிக்கப்பட்டது. அதன்பிறகு அரசால் கைது செய்யப்படும் அச்சத்தினால் தலைமறைவாக இருந்தார்.

எனினும் 2024 தேர்தலில் நிக்கோலஸ் மதுரோவின்

வெனிசுலாவில் ஜனநாயகத்தின் முகமாக உருவாகியிருக்கும் அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு என்ற கௌரவம் கிடைத்துள்ளது. இதைக் கொண்டாடும் விதமாக அவர் பொதுவெளியில் தோன்றலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. வெனிசுலாவில் நேர்மையான தேர்தல் நடைபெற்றால் அவர் ஒருநாள் வெனிசுலாவின் ஆட்சியாளராகவும் திகழலாம்.

நோபலின் பின்னணியில்...

பரிசுகள் இரண்டு வகைப்படும். குழந்தைக்குக் கொடுக்கும் முத்தத்தில் தொடங்கி, காதலி வழியாக திருமணம், விசேஷங்கள் என்று வாரி வழங்கும் பரிசுகளெல்லாம் அன்புப் பரிசுகள்.




சாதனையாளர்களுக்கும், வெற்றியாளர்களுக்கும் வழங்கப்படும் பரிசு வெற்றிப் பரிசு.

சாதனையாளர்களுக்கும், வெற்றியாளர்களுக்கும் வழங்கப்படும் பரிசுகளில் உலக அளவில் பேசப்படும் உச்சமான பரிசு 'நோபல் பரிசு'. யார் இந்த நோபல்?

'நோபல்' என்ற ஆங்கில வார்த்தைக்கு உயர்ந்த தரம் அல்லது உன்னதமான குணங்களைக் கொண்ட நபர் அல்லது அரச பரம்பரையைச் சேர்ந்தவர் என்று பொருள். உண்மையில் ஆல்பிரட் நோபலின் தந்தை இம்மானுவேல் நோபல் — தாய் ஆன்ட்ரியா நோபல். இவர்களின் எட்டு குழந்தைகளில் ஆல்பிரட் 3—ஆவது குழந்தை ஆவார். அவர் பிறந்தது அக்டோபர் 21, 1833. பொறியாளரான தந்தையின் நிறுவனம் 1842—இல் திவாலாக, தந்தை ரஷியா சென்று வெடிமருந்து நிறுவனத்தைத் தொடங்கி பொருள் ஈட்டினார்.

ஆல்பிரட் நோபல் அதிகம் படிக்கவில்லை. ஆனால், அவருக்கு வேதியியலும், பொறியியலும் லாவகமாக கைவந்தன. அவர் டைனமைட் உள்பட 355 கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமைகளைப் பெற்று கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்தார். அவர் நைட்ரோ கிளிசரின் என்ற திரவ வடிவிலான ஆபத்தான வெடிமருந்தைக் கண்டுபிடித்து, அதற்கு களிமண் உருண்டைகள் மூலம் திட வடிவம் கொடுத்து வெடிமருந்தாக்கி பெரும் பொருள் ஈட்டினார்.


ஆல்பிரட் நோபல் திருமணம் செய்து கொள்ளவில்லை; வாரிசுகள் கிடையாது. அவர் நோபல் பரிசை நிறுவியதற்கு ஒரு ருசிகரமான சம்பவம் காரணம். ஒரு சமயம் நோபல் மிகுந்த நோய்வாய்ப்பட்டு மரண நிலைக்குச் சென்றார். அவர் இறந்துவிட்டதாக செய்திகள் பரவின. பத்திரிகைகள் அவரை 'ஒரு மரண வியாபாரி' என்றும், 'மனிதர்களைக் கொல்லும் மருந்துகளைக் கண்டுபிடித்தவர்' என்றும் விமர்சித்தன.

இதனால் வருத்தமடைந்த ஆல்பிரட், தன்னுடைய கோடிக்கணக்கான சொத்துகளைக் கொண்டு 'தி நோபல் பவுண்டேஷன்' என்ற அறக்கட்டளையை 1900—இல் தொடங்கி, உலக அளவில் ஆகச் சிறந்தவர்களை ஐந்து பிரிவுகளில் தேர்ந்தெடுத்து, ஆண்டுதோறும் தன் பெயரில் பரிசு வழங்க வேண்டுமென்று ஒரு திட்டத்தை ஏற்படுத்தினார்.

இயற்பியல், வேதியியல், மருத்துவம், இலக்கியம், அமைதி ஆகிய 5 பிரிவுகளின் கீழ் பரிசுகளை ஏற்படுத்தினார். ஸ்வீடனின் மத்திய வங்கி தனது 300—ஆவது ஆண்டான 1968—இல் நோபல் பெயரில் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை நிறுவியது. இவ்வாறாக இந்தப் பரிசுகள் 1905—ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. சில ஆண்டுகள் உலக யுத்தத்தின் காரணமாகவும், தகுதியான விருதாளர்கள் குறிப்பிட்ட பிரிவுக்கு கிடைக்காததாலும் விருதுகள் வழங்கப்படவில்லையே தவிர, கடந்த 120 ஆண்டுகளாக நோபல் பரிசு தொய்வின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நோபல் பரிசு வழங்குவதில் பல அரசியல்களும், பல சண்டை சச்சரவுகளும் உள்ளன. இதைப் பற்றி பிரபல அமெரிக்க

எழுத்தாளரான இர்வின் வேலஸ் எழுதிய 'இந்தப் பரிசு' (தி பிரைஸ்) என்ற புத்தகத்தில் விரிவாக எழுதியுள்ளார். தன்னுடைய 120 ஆண்டு வரலாற்றில் ஒருவருக்கு அமைதிக்கான நோபல் பரிசை வழங்காமல் இமாலய தவறு செய்து விட்டோம் என நோபல் பவுண்டேஷன் குழு வெளிப்படையாக வருத்தம் தெரிவித்த ஒரே நபர் யார் தெரியுமா?




அவர் ஐந்து முறை நோபல் அமைதிப் பரிசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டும், அவருக்கு அந்தப் பரிசை வழங்கவில்லை என நோபல் பவுண்டேஷன் குழு வருத்தம் தெரிவித்தது மட்டுமல்ல; அவர் இறந்த பிறகு வழங்கினால் அந்தப் பரிசை யாருக்கு வழங்குவது என பிரச்னை இருந்தது என்று ஏற்க முடியாத காரணத்தையும் சொன்னது. அவர் வேறு யாருமல்ல; ஒவ்வோர் இந்தியனும் அவரை 'தேசப்பிதா' எனக் கொண்டாடும் 'மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி' எனப்படும் மகாத்மா காந்திதான்.

400—க்கும் மேற்பட்ட நோபல் பரிசு விருதுகள் வழங்கப்பட்ட நிலையில், இந்த விருதை அதிகம் பெற்ற நாடு அமெரிக்கா. இதுவரை இந்தியா சார்ந்த 12 நபர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. ரவீந்திரநாத் தாகூரின் 'கீதாஞ்சலி' என்ற கவிதை தொகுப்புக்கும், தமிழரான சி.வி.ராமனுக்கு அவருடைய 'ராமன் விளைவுக்கும்' நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. பாரதியாரின் கவிதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தால், அதற்கு நோபல் பரிசு கிடைத்திருக்கலாம் என்பது என் கருத்து. இந்த 12 பேர் பட்டியலில் இந்தியாவில் பிறந்தவர்களும், வெளிநாட்டில் வாழ்பவர்களும், வெளிநாட்டில் பிறந்து, இந்தியக் குடியுரிமை பெற்ற அன்னை தெரசாவும் அடங்குவர்.

மேரி கியூரியும் அவரது கணவர் பியேர் கியூரியும் இயற்பியலுக்காகவும், இதுபோல், இந்தத் தம்பதிகளின் மகளும், மருமகனும் வேதியியலுக்காகவும் 1935—இல் நோபல் பரிசு பெற்றார்கள். அதுபோல் 1947—இல் மருத்துவத்துக்கு பரிசு பெற்றவர்கள் கெர்டி கோரி தம்பதிகள் ஆவார்கள். 1982—இல் ஆல்வா மைர்தால் ,1974—இல் அவர் கணவர் குன்னர் மைர்தாலும் நோபல் பரிசு பெற்ற தம்பதிகள் ஆவார்கள். 2014—இல் மோசர் தம்பதிகள் இயற்பியல், மருத்துவத்துக்கான நோபல் பரிசை தட்டிச் சென்றார்கள்.

பொதுவாக அரசியல் காரணங்களுக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டதாகவும் அல்லது மறுக்கப்பட்டதாகவும் தொடர் சர்ச்சைகள் உண்டு. அமைதி, பொருளாதாரம் மற்றும் இலக்கியத்துக்காக வழங்கப்பட்ட நோபல் பரிசுகளில் அதிக பிரச்னை ஏற்பட்டு, அவை அடிக்கடி விமர்சனத்துக்கு உள்ளாயின. தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாதங்களிலேயே நோபல் பரிசு வழங்கப்பட்ட அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா அதிகமான விமர்சனங்களுக்கு உள்ளானார்.

அந்தப் பரிசை வாங்கும் போது, அவர் தனக்கு அந்தப் பரிசு வழங்கப்பட்டதற்கு வியப்பு



VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा



தெரிவித்தார். ஹென்றி கிசிங்கருக்கும், யாசர் அராபத்துக்கும் வழங்கப்பட்ட நோபல் பரிசும் விவாதத்துக்கு உள்ளானது. இப்போது வங்கதேச இடைக்கால அரசின் தலைவராக உள்ள முகமது யூனுஸுக்கு மைக்ரோ கிரிடிட் அண்ட் மைக்ரோ பைஃனான்ஸ் என அந்த நாட்டில் சுய உதவிக் குழுக்களை நிறுவி, பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியதற்காக 2006—இல் நோபல் பரிசு வழங்கியது. தன் மீதான விமர்சனம், குற்றச்சாட்டுகளைத் தாண்டி ஸ்வீடிஷ் அகாதெமி ஆகச்சிறந்த அறிஞர்களைத் தேர்வு செய்து விருது வழங்குகிறது என்கிற உண்மையை மறுக்க முடியாது.

நோபல் பரிசை வாங்க மறுத்தவர்களும் உண்டு. ஹென்றி கிசிங்கரின் சகத் தேர்வாளர் வியத்நாமைச் சேர்ந்த லீ டக் தோ அந்தப் பகுதியில் அமைதி திரும்பவில்லையென்று சொல்லி தனக்கு அளிக்கப்பட்ட பரிசை வாங்க மறுத்தார். நோபல் பரிசானது ஒரு பதக்கம், ஒரு சான்று மற்றும் இந்திய மதிப்பில் ரொக்கம் ரூ.8.5 கோடி ஆகும்.

நோபல் பரிசு வழங்கும் திட்டத்தின் ஒரு முக்கியமான விதி என்ன தெரியுமா? எந்த ஒரு தனிநபரும் அல்லது நிறுவனமும் தனக்கும் நோபல் பரிசு தர வேண்டுமென்று கேட்க முடியாது. பிரபல விஞ்ஞானிகளும், ஏற்கெனவே நோபல் பரிசு வழங்கப்பட்டவர்களும் என்று நோபல் பரிசுக்கு ஒருவரைப் பரிந்துரை செய்யலாம் அல்லது அதற்கு மேற்பட்டவர்களை ராயல் ஸ்வீடிஷ் அகாதெமி கவனமாகப் பரிசீலித்து தேர்ந்தெடுக்கும். அந்த சமயம் பரிசுத் தொகை அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

இப்படி ஒரு விதி இருப்பதுகூடத் தெரியாமல் அமெரிக்க அதிபர் டிரம்ப் தனக்கு நோபல் பரிசு வேண்டும் என கூவிக்கொண்டே இருப்பது அவருடைய அறியாமையையும், பேராசையையும் காட்டுகிறது. அண்மைக்காலமாக இஸ்ரேலுக்கும் — ஹமாஸுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு தானே காரணம் என கூறிக்கொள்கிறார். ஏற்கெனவே, இந்தியா — பாகிஸ்தான் போரை நான்தான் நிறுத்தினேன் என்று சொல்ல, அதை இந்தியா மறுக்க, அதை அவமானமாகவே அவர் நினைக்கவில்லை என்பது ஓர் அரசியல் சோகம்.


இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற வெனிசுலாவைச் சேர்ந்த மரியா கொரினா மச்சாடோ தன்னை தொலைபேசியில் அழைத்து, ‘இந்தப் பரிசு உங்களால் (டிரம்ப்) கிடைத்தது; உங்களுக்குச் சேர வேண்டியது’ எனக் கூறியதாக அவர் அறிவித்ததை என்னவென்று சொல்வது?

‘கிட்டாதாயின் வெட்டென மற’ என்று ஔவையாரின் அமுத மொழிகள் தமிழில் இருப்பதால், அது அமெரிக்க அதிபர் டிரம்ப்புக்கு தெரியாமல் போய்விட்டதோ என்று நான் சிந்திப்பதுண்டு. ஆனால், தகுதியே இல்லாமல் அந்தப் பரிசுக்கு அவர் ஆசைப்படுவது பேராசை என அவரிடம் யார் எடுத்துச் சொல்வது?

தன்னை ‘மரண வியாபாரி’ என்ற விமர்சனத்திலிருந்து தப்பிக்க நோபல் தன் சொத்தை முழுவதும் கொடுத்து எடுத்த முயற்சிதான் நோபல் பரிசு என்றால் மிகையல்ல. இந்தப் பரிசு அவர் இறந்த தினமான டிசம்பர் 10 அன்று ஆண்டுதோறும் ஸ்வீடனின் ஸ்டாக்ஹோமிலும், அமைதிக்கான நோபல் பரிசு நார்வேயின் ஓஸ்லோவிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளில் வழங்கப்படுகின்றன.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




# சொல்றாங்க... சொல்றாங்க...



"அமைதிக்கான நோபல் பரிசை டிரம்ப்புக்கு சமர்ப்பிக்கிறேன்!"

**மரியா மச்சாடோ**

(அவர் கேட்டது கிடைக்கலேன்னு தனக்குக் கிடைச்சதை கொடுக்கும் உங்க மனதுக்கு பாராட்டத்தான் வேணும்!)



"நான் ஒரு மகிழ்ச்சியான, சுதந்திரமான உறவில் இருந்தால், பாடல்கள் எழுதும் ஊக்கம் குறைந்துவிடுமோ என்ற பயம் முன்பு இருந்தது."

**டெய்லர் ஸ்விஃப்ட்**

(இப்பவே எவரெஸ்டை தாண்டி நிக்கிறீங்க... முன்னேயே தெரிஞ்சிருந்தா உங்க உயரத்தைக் கணக்கே போடமுடியாது போலிருக்கே!...)



"தமிழக அரசு அதிகாரிகளை நேர்மையற்றவர்கள் என்று சந்தேகிக்கிறதா திமுக?"

**நயினார் நாகேந்திரன்**

(அவங்ககிட்ட போய் என்ன கேள்வி இது? அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்!)



டாஸ்மாக் கடைகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கொடுப்பதில்லை.

**சௌமியா அன்புமணி**

(ஒரு கேள்வி கேட்டாலும், நூறு கேள்விக்கு சமமா சாட்டையடியா கேட்டீங்க அம்மணி!)

# ஆணவப்

### யுக்ரேன் போர் நிறுத்தத்தில் தொடரும் இழுபறி

ரஷ்யா — அமெரிக்கா இடையிலான உறவில், கடந்த வாரம் நிகழ்ந்த சம்பவம் ஏற்கெனவே நடந்ததை அப்படியே நினைவுப்படுத்துவது போல் இருந்தது. அதாவது, ரஷ்யாவுக்கு எதிரான போரில், யுக்ரேனுக்கு டோமஹாக் ஏவுகணைகளை வழங்குவது குறித்த அமெரிக்க அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் ரஷ்ய அதிபர் புதின் மற்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் தொலைபேசியில் உரையாடினர்.


அந்த உரையாடலின் விளைவு — ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் அமெரிக்க — ரஷ்ய சந்திப்புக்கான அறிவிப்பு வெளியானது. இதே போன்ற ஒரு தருணம் கடந்த ஆகஸ்ட் மாதம் நிகழ்ந்தது. ரஷ்யா மீதான கூடுதல் தடைகள் விதிக்கப்படும் என்ற அமெரிக்க அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் புதின் அமெரிக்காவின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காஃப்ஐ சந்தித்தார். அந்த சந்திப்பின் விளைவு — அலாஸ்காவில் நடைபெற்ற அமெரிக்க — ரஷ்ய சந்திப்பு அறிவிக்கப்பட்டது.

அலாஸ்கா சந்திப்பு மிக குறைந்த முன் தயாரிப்புகளுடன் நடைபெற்றது, அதன் விளைவும் மிக குறைவாகவே இருந்தது. ஆனால் இந்த முறை புடாபெஸ்ட் சந்திப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது டிரம்ப் அந்த சந்திப்பை ரத்து செய்துள்ளார்.

டிரம்பின் விரக்தி

“நாம் அடைய வேண்டிய இடத்தை நோக்கி செல்கிறோம் என்று தோன்றவில்லை” என்று செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப் கூறினார். அது மட்டுமல்ல.இதற்கு முன்பு,டிரம்ப் தான் ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் செயல்படுத்தப் போவதாக கூறிய அச்சுறுத்தல்களை அமல்படுத்தவில்லை. ரஷ்ய விவகாரத்தில் கடுமையான போக்கை விட மென்மையான போக்கை கையாண்டார். ஆனால் தற்போது அப்படி இல்லை. ரஷ்யாவின் இரண்டு பெரிய எண்ணெய் நிறுவனங்கள் —ராஸ்ன்ஃபெட் மற்றும் லுகாயில் மீது டிரம்ப் தடைகள் விதித்துள்ளார்.

இந்த நடவடிக்கை ரஷ்ய அதிபர் புதினை போரில் பின்வாங்க வைக்கப் போவதில்லை. எனினும் இது ரஷ்ய — யுக்ரேன் போரை நிறுத்துவதில் ரஷ்யா எந்தவித சமரசமும் செய்ய விரும்பாதது குறித்து டிரம்பின் விரக்தியை காட்டுகிறது. இந்த விதமான கடுமையான போக்கை ரஷ்யர்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்வதில்லை. செய்தியாளர்களிடம் பேசிய புதின், அமெரிக்காவின் இந்த புதிய



# போர்

ஸ்டீவ் ரோசன்பெர்க்

தடைகள், "நட்புறவில்லாத செயல்" என்றும் ரஷ்யா மீது அழுத்தம் கொடுக்கும் முயற்சி என்றும் குறிப்பிட்டார்.

"ஆனால் சுய மரியாதை கொண்ட எந்தவொரு நாடும், எந்தவொரும் மக்களும் அழுத்தத்தின் கீழ் எந்த முடிவையும் எடுப்பதில்லை" என்றார் புதின். ரஷ்ய முன்னாள் அதிபர் திமித்ரி மெத்வதேவ் இன்னும் நேரடியாக கூறினார். "அமெரிக்கா நமது எதிரி. அமெரிக்காவின் பேசிக்கொண்டே இருக்கும் 'சாமாதான தூதர்' தற்போது ரஷ்யா மீதான போருக்கான பாதையில் முழு வீச்சில் இறங்கியுள்ளார். தற்போது எடுத்திருக்கும் முடிவுகள் ரஷ்யாவுக்கு எதிரான போரின் செயலாகும்" என்றும் குறிப்பிட்டார்.

இந்த முறை என்ன மாற்றம் நிகழ்ந்துள்ளது?

முதல் சந்திப்பு போல், அவசர அவசரமாக இரண்டாவது சந்திப்பை நடத்தாமல் இந்த முறை டிரம்ப் சற்று கவனமாக உள்ளார். ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லாவ்ரோவுடன் சந்திப்புக்கான அடித்தளத்தை அமைக்குமாறு வெளியுறவுச் செயலர் மார்கோ ரூபியோவை டிரம்ப் கேட்டுக் கொண்டார். இப்போது ஒரு சந்திப்பு நடைபெற்றால் அது ஒரு திருப்புமுனையை உருவாக்க வாய்ப்பில்லை என்பது விரைவில் தெளிவாகியது. யுக்ரேனில் தற்போதைய போர் எல்லைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளும் டொனால்ட் டிரம்பின் யோசனையை ரஷ்யா கடுமையாக எதிர்க்கிறது.

ரஷ்யா குறைந்தபட்சம் கிழக்கு யுக்ரேனில் உள்ள டான்பாஸ் பிராந்தியத்தை முழுவதுமாக தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ள உறுதியாக உள்ளது. அதன் பெரும்பகுதியை ரஷ்யா கைப்பற்றி ஆக்கிரமித்துள்ளது. ஆனால் யுக்ரேன் அதிபர் ஜெலென்ஸ்கி யுக்ரேனின் கட்டுப்பாட்டில்





உள்ள டான்பாஸின் பகுதிகளை ரஷ்யாவிடம் ஒப்படைக்க மறுக்கிறார்.ரஷ்யா — உக்ரைன் போரை நிறுத்துவதற்கு வல்லரசு நாடுகள் உதவாவிட்டால் ஆபத்தான ஆயுதப் போட்டியை எதிர்கொள்ள வேண்டும் என்று உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி கூறியுள்ளார். நியூயார்க்கில் ஐ.நா. பொதுச்சபையின் 80 ஆவது அமர்வில் பங்கேற்று உரையாற்றி ஸெலென்ஸ்கி, உக்ரைன் மீது ரஷியா தொடங்கிய போரை நிறுத்த உலக வல்லரசு நாடுகள் உதவ வேண்டும் என வலியுறுத்தினார், போர் நிறுத்தப்படவில்லை என்றால் இந்தப் போர் ஒரு ஆபத்தான ஆயுதப் போட்டியை கட்டவிழ்த்துவிட உதவுவதாக எச்சரித்தார்.

உக்ரைனில் பயன்படுத்தப்படும் ட்ரோன்களில் அசுரத்தனமான புதுமைகளை விவரிக்கும் அதே வேளையில், செயற்கை நுண்ணறிவின் வருகை மனித வரலாற்றில் நடந்து வரும் ஆயுதப் போட்டி “மிகவும் அழிவுகரமானது” என்று ஜெலென்ஸ்கி கூறினார். மேலும் ஆயுதங்களில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்த உலகளாவிய விதிகள் தேவை என ஜெலன்ஸ்கி வலியுறுத்தினார்.மேலும், ரஷிய அதிபர் புதின் போரை உக்ரைனுக்கு அப்பாலும் விரிவுபடுத்த முயற்சிப்பதாகவும் குற்றம் சாட்டினார். அணு ஆயுதத்தை சுமந்து செல்லும் எளிய ட்ரோனை முதலில் யார் உருவாக்குவார்கள் என்று யோசிப்பதை விட ரஷியாவிடம் இப்போது போரை நிறுத்த வலியுறுத்துவதே மேலானது என்று 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொதுச் சபையில் கூறினார். மேலும், “மனித வரலாற்றில் மிகவும் அழிவுகரமான ஆயுதப் போட்டியை நாம் இப்போது சந்தித்து வருகிறோம், ஏனெனில் அதில் செயற்கை நுண்ணறிவு வருகை அளப்பறியது,” என்று அவர் கூறினார். ஆனால் உண்மையான பாதுகாப்பு உத்தரவாதங்கள் “நண்பர்களும் ஆயுதங்களும்“ மட்டுமே என்று கூறினார்.”உலகம் அனைத்து அச்சுறுத்தல்களுக்கும் கூட பதிலளிக்க முடியாவிட்டால், சர்வதேச பாதுகாப்பிற்கான வலுவான தளம் இல்லையென்றால், பூமியில் அமைதி இருக்குமா?” “சர்வதேச நிறுவனங்கள் மிகவும் பலவீனமாக இருப்பதால், இந்த பைத்தியக்காரத்தனம் தொடர்கிறது.” நீண்டகால ராணுவ கூட்டணியின் ஒரு பகுதியாக இருந்தாலும் கூட நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் என்று அர்த்தமல்ல,” என்று மேலும் அவர் கூறினார்.

உக்ரைனுக்கு அதன் ராணுவ உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்பதை வலியுறுத்தியவர், சர்வாதிகாரிகள் அணிவகுப்புகளில் காட்டுவதற்காக பெரிய, பெரிய திறன்கள் கொண்ட ஏவுகணைகள் உக்ரைனில் இல்லை, ஆனால் 2,000, 3,000 கிலோமீட்டர் வரை பறக்கக்கூடிய ட்ரோன்கள் எங்களிடம் உள்ளன. “எங்கள் வாழ்க்கை உரிமையைப் பாதுகாக்க அவற்றை உருவாக்குவதைத் தவிர வேறு வழியில்லை.” உக்ரைனின் பாதுகாப்பை உறுதி செய்யும் நேட்டோவின் திறன் குறித்து சந்தேகம் எழுப்பிய ஜெலன்ஸ்கி, ஆனால் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எதிர்பாராத விதமாக ரஷியாவை தோற்கடிக்க முடியும் என்று கூறியதை பாராட்டினார்.ரஷியாவிடம் இழந்த பகுதிகளை உக்ரைனால் திரும்ப மீட்க முடியும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நம்பிக்கை தெரிவித்த ஒரு நாள் கழித்து ஜெலென்ஸ்கின் இவ்வாறு பேசியுள்ளார்.

செவ்வாயன்று டிரம்ப், ரஷியாவுடன் போராடி, அந்த நாட்டிடம் இழந்த பகுதிகளையெல்லாம் மீட்கும் நிலையில்தான் உக்ரைன் இருக்கிறது. ஐரோப்பிய யூனியனின் உதவியுடன் உக்ரைன் இந்த வெற்றிவாகையைச் சூடும். நேரம், பொறுமை, ஐரோப்பிய நாடுகளின், குறிப்பாக நேட்டோவின் ஆதரவு ஆகியவற்றின் உதவியுடன் இந்தப் போர் தொடங்கியதற்கு முன்பிருந்த எல்லைகளை உக்ரைனால் மீண்டும் அடைய முடியும்.

ஒரு இலக்கே இல்லாமல் இந்தப் போரை ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் தொடங்கியுள்ளார். ஓர் உண்மையான ராணுவ சக்தி தலையிட்டால் இந்தப்




போர் சில வாரங்களில் முடிந்துவிடும். தற்போது புதினும், ரஷியாவும் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளனர். ரஷியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்க உக்ரைனுக்கு இதுவே சரியான தருணம்.இந்தப் போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா முழு ஆதரவையும் அளிக்கும். நேட்டோ வழியாக உக்ரைனுக்குத் தேவையான ஆயுதங்களை அமெரிக்கா தொடர்ந்து விநியோகிக்கும் என்று டிரம்ப் தெரிவித்தார்.

மேலும், இது ஒரு அசாதாரண போர்க்கள மாற்றமாக இருக்கும். நேட்டோ வான்வெளியை மீறும் ரஷிய போர் விமானங்களை சுட்டு வீழ்த்தும் யோசனையையும் அவர் ஆதரித்தார். இரு நாடுகளிடையேயான போர் நிறுத்த முயற்சியில் பல்வேறு நாடுகள் ஈடுபட்டு வந்தாலும், நாளுக்குநாள் தீவிரமடைந்து வரும் போரால் உக்ரைன் மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக போரில் சிக்கியுள்ளது

யுக்ரேன் போர் நிறுத்தத்தில் இழுபறி ஏன்?

அலாஸ்காவில் நடைபெற்ற முதல் சந்திப்பு ரஷ்யாவுக்கு ஒரு ராஜ்ஜிய மற்றும் அரசியல் வெற்றியாக இருந்தது. அதிபர் புதினுக்கு வழங்கப்பட்ட சிவப்பு கம்பள வரவேற்பு, ரஷ்யா சர்வதேச அரங்குக்கு திரும்பியதை குறிப்பதாகவும், ரஷ்யாவை ஒதுக்க வேண்டும் என்ற மேற்கத்திய நாடுகளின் முயற்சியியின் தோல்வியாகவும் பார்க்கப்பட்டது. கடந்த வாரம் ரஷ்ய அரசு ஊடகத்தில், ஐரோப்பாவில் ஐரோப்பிய ஒன்றியம் இல்லாமல் டிரம்ப் உடன் நடைபெறும் சந்திப்புக்கு (புடாபெஸ்டில் நடைபெறுவதாக இருந்த சந்திப்பு) ஆதரவான செய்திகள் வெளியாகின. இந்த சந்திப்பு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கிடைத்த அடி என்றும் ரஷ்யாவில் பேசப்பட்டது. அதே நேரம், அந்த சந்திப்பு நடைபெற்றாலும், ரஷ்யா விரும்பும் விளைவை அது ஏற்படுத்தும் என்று பலரும் நம்பவில்லை.சில ரஷ்ய செய்தித்தாள்கள் ரஷ்ய ராணுவம் தொடர்ந்து போரிட வேண்டும் என்று கூறின. “போர் நிறுத்தத்துக்கு ரஷ்யா ஒப்புக் கொள்ள ஒரு காரணமும் இல்லை” என்று ரஷ்ய நாளிதழான மாஸ்கோவ்ஸ்கி காம்ஸோலெட்ஸ் குறிப்பிட்டது. ரஷ்யாவுக்கு என்ன வேண்டும்? இதனால் ரஷ்யா அமைதியை விரும்பவில்லை என்று அர்த்தமில்லை.

ரஷ்யாவுக்கு அமைதி வேண்டும். ஆனால் ரஷ்யாவின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு. தற்போது அந்த நிபந்தனைகள் யுக்ரேனுக்கு ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. அமெரிக்காவுக்கும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை என்று தோன்றுகிறது.அந்த நிபந்தனைகள் எல்லைகள் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல. யுக்ரேன் போருக்கு “ஆணி வேராக” உள்ளவற்றை தீர்க்க வேண்டும் என்று ரஷ்யா விரும்புகிறது. ஆணி வேர் என்று கூறுவதன் மூலம் ரஷ்யா தனது கோரிக்கைகளை விரிவுப்படுத்திக் கொள்ள முடிகிறது. நேட்டோ அமைப்பின் கிழக்கு நாடுகளை உள்ளடக்கும் முயற்சியை நிறுத்தும் கோரிக்கை உட்பட அதில் அடங்கும்.

தனது வளையத்துக்குள் மீண்டும் யுக்ரேனை கட்டாயப்படுத்தி கொண்டு வர வேண்டும் என்ற இலக்கை ரஷ்யா இப்போது கொண்டுள்ளதாக நம்பப்படுகிறது.அழுத்தத்தை அதிகரிக்க டிரம்ப் தயாரா? தயாராகதான் இருப்பார் போலும். ஆனால், மீண்டும் கடந்த முறை நடைபெற்ற நிகழ்வுகளும் விளைவுகளுமே இப்போதும் நடைபெறுவதற்கான வாய்ப்பும் உண்டு.“டிரம்ப் இழுபறி ஆட்டத்தில் மீண்டும் ஒரு முறை ரஷ்யா முன்னிலையில் உள்ளது” என்று புடாபெஸ்ட் சந்திப்பு அறிவிக்கப்பட்ட பிறகு மாஸ்கோவ்ஸ்கி காம்ஸோலெட்ஸ் எழுதியது. ‘‘புடாபெஸ்டில் நடைபெறவுள்ள சந்திப்புக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு, ஐரோப்பாவின் அழைப்புகள் மற்றும் சந்திப்புகளால் டிரம்ப் எதிர்முனையில் இழுக்கப்படுவார். ஆனால் புதின் அவரை மீண்டும் நமது பக்கம் இழுத்துவிடுவார்” என்று குறிப்பிட்டது.



# தமிழே


## சுயமரியாதை இயக்கம் பெண்களின் நிலையை எப்படி மாற்றியது?

பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் துவங்கியதிலிருந்தே பெண்கள் அந்த இயக்கத்தில் முக்கியப் பங்கு வகித்தனர். அதேபோல அந்த இயக்கத்தின் செயல்திட்டங்களிலும் பெண்களின் முன்னேற்றத்திற்கு முக்கியப் பங்கு இருந்தது. பெண்களின் 2,000 ஆண்டுகால ஆற்றாமைக்கு சுயமரியாதை இயக்கம் ஒரு குரலைத் தந்தது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் துவங்கியதிலிருந்து சமூக சீர்திருத்தத்திற்காக ஒவ்வொரு கூட்டத்திலும் சில முக்கியக் கருத்துகளை வலியுறுத்தி வந்தார். அவற்றில் பெண்களின் மேம்பாடு குறித்த சில கருத்துகள் அந்த காலகட்டத்தோடு பொருத்திப் பார்க்கையில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தன. வரலாற்றாசிரியரான சுனில் கில்னானி **Periyar: Sniper of Sacred Cows** என்ற தனது கட்டுரையில், பெரியாரின் பெண்களின் மேம்பாட்டிற்கான செயல்பாடுகள் குறித்துப் பேசும்போது பின்வருமாறு குறிப்பிடுகிறார். “குடும்பத்தில் ஆணே பெரியவன் என போற்றப்பட்ட தேசத்தில், மிக வலுவாக பெண்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர் பெரியார். பெண் விடுதலையைப் பற்றி பேசும்போது ஆண்களிடம் பொதுவாகத் தென்படும், மேலாதிக்க உணர்வின்றி அதைச் செய்தார். தங்களைத் தியாகம் செய்யும் பெண்களை போற்றும் சமஸ்கிருத புராணங்களின் முட்டாள்தனத்தை பெரியார் கேலி செய்தார். பெண்கள் கல்வி கற்பதையும் காதல் திருமணம் செய்வதையும் அந்தத் திருமணம் ஒத்துவரவில்லையென்றால் விவாகரத்து செய்வதையும் பெண்களுக்குச் சொத்துரிமை அளிப்பதையும் பெரியார் ஆதரித்தார்.

இதையெல்லாம்விட பெண்களின் பாலியல் தேர்வையும் கருவுருதல் குறித்த உரிமையையும் அவர் ஆதரித்தார். உரிமைகள் தங்களுக்கு தானாக வழங்கப்படுமென பெண்கள் வெறுமனே காத்திருக்கக்கூடாது என்றார் பெரியார். பழங்கால வீராங்கனைகள், சக்திவாய்ந்த பெண் தெய்வங்கள், குறைந்த மகப்பேறு விகிதம் ஆகியவை ஏற்கனவே இருந்த ஒரு பிராந்தியத்தில் பெரியார் தன் கருத்தை முன்வைத்தார்”. ஈ.வே. ராமசாமி என்ற பெரியாரின் பொது வாழ்க்கையில், பெண்களின் மேம்பாட்டிற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகளின் ஒரு சுருக்கமாக சுனில் கில்னானியின் இந்தக் கருத்தைப் பார்க்கலாம். அதே சமயத்தில் அவரது சுயமரியாதை இயக்கம் பெண்களின் முன்னேற்றம் தொடர்பாக மேற்கொண்ட முயற்சிகளும் அதன் தாக்கமும் ஒரு விரிவான ஆய்வுக்கு உரியவை.

### சுயமரியாதை இயக்கத்தில் பெண்களின் பங்கு






முரளிதரன் காசி விஸ்வநாதன்

படக்குறிப்பு, சுயமரியாதை இயக்கத்தின் துவக்கத்திலிருந்தே பெண்களின் பங்கேற்பும், அவர்களது மேம்பாடு குறித்த அக்கறையும் அந்த இயக்கத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. 1925ஆம் ஆண்டில் பெரியார் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறிய பிறகு சுயமரியாதை, மனிதர்கள் எல்லோரும் சமம், பெண்களின் மேம்பாடு ஆகியவற்றை முன்வைத்து செயல்பட ஆரம்பித்தார். இதுவே அடுத்த சில ஆண்டுகளில் சுயமரியாதை இயக்கமாக உருவெடுத்தது. ஆகவே, சுயமரியாதை இயக்கத்தின் துவக்கத்திலிருந்தே பெண்களின் பங்கேற்பும், அவர்களது மேம்பாடு குறித்த அக்கறையும் அந்த இயக்கத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது.

1929 பிப்ரவரி 17, 18ல் செங்கல்பட்டில் சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாகாண மாநாடு நடத்தப்பட்டது. அந்த மாநாட்டிலேயே நாகம்மையார், மூவலூர் ராமாமிருதத்தம்மாள் உள்ளிட்ட பெண்கள் உரை நிகழ்த்தினர். அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் பெண்ணடிமைத் தனத்தைப் போக்குதல், கலப்புத் திருமணம், விதவைத் திருமணத்திற்கு ஊக்கம் அளித்தல் ஆகியவை இடம்பெற்றன. ஆணுக்கும் பெண்ணுக்கும் சொத்தில் சம உரிமை வேண்டும் என்பது தீர்மானங்களில் ஒன்று. இது தமிழ்நாட்டில் சட்டமாக மேலும் 60 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது என்பதைப் பார்க்கும்போது, அந்த இயக்கத்தின் முன்னோக்கிய பார்வையை புரிந்துகொள்ள முடியும். இரண்டாவது சுயமரியாதை மாநாடு 1930ஆம் ஆண்டில் ஈரோட்டில் நடந்தது. அந்த மாநாட்டில் இளைஞர்கள் மாநாடும் பெண்கள் மாநாடும் தனித்தனியாக நடத்தப்பட்டன. பெண்கள் மாநாட்டை பெண்களே முழுமையாக முன்னின்று நடத்தினர். 16 வயது வரை பெண்களுக்கு கட்டாயக் கல்வி தர வேண்டும், பால்ய விவாகத் தடுப்புச் சட்டத்தைத் தீவிரமாகவும் உடனடியாகவும் அமல்படுத்த வேண்டும், பெண்களைக் கோயிலுக்குப் பொட்டுக் கட்டி விடும் இழிவிற்கு முடிவுகட்ட வேண்டும் என்ற தீர்மானங்கள் அதில் நிறைவேற்றப்பட்டன. இளைஞர்கள் மாநாட்டிலும் பெண்ணுரிமைக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இளைஞர்கள் கணவனை இழந்த பெண்களையும் தேவதாசிப் பெண்களையும் திருமணம் செய்ய முன் வர வேண்டும் என்று அந்த மாநாடு கூறியது.






இதுமட்டுமல்லாமல் பல தருணங்களில் சுயமரியாதை இயக்க மாநாடுகளின் துவக்க உரையை நிகழ்த்தும் பொறுப்பு பெண்களுக்கு அளிக்கப்பட்டது.

உதாரணமாக, 1931ல் விருதுநகரில் நடந்த மூன்றாவது சுயமரியாதை மாநாட்டை இந்திராணி பாலசுப்பிரமணியம் துவக்கி வைத்தார். 1937ல் நடந்த திருநெல்வேலி மாவட்ட மூன்றாவது ஆதிதிராவிடர் மாநாட்டிற்கு மீனாம்பாள் சிவராஜ் தலைமை வகித்தார். 1938ல் மதுரையில் நடந்த சுயமரியாதை மாநாட்டை ராஜம்மாள் துவக்கிவைத்தார். “இந்த நடவடிக்கைகளால் சுயமரியாதை இயக்கத்தின் பெண் தொண்டர்கள் உற்சாகமடைந்து ஆர்வத்துடன் செயல்பட முன்வந்தனர். பேசவே தெரியாத பெண்ணாக இருந்தாலும் சில வார்த்தைகளாவது மாநாட்டு மேடையில் பேச வேண்டும் என்று பெரியார் வலியுறுத்தினார்” என்று குறிப்பிடுகிறார் சென்னை வளர்ச்சி ஆய்வு நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியர் எஸ். ஆனந்தி.

பெரியார் என்ற பட்டம் அளிக்கப்படுவதற்கு முன்பாக சில இடங்களில் அவர் பெரியார் எனக் குறிப்பிடப்பட்டாலும், 1938ல் சென்னையில் நடந்த முற்போக்கு பெண்கள் சங்க மாநாட்டில்தான் பெரியாருக்கு “பெரியார்” என்ற பட்டம் பெண்களால் முறையாக அளிக்கப்பட்டது. இந்த பட்டமே என்றென்றைக்குமாக அவருக்கு நிலைத்தது.இந்தித் திணிப்பு எதிர்ப்பில் சுயமரியாதை இயக்கப் பெண்கள் சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த பெண்கள், மாநாடுகளிலும் பிரசாரப் பணிகளிலும் ஈடுபடுவதோடு மட்டுமல்லாமல் போராட்டங்களிலும் தீவிரமாகப் பங்கெடுத்தனர் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார் எஸ். ஆனந்தி.

1937—ஆம் ஆண்டு இறுதியில் துவங்கி 1940—ஆம் ஆண்டின் துவக்கம்வரை நடந்த இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்களில் பெரும் எண்ணிக்கையிலான சுயமரியாதை இயக்கப் பெண்கள் பங்கேற்றனர். இது தொடர்பான ஊர்வலங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் பெண்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்றனர். போராட்டம் தீவிரமடைந்தபோது, சுயமரியாதை இயக்கப் பெண்கள் கைக்குழந்தைகளோடு கைதாகவும் தயங்கவில்லை. “இந்திப் போரில்சிறைசென்ற பெண்களின் எண்ணிக்கை 73. அவர்களுடன்சிறைசென்ற அவர்களது குழந்தைகளின் எண்ணிக்கை 32” என மா. இளஞ் செழியன் எழுதிய ‘தமிழன் தொடுத்த போர்’ நூல் குறிப்பிடுகிறது.

சுயமரியாதை இயக்கம் தீவிரமாகச் செயல்பட்ட காலகட்டத்தில் இந்திய விடுதலைப் போராட்டமும் உச்சத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. அந்த இயக்கத்திலும் பெண்கள் பங்கேற்றனர். ஆனால், பெண்களின் பங்களிப்பைப் பொறுத்தவரை இரு இயக்கங்களுக்கும் வித்தியாசம் இருந்தது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.“விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் இந்திய சமூகத்தின் முக்கிய அங்கமாக இருந்த ஜாதிக் கட்டுப்பாட்டை மீற வேண்டியதில்லை. ஆனால், சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் ஜாதிக் கட்டுப்பாட்டை மீறி பங்கேற்க வேண்டியிருந்தது. அவர்கள் தாங்கள் எந்த சமூகத்திலிருந்து வந்தோமோ, அதே சமூகத்தின் எதிர்ப்பைத்



தமிழ்நாட்டுப் பெண்கள் விடுதலை மாநாடு — சென்னை 13-11-1938

தாங்கி நிற்க வேண்டியிருந்தது. இதுதான் பிற இயக்கங்களில் பங்கேற்ற பெண்களுக்கும் சுயமரியாதை இயக்கத்தில் பங்கேற்ற பெண்களுக்கும் இருந்த முக்கியமான வித்தியாசம்" என்கிறார் 'திராவிட இயக்க வீராங்கனைகள்' நூலின் ஆசிரியரும் பேராசிரியருமான மு. வளர்மதி. இந்த இரு இயக்கங்களிலும் பங்கேற்ற பெண்களின் பங்களிப்பில் இருந்த மேலும் சில வித்தியாசங்களைச் சுட்டிக்காட்டுகிறார் எஸ். ஆனந்தி.

"இந்திய தேசிய இயக்கத்தைப் பொருத்தவரை, குறிப்பிட்ட தருணங்களில் தான் பெண்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்றார்கள். ஆனால், சுயமரியாதை இயக்கத்தைப் பொருத்தவரை, சுயமரியாதை இயக்க மாநாடுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்பட்டபோது, அங்கெல்லாம் தனியாக பெண்கள் மாநாடுகளும் நடத்தப்பட்டன.""இந்த மாநாடுகளில் பெண்கள் ஆயிரக்கணக்கில் பங்கேற்றனர். விடுதலை இயக்கத்தில் தேவதாசிகள் பங்கேற்றபோது, அதனை ஏற்பதில் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு தயக்கம் இருந்தது. அது குறித்து வெளிப்படையாகவே எழுதினார்கள். ஆனால், சுயமரியாதை இயக்கத்தில் தேவதாசி பெண்கள் பெரிய அளவில் பங்கேற்றனர். பொருளாதார ரீதியாகவும் ஜாதி ரீதியாகவும் எல்லாத் தரப்புப் பெண்களும் சுயமரியாதை இயக்கத்தில் பங்கேற்றனர்." என்று அவர் கூறுகிறார். மேலும், "இந்திய தேசிய இயக்கத்தில் பங்கேற்ற பெண்களோடு ஒப்பிட்டால், அதிலிருந்த பெண்களால் ஓரளவுக்குத்தான் சீர்திருத்தங்களை செய்ய முடிந்தது. பிராமண மேலாதிக்கத்தை, ஆணாதிக்கத்தை அவர்களால் எதிர்க்க முடியவில்லை. இந்து மதத்தில் இருந்த பெண்ணடிமைத் தனத்தைக் கேள்வி கேட்க முடியவில்லை. இங்கே அதைச் செய்ய முடிந்தது" என்கிறார் எஸ். ஆனந்தி.

பெண்களின் சீர்திருத்தம் தொடர்பான கருத்துகளை பெரியார் எங்கிருந்து பெற்றார்?

"அவர் தன் வாழ்பனுபவங்களில் இருந்தே பெற்றார். இப்போது மறுமணத்தை யாரும் தவறாக நினைப்பதில்லை. ஆனால், அந்த காலகட்டத்தில் நிறைய குழந்தை விதவைகள் இருந்தார்கள். அந்தப் பின்னணியில் தான் பெரியார் விதவைகள் மறுமணம் பற்றி பேசினார். அதேபோல, கள்ளுக்கடை மறியலின்போது பெண்களைக் கைது செய்த காவலர்கள் அவர்களிடம் மிக மோசமாக நடந்துகொண்டதைப் பார்த்த பெரியார், காவல்துறையில் பெண்களையும் சேர்க்க வேண்டுமென 1932லேயே எழுதினார். தற்போது காவல்துறையில் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் பெண்கள் பணியாற்ற முக்கியக் காரணம், அப்போது எழுப்பிய குரல்தான்" என்கிறார் மு. வளர்மதி. காவல்துறையில் பெண்களைச் சேர்ப்பது குறித்து தொடர்ந்து பேசியும் எழுதியும் வந்தார் பெரியார். 1934ல் பாலியல் தொழிலில் ஈடுபட்டதாக ஈரோட்டில் பெண் ஒருவருக்கு ஒரு வருட தண்டனை விதிக்கப்பட்டது. அது தொடர்பாக 'புரட்சி' இதழில் எழுதிய பெரியார், "பெண்களின் பல வழக்குகளில் ஆண் போலீசார் சரியாக நடந்துகொள்வதில்லை




என்பதே மெக்ஸிகோ, பிரான்ஸ், சைனா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் துணிந்த முடிவு. குற்றத்திற்கு ஆளான வாலிபப் பெண்களை ஆண் போலீசாரால் தக்கவாறு நடத்த இயலுமா?" எனக் கேள்வி எழுப்பினார். பெரியார் இப்படி எழுதி நாற்பதாண்டுகளுக்குப் பிறகு 1973ல் தமிழ்நாட்டில் முதல்முறையாக பெண்கள் காவல்துறையில் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

சுயமரியாதை இயக்கத் திருமணங்கள்

சுயமரியாதை இயக்கத்தின் முக்கியச் சாதனையாக சுயமரியாதை இயக்கத் திருமணங்களைச் சுட்டிக்காட்டுகிறார் எஸ். ஆனந்தி. "பெரும் எண்ணிக்கையில் கணவரை இழந்தவர்களின் மறுமணங்கள், சாதி கடந்த, மதம் கடந்த திருமணங்கள் சுயமரியாதைத் திருமணங்களாக நடந்தன. 1930—ஆம் ஆண்டிற்குள் 5,000 திருமணங்கள் வரை இப்படி நடந்ததாகச் சொல்லலாம். அது ஒரு மிகப் பெரிய சமூக நிகழ்வாக இருந்தது. மேலும் சுயமரியாதை இயக்கம் தாலி போன்ற மூடப் பழக்க வழக்கங்களைக் கடுமையாக எதிர்த்தது. பெண்களுக்கு கல்யாண விடுதலை (விவாகரத்து) வேண்டும் என்ற தீர்மானம் முதலில் சுயமரியாதை இயக்க மாநாட்டில்தான் நிறைவேற்றப்பட்டது." என்று கூறுகிறார்.

தொடர்ந்து பேசிய அவர், "இதே போன்ற தீர்மானம் அகில இந்திய பெண்கள் காங்கிரஸில் 1931ல்தான் நிறைவேற்றப்பட்டது. அந்த வகையில் பார்த்தால், சுயமரியாதை இயக்கம் வரலாற்றைத் திருப்பிப்போட்ட இயக்கம். ஆர்ய சமாஜம் ஒரு சீர்திருத்த இயக்கமாக உருவானது என்றாலும் அவர்களுடைய திருமணத்தில் அக்னி சாட்சி என்பதை முன்வைத்தார்கள். அதனால் தான் ஆர்ய சமாஜ திருமணங்கள் இந்து திருமணச் சட்டத்திற்குள் ஏற்கப்பட்டன. ஆனால், சுயமரியாதைத் திருமணம், இந்து மதத்தை மறுதலித்தது, கேள்வி எழுப்பியது. அந்தக் காலகட்டத்தில் இந்தியாவில் வைதீக மத அடிப்படையில் அமைந்த ஆண்களின் மேலாதிக்கத்தை எதிர்த்த ஒரே இயக்கம் சுயமரியாதை இயக்கம் தான்" என்கிறார் எஸ். ஆனந்தி. வேறு சில தனித்துவமான அம்சங்களும் சுயமரியாதை இயக்கத்திற்கு இருந்தன என்கிறார்






அவர். "இந்தியாவில் பெண்களுக்கு என உருவான பல சமூக இயக்கங்களால் நீடிக்க முடியவில்லை. ஆல் இந்தியா விமன்ஸ் கான்ஃபரன்ஸ் போன்றவை என்ன ஆயின? ஆனால், சுயமரியாதை இயக்கம் இன்றுள்ள பல பிரச்னைகளுக்கு தீர்வுகளைச் சொல்கிறது. அந்த இயக்கத்தைப் போல வேறு யாருமே ஆண்களைப் பார்த்துக் கேள்வியெழுப்பவில்லை. பெரியார் மட்டுமே ஆண்களைப் பார்த்து சங்கடமான கேள்விகளை எழுப்பி வந்தார். பலரும் பெண்களின் நலன் குறித்துப் பேசினார்கள். ஆனால், பெரியார் பெண்களின் அடிப்படையான பிரச்னைகளையும் அதற்கான தீர்வுகளையும் முன்வைத்தார். அந்த வகையில் திராவிட இயக்கப் பெண்ணியம் என்பது தனித்துவம் வாய்ந்தது. அதற்கு இப்போதும் பல்வேறு வடிவங்களில் முக்கியத்துவம் இருக்கிறது" என்கிறார் எஸ். ஆனந்தி.

சுயமரியாதை இயக்கம் தோன்றி நூறாண்டுகள் கடந்துவிட்டன. பெண்கள் தொடர்பான விஷயங்களில் தமிழ்நாட்டில் அந்த இயக்கத்தின் தாக்கம் இன்னமும் இருக்கிறதா? பெண்களின் மீதான ஒடுக்குமுறை ஆங்காங்கே தொடரத்தானே செய்கிறது? "தமிழ்நாட்டில் ஏதாவது மோசமாக நடக்கும்போது இது 'பெரியார் மண்ணா?' எனக் கேட்கிறார்கள். ஆனால், 2,000 வருட பிற்போக்குத் தனத்திலிருந்து இந்த ஒரு நூறாண்டுகளில் எவ்வளவு மாறியிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். சுயமரியாதை இயக்கம் வந்தபோதுதான் பெண்களின் 2,000 ஆண்டு கால ஆற்றாமை வெளியில் வந்தது. இப்போது எவ்வளவு பெண்கள் படிக்கிறார்கள், மறுமணம் செய்கிறார்கள், தாலி போன்ற மூடத்தனத்திற்கு எதிராகப் பேசுகிறார்கள்? பெரியார் எதிர்பார்த்த மாற்றம் என்பது இதுதான். பெரியார் பாதையைக் காட்டியிருக்கிறார். எது சரியானது எனச் சொல்லியிருக்கிறார். அதைப் பின்பற்றுவது சமூகத்தின் கையில் இருக்கிறது. வட இந்தியாவில் இருக்கும் பெண்களோடு தமிழ்நாட்டுப் பெண்களின் நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால் இது புரியும்" என்கிறார் மு. வளர்மதி.

இதே போன்ற கருத்தையே சுனில் கில்னானியும் முன்வைக்கிறார். "இவரது (பெரியார்) கருத்துகள் 20ஆம் நூற்றாண்டில் வட இந்திய மாநிலங்களுக்கும் தென்னிந்திய மாநிலங்களுக்கும் இடையிலான பிளவை இன்னும் ஆழமாக்கின. முரட்டுத்தனமான இந்த சிலை உடைப்பாளரை, கடுமையான நாவன்மை உடையவரை பற்றி நான் மேலும் மேலும் வாசிக்கும்போது என் மனதில் ஒரு கேள்வி எழுகிறது: இந்தியாவின் பிற பகுதிகளிலும் இதுபோன்ற ஆளுமைகள் இருந்திருந்தால், இந்தியப் பெண்கள் குடியரசு இன்னும் சிறப்பாக இருந்திருக்குமல்லவா?

# உடைந்ததா

## "ஹீரோ மெட்டீரியல்" ஒரு கதாநாயகன் இப்படி இருக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு

'யார் ஹீரோ?'— திரையரங்கமோ அல்லது ஓடிடி—யோ, ஒரு திரைப்படத்தை பார்க்கலாமா வேண்டாமா என்பதை முடிவு செய்வதில் இந்தக் கேள்விக்கான பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. கதை— திரைக்கதை போன்ற பிற அம்சங்கள் சிறப்பாக இருந்து பெரும் வெற்றி பெற்ற திரைப்படங்கள் ஏராளம் என்றாலும் கூட, 'ஹீரோ' தான் ஒரு திரைப்படத்தின் அடையாளம் என்ற பொது பிம்பத்தை சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்வு எடுத்துக்காட்டியது.




கீர்த்தீஸ்வரன் இயக்கத்தில் இயக்குநரும் நடிகருமான பிரதீப் ரங்கநாதன் மற்றும் மமிதா பைஜு நடித்திருக்கும் 'ட்யூட்' திரைப்படம் தீபாவளியை ஒட்டி அக்டோபர் 17 வெளியாகி உள்ளது. இந்தப் படத்தின் தெலுங்கு பதிப்பிற்கான விளம்பர நிகழ்ச்சி சில நாட்களுக்கு முன் ஹைதராபாத்தில் நடைபெற்றபோது, பத்திரிகையாளர் ஒருவர் பிரதீப்பிடம், "நீங்கள் 'ஹீரோ மெட்டீரியல் இல்லை'. ஆனால், இரண்டு வெற்றிப் படங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். அரிதாக, இத்தனை ரசிகர்களும் இருக்கிறார்கள். இது அதிர்ஷ்டமா இல்லை கடின உழைப்பா?" எனக் கேட்டார்.

அப்போது உடனிருந்த நடிகர் சரத்குமார் அப்பத்திரிகையாளரைப் பார்த்து, "நான் இந்தத் துறையில் 170 திரைப்படங்களில் நடித்திருக்கிறேன். யார் 'ஹீரோ மெட்டீரியல்' என்பதை நீங்கள் சொல்ல முடியாது. 'ஹீரோவாக' இருப்பதற்கு எந்த விதிமுறையும் இல்லை" என்றார். இது குறித்து பின்னர் ஒரு நேர்காணலில் பதிலளித்த பிரதீப் ரங்கநாதன், "ஒல்லியாக, கருப்பாக இருக்கிறேன் போன்ற உருவக்கேலிகளை சிறு வயதிலிருந்தே கேட்டுள்ளேன். அவை பழகிவிட்டன. 'லவ் டுடே' திரைப்பட நிகழ்வுகளிலும் இதை எதிர்கொண்டேன்.

# பிம்பம் ?


**சிராஜ்**

மக்கள் என்னை அவர்களில் ஒருவராகப் பார்ப்பதால் ஹீரோவாக ஏற்றுக்கொண்டார்கள் என நினைக்கிறேன்” எனக் கூறியிருந்தார்.

இதற்கு முன் இதேபோன்ற விமர்சனங்களை எதிர்கொண்ட தமிழ் நடிகர்கள் யார் யார்? உண்மையில் ஒரு திரைப்படத்திற்கு ‘ஹீரோ மெட்டீரியல்’ அல்லது ‘கதாநாயக பிம்பம்‘ தேவையா, பிற இந்திய திரைப்படத் துறைகளில் இதை எப்படிப் பார்க்கிறார்கள்?“தமிழ் சினிமாவின் முதல் சூப்பர் ஸ்டார் என விவரிக்கப்படும் தியாகராஜ பாகவதராக இருக்கட்டும் அல்லது பிரபல நடிகர் பியூ சின்னப்பாவாக இருக்கட்டும், இருவருமே அவர்களது பாடும் திறனால் பிரபலமானவர்கள். அப்போது இந்த ‘ஹீரோ மெட்டீரியல்’ என்ற விஷயமே இல்லை” என்கிறார் எழுத்தாளர், தமிழ் திரைப்பட வரலாற்றாய்வாளர் தியடோர் பாஸ்கர்.




பாம்பின் கண்— தமிழ் சினிமா ஓர் அறிமுகம், திரையில் விரியும் சமூகம், சித்திரம் பேசுதடி போன்ற தமிழ் சினிமா குறித்த நூல்களை இவர் எழுதியுள்ளார்.“இந்தி சினிமா மற்றும் ஹாலிவுட் திரைப்படத்துறையில் தொடக்கம் முதலே ஒரு ஹீரோ என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற பிம்பம் இருந்தது. காலப்போக்கில் அது தமிழ் சினிமாவிலும் பரவியது, குறிப்பாக எம்ஜிஆர் காலத்தில். ஹீரோ என்பவர் அழகாக, கட்டுமஸ்தாக இருக்க வேண்டும், படத்தின் இறுதிவரை மரணிக்கவே கூடாது, பெண்கள் பின்னால் போகக்கூடாது, பெண்கள் தான் அவர் பின்னால் வர வேண்டும் என எழுதப்படாத விதிகள்.




இன்றுவரை எம்ஜிஆரை நினைவுகூறுபவர்கள் அவரது 'அழகைப்' பற்றி தான் பெரும்பாலும் பேசுகிறார்கள்" என்கிறார் தியடோர் பாஸ்கர்.

இதே கருத்தை முன்வைக்கும் எழுத்தாளர் ஜா. தீபா, "எம்ஜிஆருக்குப் பிறகு 'ஒரு ஹீரோ' என்றாலே அழகாக, குறிப்பாக 'வெள்ளை தோலுடன்' இருக்க வேண்டுமென்ற பிம்பம் தமிழ் சினிமாவில் உருவானது. சிவாஜி சில திரைப்படங்களில் அதை உடைத்து வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடித்தார். அதன் பின் ரஜினியின் வருகை ஒரு மாற்றத்திற்கு வழிவகுத்தது." என்கிறார்.

சிவாஜியின் 'ஹீரோ மெட்டீரியல்' அல்லாத வித்தியாசமான முயற்சிகளுக்கு சிறந்த உதாரணம், 1954இல் வெளியான 'அந்த நாள்' எனும் திரைப்படம். அதில் படம் தொடங்கி சில நிமிடங்களில் சிவாஜியின் கதாபாத்திரம் (ராஜன்) இறந்துவிடும். யார் அந்தக் கொலையைச் செய்தார்கள் என்பதே திரைப்படத்தின் கதை. இருப்பினும் சிவாஜியைப் போல அல்லாமல், ரஜினி தொடக்கத்தில் சில திரைப்படங்களில் இரண்டாம் கதாநாயகன், வில்லனாக நடித்து கவனம் ஈர்த்த பின்பே 'ஹீரோவாக' வெற்றி பெற்றதைக் குறிப்பிடும் ஜா. தீபா, "உருவத்தைத் தாண்டி தனக்கான திறமையை சில 'கதாபாத்திரங்களில்' நிரூபித்த பின் தான் ரஜினியால் அந்தக் கேலிகளை கடந்துவர முடிந்தது." என்கிறார்.

ஆனால், தமிழில் ஒரு கதாநாயகனாக பிரபலமான பின்பும் கூட, 1980களில் இந்தியில் அறிமுகமானபோது, உருவக்கேலிகளை எதிர்கொண்டதாக ரஜினிகாந்த் ஒரு நிகழ்வில் கூறியிருப்பார்."கங்வா 1984—ல் வெளியான இந்தித் திரைப்படம், தமிழில் வெளியான மலையூர் மம்பட்டியான் (1983) படத்தின் மறுஆக்கம். திரைப்படத்தின் படப்பிடிப்பு தளத்தில் என்னை யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள். 'கருப்பு ஹீரோ' என காதுபடவே பேசுவார்கள். 'அந்தா கானுன்', 'கங்வா' திரைப்படங்கள் வெற்றி பெற்ற பிறகே, என்னை பாலிவுட்டில் 'ஹீரோவாக' மதிக்கத் தொடங்கினார்கள்" என்று ரஜினி பேசியிருப்பார்.

ரஜினி பாலிவுட்டில் எதிர்கொண்ட ஒன்றை தான், பிரதீப் தெலுங்கு சினிமாவில் எதிர்கொள்கிறார் எனக் கூறும் எழுத்தாளர் தியடோர் பாஸ்கர், "'அழகாக இல்லை' என்ற காரணத்திற்காக சினிமா ரசிகர்கள் எந்த நடிகரையும் ஒதுக்கியதில்லை. 'ஹீரோ மெட்டீரியல்' என்ற ஒன்று உருவாக சினிமா துறையினரே காரணம். குறிப்பாக 'க்ளோஸ்—அப் ஷாட்களில்' ஹீரோ 'சிவப்பாக, அழகாக' இருந்தால் தான் மக்கள் ரசிப்பார்கள் என்ற பிம்பத்தைக் கொண்டு வந்தார்கள்." என்கிறார்.ஹைதராபாத்தில் 'டியூட்' பட நிகழ்வில் நடந்தது குறித்து பேசிய ஆந்திராவைச் சேர்ந்த மூத்தப் பத்திரிக்கையாளர் மற்றும் திரைப்பட விமர்சகர் ஜி.ஆர். மகரிஷி, "அந்த நிகழ்வில் எழுப்பப்பட்ட கேள்வி நிச்சயம் கண்டனத்திற்குரியது. தெலுங்கு மக்கள் மட்டுமல்ல எந்த மொழி மக்களும், உருவத்தை வைத்து ஒரு நடிகரை ஒதுக்க மாட்டார்கள். திரைப்படம் நன்றாக இருந்தால் மக்கள் ரசிப்பார்கள்" என்று கூறினார்.

பாலிவுட்டில் என்ன நிலை?

ராஞ்சனா (2013) என்ற பாலிவுட் படத்தில், 'குந்தன் சங்கர்' என்ற கதாபாத்திரத்தில் நாயகனாக




நடித்திருப்பார் தனுஷ். தான் எதிர்கொண்ட உருவக்கேலிகள் குறித்து பல நேர்காணல்களில் பகிர்ந்துள்ளார்."நடிக்க வந்த புதிதில், முகத்திற்கு நேராகவே 'இவனெல்லாம் ஹீரோவா?' எனப் பேசுவார்கள். ஒருமுறை ஆந்திராவின் விசாகப்பட்டினத்தில் படப்பிடிப்பில் இருந்தபோது, சுற்றியிருந்தவர்கள் பேசியதைக் கேட்டுவிட்டு, என் காருக்குள் சென்று சிறிது நேரம் அழுதேன். இன்றும் கூட உருவக்கேலிகள் என்னை துரத்துகின்றன" என்று ஒருமுறை தனுஷ் பேசியிருந்தார்.

2021இல் 'லிட்டில் திங்ஸ்' என்ற இந்தி மொழி இணையத் தொடரில், 'நீ என்றாவது உன் முகத்தைப் பார்த்திருக்கிறாயா? தனுஷ் போல இருக்கிறாய்' என ஒரு கதாபாத்திரம் தனது நண்பனைப் பார்த்து கேலி செய்யும். இந்தக் காட்சிக்கு பலரும் சமூக ஊடகங்களில் கண்டனம் தெரிவித்திருந்தனர். "பாலிவுட்டில் ஒரு ஹீரோ 'வெள்ளை தோலுடன்', கட்டுமஸ்தாக இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது என்பது உண்மைதான். ஆனால், மக்கள் அப்படி எதிர்பார்க்கிறார்கள் என சொல்லிவிட முடியாது. திரைத்துறையினர் தான் அவ்வாறு



காட்சிப்படுத்துகிறார்கள்” என்கிறார் டெல்லியைச் சேர்ந்த பத்திரிக்கையாளர் சத்யம் சிங். “தனுஷ் பாலிவுட்டில் பிரபலமான நடிகர், ஆனால்




அவர் நடித்த பெரும்பாலான பாலிவுட் திரைப்படங்களில் அவர் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர் என காட்டியுள்ளார்கள். அதேபோல, ரஜினிக்கும் லுங்கிக்கும் என்ன சம்மந்தம், ஆனால் ‘லுங்கி டான்ஸ்’ என்று ரஜினிக்கு சமர்ப்பணம் என்ற பெயரில் ஒரு பாடல் ஷாருக்கான் நடித்த ‘சென்னை எக்ஸ்பிரஸ்’ படத்தில் உள்ளது. மேலும், அதில் தமிழ் பெண்ணாக நடித்த தீபிகாவின் உறவினர்களாக வரும் கதாபாத்திர சித்தரிப்புகளைப் பார்த்தால், நான் சொல்வது புரியும். எனவே இது நிறம், உருவம் சார்ந்தது மட்டுமல்ல. இந்த விஷயத்தில் பாலிவுட் செல்ல வேண்டிய தூரம் அதிகம்.” என்கிறார் சத்யம் சிங்.




மலையாள சினிமாவில் என்ன நிலை?

மலையாளத்தில் மட்டுமல்லாது பிற மொழிகளிலும் பிரபலமாக இருக்கும் ஃபஹத் பாசில், சௌபின் ஷாஹிர் போன்ற நடிகர்கள் ‘ஹீரோ மெட்டீரியல்’ என்று கூறப்படும் பிம்பத்தை உடைத்தவர்களே.


“பரத் கோபி, திலகன், முரளி, கொட்டாரக்கரா ஸ்ரீதரன் நாயர், கலாபவன் மணி, சூரஜ் வெஞ்சரமூடு என மலையாளத்தில் பல முன்னணி நடிகர்கள் ‘ஹீரோ மெட்டீரியல்’ என்ற கட்டுப்பாட்டிற்குள் அடங்காதவர்கள். முக்கியமாக கலாபவன் மணி பிற மொழிகளில் வில்லனாக பிரபலமடைந்தாலும், மலையாளத்தில் அவர் ‘ஹீரோவாக’ பல வெற்றிப் படங்களில் நடித்திருக்கிறார்” என்கிறார் கேரளாவின் அடூரைச் சேர்ந்த துணை இயக்குநர் மற்றும் துணை நடிகர் தாரிக் கலாம்.

தமிழில் விக்ரம் நடிப்பில் வெளியாகி ரசிகர்கள் மற்றும் விமர்சகர்களால் பாராட்டப்பட்ட காசி (2001), மலையாளத்தில் வெளியாகி, பெரும் வெற்றி பெற்ற ‘வசந்தியும் லட்சுமியும் பின்னே ஞானும்‘ (1999) என்ற திரைப்படத்தின் ரீமேக். மலையாளத்தில் கதாநாயகனாக நடித்தவர், கலாபவன் மணி.

“நிச்சயமாக இந்த ‘ஹீரோ மெட்டீரியல்’ என்ற பிம்பம் மொத்தமாக உடைய வேண்டும். ஒரு நாயகன் என்பவன் ‘அசகாய சூரன்’ என்று திரைப்படங்களில் காட்டுவதால் தான், அதை நம்பி, அவர்களை கண்மூடித்தனமாக பின்பற்றும் ரசிகர்களும், ரசிகர் மன்றங்களும் உருவாகின்றன. நடிகர்களை அந்தந்த கதாபாத்திரங்களாக மட்டுமே பார்க்கத் தொடங்கினால், அனைத்தும் மாறும்“ என்று கூறுகிறார் தியடோர் பாஸ்கர்.


SHREE 420
Mere Humsafar
Jaaneman
Johny Mera Naam
ZIDDI
GUDDI
DIL TERA DEWANA
tinku
Johny Mera Naam
KHUBSOORAT
BE-SHARAM
GEET GAATA CHAL
HARE RAMA
JEEVAN SAATHI
SHAADI KE BAAD
MILAN
Sanam


pk
BOL BACHCHAN
KESARIYA
GOLMAAL
AIRLIFT
tAAre zameeN Par
Devdas
Lage Raho MUNNA BHAI
Aashiqui 2
KALANK
DOSTANA


Half Ticket
ANARI
Shree 420
MOTHER INDIA
HARE RAMA HARE KRISHNA
SHOLAY
Anand
SILSILA



சரித்திரத் தொடர்

# சேரமான் கனவு

## பாகம் - 2 அத்தியாயம் 10

### 10 பெரியவர் சொன்ன அனுபவப் பாடம்!

**கொற்றவன்**

பொன்னந்திப் பொழுது...

ஆழியின் ஒருபுறம் ஆதவன் மறையும் காட்சியும், வானில் பால் நிறத்தில் தலைக்காட்டத் தொடங்கிய வெள்ளி நிலவுக் காட்சியுமாய் கடற்பரப்பு, நிகழும் அந்த அதிசயத்தைப் பகர்ந்தது.

பொற்துகள்களைப் தூவினாற்போலத் தெரிந்தது வெகுதூரத்தில் முசிறித் துறைமுகம்...

கடலரசியின் மேல்தளத்தில் நின்றபடி அந்தக் காட்சியினைப் பார்த்தவாறு நின்றிருக்கும் பெரியவர் முதுகண்ணனார் அருகே பெரிதும் சிந்தனை வயப்பட்டவனாக நின்றிருந்தான் வளவத்திரையன்.

“இன்னும் நான்கைந்து நாழிகைக்குள் நாம் துறைமுகத்தை அடைந்து விடுவோம் திரையா!” என்றார் முதுகண்ணனார்.

அவர் கூறியது காதில் விழுந்தாலும், அவனிடத்தில் இருந்து பதிலேதும் இல்லாததால், திரும்பி அவன் முகம் நோக்கினார்.

“திரையா, என்ன ஆழ்ந்த யோசனை?” என ஆதரவாக அவன் தோள்மீது தன் வலககரத்தை வைத்தார்.

அவரை நோக்கி முகம் திருப்பிய வளவத்திரையன், “ஒன்றுமில்லை ஐயா, கடலரசியின் கிரேக்கப் பயணம் ஓராண்டு கடந்து விட்டது. இந்த ஓராண்டில் நம் சோழ, சேர மண்டலத்தில் என்னவெல்லாம் மாற்றம் நிகழ்ந்திருக்குமோ என யோசித்தேன்.” என்றவாறே தாடையைத் தடவிக் கொண்டு கூறியவனின் கவலை படிந்த மனநிலையைப் படித்திருந்தார் முதுகண்ணனார்.

“திரையா, நான் ஒன்று கூறுகிறேன். அதை எப்போதும் மனத்தில் இருத்திக் கொள்.” என்றவர், அன்போடு அவன் தோள் தட்டிக் கூறினார்.

“நான் உன்னை இளம்பிராயத்திலிருந்து அறிவேன். எனக்கென்று குடும்பம் ஏதும் இல்லை. கடலோடுவதிலேயே என் காலம் கழிந்து விட்டது. உன் பாட்டனாரும் நானும் மிக நெருங்கிய நட்பு கொண்டவர்கள் என்ற வகையில் நீயும் எனக்குப் பேரன் போலத்தான். போல என்ன? பேரனேதான்!” எனப் பெரியவர் கூறும்போது, இளம்பிராயத்தில் தன்னை அவர் தோள்மீது வைத்துக் கொண்டு சோழநாட்டின் கவிரிப்பூம்பட்டினக் கடற்கரையில் நடந்து மகிழ்ந்ததும், தன் பாட்டனாருடன் அவரும் தன்னைக் கப்பலுக்கு அழைத்துச் சென்று சுற்றிக் காண்பித்ததுமான பழைய நினைவுகள் வளவத்திரையனின் நெஞ்சில் காட்சிகளாய் ஓடியது.

“என்னைப் போலவே நீயும் கடலோடுவதில்



சிறந்தவனாக, ஏன் என்னைவிடவும் மிகச் சிறந்தவனாக மாறிவிட்டாய். இக்கப்பலின் தலைவனாக உன்னை நியமிக்கப் பேரரசரிடம் வேண்டுகோள் வைத்ததன் மூலம், நீதான் எனக்கு வாரிசு என்பதையும் அனைவர்க்கும் அறிவித்து விட்டேன்.” என்ற பெரியவர் சில நொடிகள் மௌனம் காத்தார்.

பெரியவர் ஏன் இப்போது இவர் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கிறார் என்ற சிந்தனை ஓட, அவர் கூறுவதைச் செவிமடுத்தபடி இருந்தான் வளவத் திரையன்.

“உன் மனநிலை எனக்குப் புரிகிறது திரையா.” என அவன் விழிகளை ஆராய்ந்தவரின் மனநிலையைத்தான் இன்னதென்று விளங்கிக் கொள்ள இயலாமல் நோக்கினான் வளவத்திரையன்.

“உன் நிலையில் நான் இருந்தாலும் அதைத்தான் செய்திருப்பேன்.”

“ஐயா… தாங்கள் எதைப் பற்றி…” என்றவனின் தடுமாற்றத்தை நீடிக்க விடாமல், குறுக்கிட்டார் பெரியவர்.

“எதைப் பற்றிப் பேசுகிறேன் எனத்தானே கேட்கிறாய்? நீ இதுவரை என்னிடம் மறைத்ததைப் பற்றிப் பேசுகிறேன்”

“தங்களிடம் நான் எதை மறைத்தேன்?”

“தாலியாவையும் உன்னையும் பற்றி… இளவரசரையும் தியோதாரவையும் பற்றி…”

முதுகண்ணனார் அவ்வாறு கூறியதும் பெரிதும் திடுக்கிடுப் போனான் வளவத்திரையன். எந்நேரமும் கப்பலை விட்டு இறங்காமல், கடலரசியில் மட்டுமே இருந்த இவருக்கு எப்படி எல்லாமும் தெரிந்தது? யார் தெரிவித்திருப்பார்கள்? என்ற சிந்தனை ஓட, “ஐயா… இதை… எல்லாம்…” எனக் குழறினான்.

“யார் தெரிவித்தார்கள்? எப்படித் தெரிந்தது? என்றெல்லாம் ஆராய்ச்சி வேண்டாம் திரையா. இந்தக் கப்பலில் எது நடந்தாலும் எனக்குத் தெரியும் என்பதை நீ மட்டும் தெரிந்துக் கொண்டால் போதும். இப்போது எனது அறையில்தான் தாலியா இருக்கிறாள்…” என்றவரைக் கண்டு மேலும் திடுக்கிட்டான்.

“என்ன? தாலியாவா? அவள்தான் உங்களுக்கு அனைத்தும் தெரிவித்தாளா?” என்றவனின் வார்த்தைகளில் சற்றே உக்கிரம் தொனித்தது.

“நீயாக ஏதாவது கற்பிதம் செய்து கொள்ளாதே! அவள் ஒன்றும் என்னிடம் சொல்லவில்லை. நான் அவளிடம், பவழத்தீவில் நடந்ததைக் கூறியதைக் கேட்டதும் அவளுமே அதையெல்லாம் நான்

எப்படித் தெரிந்துக் கொண்டேன் என்றுதான் அதிர்ச்சி அடைந்தாள்.பவழத்தீவின் மணற்த்திட்டில் நீங்கள் இருவரும் இருந்தது மட்டுமல்ல, தாலியா உன்மீது கொண்ட காதலையும், தியோதாரா இளவரசர் மீது கொண்ட காதலையும் நான் நன்கறிவேன் திரையா!" என்றவர், அவன் மீதான பார்வையை விலக்கி கடற்பரப்பில் பதித்தார்.

பெரியவரின் பேச்சில் வாயடைத்துப் போய் நின்றான் வளவத்திரையன். இந்தக் கப்பலில் எது நடந்தாலும் இவர் கவனத்தில் வராமல் போகாது என்ற உண்மை அவனுக்குப் புரியத் தொடங்கியது. இருக்க முடியுமா?" என்றவரின் புன்னகை அவரது அடர்ந்த வெண்தாடியையும் மீறிப் பெரிதாய் வெளிப்பட்டது.

வளவத்திரையனுக்கு நன்றாகப் புரிந்து விட்டது. இந்தக் கப்பலை மட்டும் அவர் அங்குலம் அங்குலமாக அறிந்திருக்கவில்லை. இங்கு நடப்பது யாவுமே இவரது கண்காணிப்பில்தான் இருக்கிறது என்பதை உறுதிபட உணர்ந்து கொண்டவன் பிரமிப்பில் ஆழ்ந்தான். அது அவன் சிந்தனையில் ஓடுவதைக் கண்ட பெரியவர் கூறினார்.



முதுகண்ணனார் தன்னிடம் பேச வேண்டுமென்று தனியே ஏன் அழைத்து வந்தார் என்ற காரணத்தை விளங்கிக் கொண்டவன்,இன்னும் என்னவெல்லாம் பேசப் போகிறார்? என்பதையும் அறிய வேண்டும் என்பதால் மௌனமாகவே நின்றான்.

"திரையா, நீயும் கயல்விழியும் ஒருவரை ஒருவர் விரும்புவதையும், அவள் உனக்கு நம் சோழ இலச்சினைப் பொறித்த கணையாழியைப் பரிசளித்ததையும் நானறிவேன்." என்ற பெரியவர் வார்த்தைகளைக் கேட்டு மலைப்பின் உச்சிக்கே போனான் வளவத்திரையன்.

"ஐயா, அதெப்படி..."

"அதுவும் இதே கடலரசியில் வைத்து நடந்ததுதானே திரையா. பிறகு நானறியாமல்

"நான்தான் சொன்னேனே, நீ வீண் ஆராய்ச்சியில் காலம் தாழ்த்தாமல், தாலியாவைப் போய்ப் பார். அதற்கு முன், நான் இப்போது கூறுவதை உனது வாழ்வின் இறுதி வரை மறக்காதே!" என்றவரை மிகக் கவனமாய் கூர்ந்தான் வளவத்திரையன்.

"வாழ்க்கையில் ஆயிரம் நடக்கும். ஆனால் கள்ளமில்லா அன்பும் நல்லவிதமான பண்பும்தான் தலையாயானது. நம்மீது அன்பு கொண்டோரை இழப்பது சரியாகாது. தாலியாவின் பேரழகும் திறமையும்தான் நீ அறிவாய். கிரேக்கத்தில் அவளுமே அரசகுலப் பெண்தான் என்பதை நான் அறிந்துக் கொண்டேன். எனவே அவளை மணக்க கிரேக்கத்திலேயே பலர் இருப்பினும் கூட, நீ கயல்விழியை விரும்புகிறாய் என்பது தெரிந்தும் கூட, அவள் உன்மீது கொண்ட மாசற்ற அன்பால், உன்னைத் தன் மனத்திலிருந்து அகற்ற



முடியாமல் தவிக்கிறாள். நீ இல்லாவிட்டால், அவள் உயிரைவிடவும் சித்தமாய் இருக்கிறாள் என்ற நிலைக்கு வந்து விட்டவளை நீ கைவிட நான் சம்மதிக்க மாட்டேன். அதேசமயம் உன்னை நம்பிக் காத்திருக்கும் கயல்விழியிடம் நடந்த எதையும் நீ மறைக்காமல் கூறு. ஒருவேளை அவள் உன்னைத் துறக்கவும் நினைக்கலாம். ஆனால் உண்மையான அன்பு எத்தகையத் தியாகத்துக்கும் சித்தமாய் இருக்கும் என்பதை மட்டும் ஒருக்காலும் மறவாதே! நான் உனக்குச் சொல்ல வருவது ஒன்றுதான்!" என்றவர் சில நொடிகள் அவன் கண்களையே பார்த்தபடி இருந்தார்.

இப்போதைய தன் அறிவையும் மனநிலையையும் விடவும் பெரியவரின் அனுபவப் பாடம் மிக உயர்ந்ததாகவே இருக்கும் என்பதை வளவத்திரையனின் உள்ளுணர்வு அக்கணத்தில் கோடிட்டுக் காட்டியது.

"நம்மால் மாற்ற முடிந்த எதையும் மாற்ற முனையலாம். ஆனால் நமக்கும் மேலே இருக்கும் சக்தி நிர்ணயம் செய்வதை நம்மால் மாற்ற முடியாது என்பதை நீ உணர வேண்டும். ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். ஒருவேளை அது மாறவேண்டும் என நீ நினைத்தால், அதற்கான 'காலம் கனியட்டும்' என்று காத்திருத்தலுடன், வாழ்வில் அந்த மாற்றத்தை நோக்கிய பொறுமையுடன் பயணிக்கக் கற்றுக் கொள். அதில்தான் வாழ்வின் உன்னதம் ஒளிந்திருக்கிறது. புரிந்ததா?" என நிறுத்தினார் முதுகண்ணனார்.

உண்மையில் பெரியவரின் வார்த்தைகள் மிகத் தெளிவாக இருந்தாலும், இப்போது எதற்காக இதைச் சொல்கிறார்? இதன் மூலம், தான் செய்ய வேண்டியது என்ன என்பது புரியாமல் தடுமாறிய வளவத்திரையனின் சிந்தனையைப் புரிந்து கொண்ட பெரியவர் புன்முறுவலுடன் கூறினார்.

"திரையா. ஏன் குழம்பிக் கொள்கிறாய்? இப்போது செய்ய வேண்டியதைச் சிறப்பாகச் செய்! பின்னால் நடப்பது சிறப்பாகவே இருக்கும். நீ இப்போது செய்ய வேண்டியது தாலியாவின் மனதுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் கொடுப்பதுதான். புரிகிறதா?" என்றவரின் வார்த்தைகள் அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

அவன் முதுகில் தட்டிக் கொடுத்தவர், "உள்ளே போய் அதை மட்டும் செய்." என்றவாறு அங்கிருந்து நடக்கத் தொடங்கினார்.

முதுகண்ணனார் அறையில்...

பஞ்சணையில் அமர்ந்திருந்த அந்தப் கிரேக்கக் கட்டழகி, வளவத்திரையனின் வருகையை அறிந்ததும் எழுந்து நின்றாள்.



அங்கு ஏற்றி வைத்த தீபத்தின் பொன்னொளியில் அந்தப் பொற்சிலையாளின் பொலிவு வார்த்தைகளில் வர்ணிக்கவியலாததாக இருந்தது.

வேகமாய் அந்த அறைக்குள் நுழைந்தவனின் வேகம், சிலையாய் நின்றவளை நோக்கி நடந்தபோது, சற்றே தடைப்பட்டது.

தன்னருகில் வந்து நின்றவனின் கண்களைக் கூர்ந்தாள் தாலியா. தன் வாழ்க்கையின் போக்கு அவனது வார்த்தைகளில் இருப்பதை உணர்ந்தவளின் கண்கள் அதைப் பிரதிபலித்தன. அந்தக் கண்களின் வார்த்தைகளை அவனும் உணராமல் இல்லை.

தாலியாவின் வலக்கரத்தை அவன் வலக்கரம் அன்பாய் பற்றியதும், அவள் உணர்ச்சிகள் தடுமாறின. அவனது அன்பின் விளைவால் விளைந்த அந்தச் செயலால், இன்பமும் வேதனையும் அவளுக்குள் புரண்டோடின.

“தாலியா, இன்னும் நான்கைந்து நாழிகையில் நாம் முசிறியைச் சென்றடைவோம்.” என்றான் வளவத்திரையன்.

“ஆனால்... கரையை அடைந்ததும் என்ன நேருமோ என்பதுதான் கலக்கமாய் இருக்கிறது.” என்ற தாலியாவின் குரல் உடைந்தது.

அவளது கவலையை அவனும் அறியாமல் இல்லை. காதல் என்னவெல்லாம் செய்யும் என்பதை உணர்ந்தவன்தான் என்பதால், அன்பின் நெகிழ்ப்பில் அவன் பேசினான்.

“கவலைப்படாதே தாலியா. நாம் கரையை அடைந்ததும் பிரிவு வந்திடுமோ என நினைக்காதே. நன்மை நடக்கும் என்ற நம்பிக்கைதான் வாழ்க்கையை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லும். நம்பிக்கையோடு இரு.”

“அந்த நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?” என்றவளின் கண்ணீர் கன்னங்களில் தாரையிடத் தொடங்கியது.

அவளது கேள்வி அவனைத் திணறடித்தாலும், அதை மறைத்துக் கொண்டு அவள் முகத்தை மெதுவாக நிமிர்த்தி, அவள் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தான்.

“நான் திடமானவள் என்ற நினைப்பெல்லாம் என்னை விட்டு ஓடிப் போய்விட்டது. உங்களை இழந்து விடுவேனோ என்ற வேதனைதான் மேலோங்கியிருக்கிறது.”

“வீணாக மனத்தைக் குழப்பிக் கொள்ளாதே. உனக்கு துணிவை வழங்க வந்த என்னையும் குழப்பாதே தாலியா.” என்றவன், சற்றுமுன்பு பெரியவரிடம் இருந்து தான் பெற்ற அனுபவப் படத்தை அவளிடம் ஒப்புவித்தான்.

“எது நடந்தாலும் அதில் நம் நன்மை ஒளிந்திருக்கும். அதை மட்டுமே நம் கண்கள் காண வேண்டும். அதற்கு காலம் கனியும் என்ற பொறுமையும் வேண்டும். இந்த எண்ணத்தில் நீ எப்போதும் உறுதியாக இரு.” என்றவனின் உறுதியான வார்த்தைகள் அவளுக்குள் தேனாய் பாய்ந்தது.

வீரத்திலும் நெஞ்சின் ஈரத்திலும் நிகரற்ற வளவத்திரையனின் இதயத்தில் இடம் பிடித்த தன் நிலை, இறுதிவரை தொடருமா என்ற கேள்வி எழுந்தாலும், அவனது வார்த்தைகளில் இருந்த அன்பும் நம்பிக்கையும், அவன் மேல் மையல் கொண்ட அந்தத் தையலின் மனத்தைக் கிளர்த்தியத்தில், அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

அதைச் சற்றும் எதிர்பாராத வளவத்திரையன் அவளது அன்பிலும் அணைப்பிலும் கட்டுண்டவனாய் நெகிழ்ந்து சிலையாய் நின்றான்.

கடலரசி அலைகளை கிழித்தபடி கரையை நோக்கி வேகமாய் பயணித்துக் கொண்டிருந்தது.

(கனவு தொடரும்...)


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

# மூட்டை முடிச்சுகள்

மூட்டை முடிச்சுகள்
இறைந்து கிடக்கின்றன.
வண்டி சென்றுவிட்டது.
யாருடையவை இவை?
இவற்றின் சொந்தக்காரர் யார்?

விட்டுச் சென்றவை சில
பேர் ஒட்டி
ஒலிபெருக்கிகளில் அடிபடுகின்றன.
சில..பெயர் தெரியாமல்
கிடங்கில் தம்மிடம் தேடுகின்றன
விட்டுச் சென்றவை
வந்து சேர்ந்தவையோடு.

ஏதோ ஒரு சமயம்
கெடு முடிந்தவை
ஏலம் போகும்;
உருமாறும், அழியும்.
தேடிவந்தால் சொந்தம்
தொடரும்.

வண்டிகள் வரும்;
வந்தவை போகும்;
மூட்டை முடிச்சுகள்
யாருடையவை?
விட்டுச் சென்றவை
வந்து சேர்ந்தவையோடு.

**வி.மோகனரங்கன்**

# நெரிசல்

வழி மறித்தவனை
ஒலி பெருக்கிக் கடிந்து
கிடைத்த சந்துகளில்
புகுந்து இடைமறிக்கும்

பல்கிப் பெருகும் போக்குவரத்தால்
பந்தயமாய் மருவிய பயணத்தில்
நொந்து வெந்து புழுவாய் ஊர்கையில்
ஞாபகத்துக்கு வந்து தொலைக்கிறான்
வைகறையில் அதே சாலையை

குறுக்கும் நெடுக்கும் அளந்து
தினசரி விநியோகிக்கும் பையன்
மிதிவண்டி மிதித்துப் பறக்கும்
ஓர் பறவை போல.

**நித்யா சாமிநாதன்**

# நாகரிக விருந்து

என்றுமே இல்லாத பதற்றம்
பதுங்கிப்பதுங்கி வந்தமர்ந்து விடுகிறது
சாப்பாடு உள்ள காகிதத் தட்டுகள் ஏந்திய
புதிய பச்சை நிறக்கோடு போட்ட சட்டை
மாட்டிக்கொண்டுள்ள தாத்தாவின் கைகளில்
நூறுபேர் உள்ள இடத்தில் இருக்கும் பத்து
நாற்காலிக்குப் போட்டிப்போட முடிவதில்லை

தனக்கென முதலில் எடுத்துக்கொள்வது
பழக்கமாகாததால் இருக்கலாம்
காலி இருக்கைகள் நிறைந்த
நிகழ்ச்சி நடக்கும் அரங்கு சுவருக்கு
அடுத்தபக்கம்தான் என்றாலும்
அங்கெல்லாம் சாப்பிடக்கூடாது

அழுக்காகிவிடும் ஒரு சிறுமியை
அவள் குடும்பத்தினர் யாரோ
மிரட்டிக்கொண்டிருந்ததை வேறு
பார்த்து தொலைத்தாகிவிட்டது
கதைபேசி, சிரித்துக்கொண்டும்
நாசுக்காக உண்ணும் மகனோ மகளோ
சுட்டிக்காட்டு முன்பே வாயோரத்து
சோற்றுப்பருக்கையைச்
சரிசெய்ய வேண்டியிருக்கிறது

இன்னும் இரண்டு கவளம்
உள்ளே செல்லாவிட்டாலும் கூட
குடிநீர் எங்கே என கண்டுபிடித்துவிட்டாலும்
அதை வைத்துக்கொள்ள கூடுதல் கரம் ஒன்று
தேவையாய் இருக்கிறது

எங்கிருந்தோ ஓடிவந்து பேரனோ பேத்தியோ
தண்ணீர்க் கிண்ணத்தைக் கொடுக்கும்போது
இதுபோதும் எனத் தோன்றிவிடுகிறது.

நளினமாகச் சாப்பிடும்போதே
நாய்க்குட்டிபோல் ஓடிவந்து
இரண்டுபேர் கேட்கும்படியாக
நீ கையாலேயே சாப்பிடு
உனக்கு முள்கரண்டி சரிவராது என்று
மகன் வந்துபோட்ட மிளகாய்த் துண்டு
விக்கலை நிறுத்தப் போதுமானதாயிருக்கிறது

பரவாயில்லை இதையாவது
கவனித்து பேசுகிறானே
தன்னொத்தவர் கூறுகையில்
கண் வாழ்க்கைத் துணையைத் தேடுகிறது

பாட்டிகளுக்கு முதல் பந்தியில் சாப்பிட
வாய்ப்புக்கிடைத்ததைவிட
தம் பேச்சை உற்சாகத்துடன்
கேட்க மனிதர்கள் கிடைத்த மகிழ்சிரிப்பு

உணவின் மணத்துடன் கலக்கிறது
இன்னும் கொஞ்சம் இருந்திருக்கலாம்
ஏங்குகிறாள்
சூரியன் நிலக்காட்சிகளைக் காண.

**மாதங்கி**

## ‘ஆர்யன்’ ஒரு புதிய அனுபவம்!

## ‘ஆர்யன்’ தருமா ‘ஆர்வம்?’



பிரவீன் இயக்கத்தில், விஷ்ணு விஷால் நடிப்பில் உருவாகியுள்ள படம் ‘ஆர்யன்’. செல்வராகவன், ஸ்ரத்தா ஸ்ரீநாத், கருணாகரன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். கரோனா காலத்தில் ஆரம்பித்து ஐந்து ஆண்டுகளாக உருவாகி இருக்கும் இப்படத்தின் கதையினைக் கேட்டு அமீர்கான் பாராட்டியது படக்குழுவினருக்கு உற்சாகத்தை அளித்தது. ‘இதில் ஒரு புதிய விஷயத்தை முயற்சி செய்திருக்கிறோம். நீங்கள் தரும் பாராட்டு அதை உறுதிப்படுத்தும்’ எனக் கூறியிருக்கிறார் விஷ்ணு விஷால். எப்படியோ, சற்று இடைவெளிக்குப் பின் வரும் தரமான நடிகர், நடிகை என்ற வகையில் இப்படத்துக்கான எதிர்பார்ப்பு கூடவே செய்கிறது.

## பவிஷ் நடிக்கும் புதிய படம்!

## வாரிசுகளின் வரிசையில் வரும் பவிஷ்!

‘நிலவுக்கு என்மேல் என்னடி கோபம்’ படத்தின் மூலம் நாயகனாக அறிமுகமானவர் பவிஷ். இவர் தனுஷின் உறவினர். தினேஷ் மற்றும் ஜி.தனஞ்ஜெயன் இணைந்து தயாரிக்க, மகேஷ் ராஜேந்திரன் இயக்கவுள்ளார். காதல் கலந்த கமர்ஷியல் கதையாக உருவாகும் இப்படத்தில் நாகா துர்கா என்பவர் நாயகியாக அறிமுகமாகிறார். இவர்களுடன் முன்னணி நடிகர்கள் பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கவுள்ளனர்.

## ஃபௌசி’ நாயகியின் மவுசு!

## ராசியான நாயகியாய் மாறுவாரா?



ஹனு ராகவபுடி இயக்கத்தில், பிரபாஸ் நடிப்பில் பெரும் பொருட்செலவில் மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரித்து வரும் படத்துக்கு ‘ஃபௌசி’ எனப் பெயரிட்டு ஃபர்ஸ்ட் லுக்கை வெளியிட்டுள்ளது படக்குழு. இதற்கு இணையத்தில் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. பிரபாஸுக்கு நாயகியாக நடிக்கும் இமன்விக்கு, படங்கள் மளமளவென ஒப்பந்தமாவதால், அவரைத் தென்னிந்திய திரையுலகம் கொண்டாடக் காத்திருக்கிறது. இப்படம் தெலுங்கு, தமிழ், இந்தி, கன்னடம், மலையாளம் மற்றும் வங்க மொழியிலும் வெளியாகவிருக்கிறது.

## ‘பராசக்தி’ படப்பிடிப்பு நிறைவு

## பொங்கலுக்குப் படையலிடும் பராசக்தி!



டான் பிக்சர்ஸ் தயாரிப்பில், ‘மதராஸி’ படத்தை அடுத்து, சிவகார்த்தி சிவகார்த்திகேயன் கேயன் நடிக்கும் படம், ‘பராசக்தி’. இது அவருடைய 25—வது படம். சுதா கொங்கரா இயக்கும் இதில் ரவி மோகன், லீலா, அதர்வா, பசில் ஜோசப், ராணா முக்கிய கதாபாத்திரங் களில் நடித்துள்ள இப்படத்துக்கு ஜி.வி.பிர காஷ் இசை அமைக்கிறார். 1960—களில் கல் லூரி பின்னணியில் நடக்கும் இந்தி எதிர்ப்பு கதையைக் கொண்ட இந்தப் படம் அடுத்த ஆண்டு ஜன.14—ல் வெளியாக இருக்கிறது.



# தலவலம்

## திருக்காவளம்பாடி

### (கோபாலகிருஷ்ணன் பெருமாள்)

புவனகிரி செயபாலன்

திருமாலின் 108 திவ்ய தேசங்களில் 27ஆவது தலம். திருநாங்கூர் பதினோரு திருப்பதிகளில் முதன்மையானது.

‘மண் இடந்து ஏனம் ஆகி
மாவலி வலி தொலைப்பான்
விண்ணவர் வேண்டச் சென்று
வேள்வியில் குறை இரந்தாய்!
துண் என மாற்றார்தம்மைத்
தொலைத்தவர் நாங்கை மேய
கண்ணனே! காவளம் தண்
பாடியாய்! களைகண் நீயே.’
—திருமங்கை ஆழ்வார்

திருநாங்கூர் 11 திருப்பதிகள் முறையே திருக்காவளம்பாடி, திரு ஆரியமேய விண்ணகரம், திருவண் புருஷோத்தமம், திருச்செம்புபொன்செய் கோயில், திருவைகுந்த விண்ணகரம் என ஆறு திருத்தலங்கள் திருநாங்கூரிலேயே அமைந்துள்ளன.

பெருமாள் — கோபாலகிருஷ்ணன், ராஜகோபாலன்.

நிலை — கிழக்கு நோக்கிய திருக்கோலம்.

தாயார் — மடவரல் மங்கை, செங்கமல நாச்சியார்.

விமானம் — சுயம்பு.

தீர்த்தம் — தடமலர்ப் பொய்கை.

தலவிருட்சம் — பாரி ஜாதி மரம்

காவளம்பாடி



காவளம்பாடி என்றால் யானை என்றும், பாடி என்றால் இடம் என்றும் பொருள் உண்டு. கிருஷ்ணர் இத்தலத்தில் யானையைக் காத்தருளியதால், இத்தலத்திற்கு திருகாவளம்பாடி என்ற பெயர் வந்ததாக தலபுராணம் கூறுகிறது. காவளம் என்றால் பூந்தோட்டம் எனப் பொருள்படும். பூக்கள் நிறைந்த பகுதி என்பதால் இத்தலம் திருகாவளம்பாடி என்று ஆயிற்று. கவளம் என்பது சிறிய அளவிலான உணவைக் குறிக்கிறது. இங்கு பகவான் தனது பக்தர்களின் தூய்மையான நீ பக்தியை உணவாக ஏற்றுக் கொள்கிறார். எனவே இந்த இடம் கவளம்பாடி என்று அழைக்கப்படுகிறது.

இங்கு மடப்பள்ளி இல்லை. இத்தலம், கீழ் சட்டநாதபுரம் என்றும் கண்ணன் கோயில் என்றும் அழைக்கப்படுகிறது.

துவாரகை

இத்தலம் விஷ்ணுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தலமாகும். இங்கு கிருஷ்ணன் ருக்மணி, சத்யபாமாவுடன் வீற்றிருப்பதால் இத்தலம் துவாரகைக்குச் சமமாகக் கருதப்படுகிறது.

திருமங்கையாழ்வார்

இவர் இத்தலத்தின் மீது பத்து பாசுரங்களைப் பாடியுள்ளார். திருமங்கை ஆழ்வார் அவதரித்த இடமான குறையலூரும் அவர் வைணவ அடியார்களுக்கு அன்னதானம் நடத்திய மங்கை மடமும் அருகில் உள்ளன.



பதினோரு சிவரூபங்கள்

தட்சன் சிவபெருமானை அவமதிக்க வேண்டும் என்பதற்காகவே மற்ற அனைவரையும் அழைத்து, சிவனை மட்டும் அழைக்காமல் யாகம் செய்தான். இது முறையான செயல் அல்ல என்றும், நியாயம் கேட்க வந்த தன் மகளும் சிவனின் மனைவியுமான தாட்சாயணியை மரியாதை குறைவாக நடத்த, இதைப் பொறுக்க மாட்டாது அம்பிகை, அந்த யாக குண்டத்திலேயே விழுந்து தன்னை மாய்த்துக் கொண்டாள். இதை அறிந்த ஈசன் ருத்ரதாண்டவம் ஆடினார். ஆடிய போது அவரது சடைமுடி பூமியில் பட்ட இடத்தில் எல்லாம் தெறித்து விழுந்த கோபக்கினி 11 சிவ ரூபங்களாக மாறி, தனித்தனியே சினத்துடன் நடனமிட, பிரபஞ்சமும் பயந்து கலங்கியது. அனைவரும் மகாவிஷ்ணுவை நாடி தங்களைக் காக்கும் படி கெஞ்சினர். அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு மகாவிஷ்ணு 16 எம்பெருமாள்களாக மாறி, 11 சிவரூபங்களையும் அமைதியாக்கி, ஒரே உருவாக்கினார்.

தன் கோபம் தணிந்த ருத்ரன் தன்னுடைய 11 ருத்ர ரூபங்களையும் சாந்தப்படுத்திய 11 விஷ்ணு வடிவங்களும் தனித்தனி கோயில் கொண்டு அருள வேண்டும் என வேண்டிக் கொண்டார். அதன்படி எம்பெருமான் கொலுவிருக்கும் 11 கோயில்கள் தான் நாங்கூர் திவ்ய தேசத்தில் இருப்பது.

கிருஷ்ணர் உதவி

இரண்யாட்சகன் என்னும் அரக்கன் பூமியைப் பந்தாகச் சுருட்டி எடுத்துக்கொண்டு போய், பாதாள லோகத்தில் ஒளித்து வைத்து விட்டான். அவனது நடவடிக்கையால் பிரபஞ்சத்திலிருந்து பூமி மறைந்ததனால், பிற கோள்களின் செயல்பாடுகளுமே ஸ்தம்பித்து விடும் என்று அஞ்சி அனைவரும் மகாவிஷ்ணுவிடம் சென்று அவரை வணங்கினர். அவரிடம், பூமியை மீட்டு அருள வேண்டும் என்று வேண்டினர். பாதாள லோகத்தை ஆட்சி செய்யும் இரண்யாட்சகனை, வராக அவதாரம் எடுத்து பாதாள லோகத்திற்கு சென்று வதம் செய்து, பூமி தேவியை மீட்டுக்



கொண்டு வந்தார். தான் மீட்கப்பட்டதில் நிம்மதி அடைந்த பூதேவி, வராகரை ஆலிங்கனம் செய்து மகிழ்ந்தாள். அவளுக்கு மகனாகப் பிறந்தான் நரகாசுரன். பூமி தேவிக்கு பிறந்த நரகாசுரன் பூமியில் உள்ள அனைவரையும் தனக்கே சொந்தம் எனக் கருதி, தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்து அதர்ம செயல்களில் ஈடுபட்டான். நாளுக்கு நாள் அவனது செயல் அதிகமாகவே, அதைக் கண்டு அதிர்ந்த இந்திரன், கிருஷ்ணனைச் சரணடைந்து தன்னைக் காப்பதோடு தான் இழந்ததையும் மீட்டுத் தர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டான்.

நரகாசுரனின் செயல்களை அறிந்த கிருஷ்ணன், அவனை வதம் செய்ய சத்யபாமாவையும் உடன் அழைத்துச் சென்றார். பூமிதேவி தான் கிருஷ்ணன் மனைவி சத்தியபாமாவாக புது உரு கொண்டாள்.

சத்யபாமா

உலகத்தாரை துன்புறுத்துபவன் சொந்த மகனே ஆனாலும், அவனை மன்னிக்கவோ அவன் செயல்களை நியாயப்படுத்துவதோ அதிகாரம் இல்லை என்று உலகத்தாருக்கு தெரியப்படுத்தவே, சத்தியபாமாவை உடன் அழைத்துச் சென்றார்.

கிருஷ்ணன் அசுரனுடன் போரில் ஈடுபட்டு மயக்கம் அடைந்தது போல் இருந்ததைக் கண்டதும், சத்தியபாமா கோபமடைந்த நரகாசுரனை வதம் செய்தாள். இந்திரலோகத்தை மீட்டு அதை இந்திரனிடம் கிருஷ்ணன் வழங்கினான்.

தனக்கு மீண்டும் தன் ராஜ்யத்தையும் பதவியை





மன்னன் என்று போற்றப்படும் திருமங்கையாழ்வார், இவ்விருவரின் வேண்டுகோளுக்கு இணங்க, கிருஷ்ணர், ருக்மணி சத்யபாமாவுடன் துவாரகை போன்று விளங்கும் இத்தலத்தில் நிரந்தரமாக அர்ச்சாவதார சேவை சாதிப்பதாக வாக்களித்தார். எனவே இத்தலம் அவருடைய வாழ்விடம் ஆனது.

கோயில்

இத்தலத்தில் ராஜகோபால சுவாமி வலது கரத்தில் சாட்டையைப் பற்றி, இடது கரத்தை பசு மாட்டின் மீது வைத்தபடி காட்சி தருகிறார். இங்கு மூலவரைத் தவிர மடல்வரல் மங்கை மற்றும் செங்கமல நாச்சியாருக்கு தனிச் சன்னதி உள்ளது. கோபுரத்துக்கு முன்பாக கருடன் காட்சி தருகிறார். மூலவர் மற்றும் தாயார் சன்னிதிகளைத் தவிர, வேறு சன்னதிகள் இல்லை. கருவறை மண்டபத்தின் மீதுள்ள விதானத்தில் கிருஷ்ண லீலைகள் ஓவியங்களாகப் பரிமளிக்கின்றன.

மீட்டுத் தந்த கிருஷ்ணருக்கு நன்றி தெரிவிக்க, திருக்காவளம் பாடியைத் தேர்ந்தெடுத்தான். தன்னை வந்தடைந்திருக்கும் சிம்மாசனத்தில் கிருஷ்ணரை அமரச் செய்து அவருக்கு பட்டாபிஷேகம் நடத்தி மகிழ்ந்தான்.

பாரிஜாத மலர்

கிருஷ்ணரையும் சத்தியபாமாவையும் இந்திரலோகத்திற்கு அழைத்துச் சென்று மரியாதை செய்தான். அங்கே பாரிஜாத மலர் சொரியும் மரத்தைப் பார்த்து வியந்தாள் சத்தியபாமா. அதன் வெண்மை இதழ்களும், சிவந்த காம்பும், அதன் நறுமணமும் அவளைப் பெரிதும் கவர்ந்தது. அந்த மலர்கள் தனக்கு வேண்டும் என கிருஷ்ணரிடம் கேட்டாள்.

தினம் தினம் மலர் வேண்டும் என்று கேட்டால் என்ன செய்வது என்று யோசித்த கிருஷ்ணர், பாரிஜாத மரத்தைத் துவாரகைக்குக் கொண்டு போகலாமே என்று எண்ணி இந்திரனிடம் மரத்தைக் கேட்டார். அவனோ தர மறுத்துவிட்டான்.

இவ்வளவு உதவி செய்தும் இம்மரத்தைத் தர மனம் வரவில்லையே என்று கோபப்பட்டு, இந்திரனிடமிருந்து கட்டாயமாகப் பிடுங்கி இத்தலத்தில் பதித்து விட்டார். இச்சம்பவத்தை, 'ஏவிளம் கன்னிக்காக இம்மனையவர் கோனைச் சென்ற காவளம் கடிது இறுத்துக் கற்பகம் கொண்டு போந்தாய்' என்று திருமங்கையாழ்வார் தன் பாசுரத்தில் வர்ணித்துள்ளார்.

விஷ்வக்சேனர் என்ற சேனை முதலியார், மங்கை

திருவிழாக்கள்

கோகுலாஷ்டமி, வைகுண்ட ஏகாதசி விழாக்கள் சிறப்பாக நடைபெறும். அப்போது தாயாருக்கு திருமஞ்சனம் ஆராதனைகளும் நடக்கும். ஆண்டுதோறும் அமாவாசைக்கு மறுநாள் திருநாங்கூர் 11 திவ்ய தேச பெருமாள் அனைவரும் ஒன்றாகக் கருட சேவைக்கு மணிமாடக் கோயிலில் எழுந்தருள்வது வழக்கம்.

அன்றைய தினத்தில் மங்களாசாசனம் செய்ய திருமங்கை ஆழ்வார் எழுந்தருளி, 11 பெருமாள்களையும் மங்களாசாசனம் செய்த பிறகு, திருமங்கை ஆழ்வாருக்கு, மணவாள முனிவர் மங்களாசாசனம் செய்வார்.

அன்றைய தினத்தில் ஊரைச் சுற்றியுள்ள வயல்களில் நெற்பயிர்கள் காற்றால் ஆடும் சத்தம் கேட்கும். அந்தச் சத்தம் திருமங்கையாழ்வாரின் வருகையை உணர்த்துவதாக பக்தர்கள் நம்பிக்கை!

பரிகாரம்

கோபத்தால் தவறு செய்பவர்கள், சொந்தக்காரர்களால் பாதிக்கப்பட்டவர்கள், முன்விரோதம் காரணமாக பகை கொண்டு, நிம்மதி இல்லாமல் தவிப்பவர்கள், வறுமையினால்






கஷ்டப்படுகிறவர்கள், வெளியூர் பயணத் தடையால் வாழ்க்கையில் திசை மாறிக் கொண்டிருப்பவர்கள், இத்தலப் பெருமாளைச் சேவித்தால் நல்ல மாற்றங்களை அடைவதுடன், மன நிம்மதியும் ஆரோக்கியமும் பெருகும் என்பது ஐதீகம்! நம்பிக்கையும் கூட!

பிரார்த்தனை

குழந்தை பாக்கியம் பெற வேண்டி வரும் பக்தர்கள் இங்குள்ள கிருஷ்ணரிடம் பிரார்த்தனை செய்கின்றனர். வேண்டுதல் நிறைவேறியதும் கிருஷ்ணருக்கு வெண்ணை சாத்தியும், பாயாசம் செய்தும் வழிபடுகின்றனர்.

பூஜை — கோயில் திறக்கும் நேரம்

தினமும் நான்கு காலை பூஜை செய்யப்படுகிறது. கோயில் தினமும் காலை 8:00 மணி முதல் 10 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 7 மணி வரையிலும் திறந்து இருக்கும்.


இருப்பிடம்

சீர்காழி — பூம்புகார் சாலையில் 10 கி.மீ. தொலைவிலும், வைத்தீஸ்வரன் கோயிலில் இருந்து 8 கி.மீ. தூரத்திலும் திருவெண்காட்டிலிருந்து 2 கி.மீ. தூரத்திலும் உள்ளது. பஸ் ஆட்டோ வசதிகள் உண்டு.

(தொடரும் வலம்.....)




# பணம் இல்லா உலகைத் தேடி ஒரு பயணம்




**நூலாசிரியர்: ம. சாஸ்வதன்**

**கட்டுரைகள்**

**விலை : ரூ. 150**

**வெளியீடு:**

**சாஸ்வத் பிரிண்டர்ஸ்**
**சூளைமேடு, சென்னை**
**தொடர்புக்கு: 9444069901**

மூலதனம் என்ற புத்தகத்தை உலகிற்கு கொடுத்த காரல் மார்க்ஸ், தன் மகனின் இறுதிச் சடங்கிற்குக் கூட பணம் இல்லாமல் இருந்ததையும், புத்தர் ராஜ வாழ்க்கையைத் துறந்து தன் வாழ்க்கையைப் பணம் சம்பாதிக்கச் செலவிடாமல் ஒரு பிட்சுவாக வாழ்ந்ததையும் கோடிட்டுக் காட்டுகிற நூலாசிரியர், உலகில் பொருட்கள் மீதும் பணத்தின் மீதும் மனிதர்கள் காட்டும் ஆசையின் விளைவையும், ‘பணமில்லா உலகம்’ பற்றிய பார்வையையும் காட்சிப்படுத்துகிற விதம் அருமை!

‘ஒவ்வொரு உயிர்களின் மீதும் வளரும் காதல் என்பது மனிதர்களுக்கு இடையே மலரும் அன்பு மட்டும் கிடையாது! மனிதர்களுக்கும் இந்த பிரபஞ்சத்திற்கும் இடையே மலரும் அன்பு! மனிதர்களுக்கும் ஒவ்வொரு உயிரினத்திற்கும் இடையே மலரும் அன்பு! மனிதர்களுக்கும் பஞ்சபூதங்களுக்கும் இடையே மலரும் அன்பு!’ என்றெல்லாம் அழகுறக் கூறிவிட்டு, ‘பணம் இல்லா உலகம் பற்றிய எண்ணம் நம் மனதில் தோன்ற வேண்டும். பின்பு அந்த எண்ணத்தை நாம் மற்றவர்களிடம் பகிர வேண்டும். அதன் பின்பு தான் இந்த எண்ணத்திற்கு ஒரு புதிய செயல் வடிவம் கொடுக்க முடியும்!’ என்ற ஒரு தீர்வையும் நோக்கி இட்டுச் செல்லும் அற்புதமான நூலைப் படைத்திருக்கும் நூலாசிரியர் சாஸ்வதனின் முயற்சி பெரிதும் பாராட்டப்பட வேண்டியது தான்! அந்த வகையில், இது ஓர் அற்புதமான புத்தகம் என்பதை வாசிப்பவர்கள் உணரலாம்.

சிறுகதை



# புதிய திசை

## யோசன் பால்கி

அந்த மாலை சூரியன் தன் ஒளியை மெதுவாக மண்ணில் பரப்பிக் கொண்டிருந்தான்.

வயலின் வரப்பில் நின்று பழைய இரும்பு மண்வெட்டியைக் கொண்டு மண்ணைத் திருப்பிப் போட்டுக் கொண்டிருந்தார் தாத்தா.

அந்த உழைப்பின் சப்தம், மண்ணின் மணம் எல்லாம் அவருக்கு இறை வழிபாட்டை விட புனிதமானது.

திடீரென்று தொலைவில் ஒரு மெல்லிய இயந்திர ஒலி கேட்டது.

“தாத்தா!” என்று கூவியபடி பேரன் கவி ஓடி வந்தான். அவன் கையில் மினுமினுப்பாய் ஒரு புதிய கருவி இருந்தது.

“தாத்தா! இது என்ன தெரியுமா?” என்றான் கவி.

“சொன்னாதானே தெரியும்!” என்றார் தாத்தா.

‘டிஜிட்டல் ஸ்மார்ட் மண்வெட்டி.’

“அப்படின்னா?”

“இது வந்து, மண் எவ்வளவு ஈரமா இருக்கு, எப்போது நீர் ஊத்தணும், எப்ப எதை விதைக்கணும், எல்லாம் சொல்லும்!”

“அப்படியா?” என்ற தாத்தாவின் வார்த்தைகளில் ஒலித்த தொனி இன்னதென்று அவனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை!

“ஃபோன் மாதிரி, இதில் ஆப் இருக்கு!” என்றான் பெருமையோடு.

தாத்தா சிரித்தார். அவர் கண்ணில் மெல்லிய அன்பும், ஒரு சிறிய வேதனையும் இருந்தது.

“அது மண்ணை உழுமா இல்ல, மண்ணைப் படிக்குமா?” என்று கேட்டார் மெதுவாக.

“இல்ல தாத்தா, உழும்! இது லேட்டஸ்ட் டெக்னாலஜி.”

“அப்பா, இந்த கருவி விலை எவ்வளவு?”

“சில ஆயிரம் தாத்தா. ஆனால் சப்ஸ்கிரிப்ஷன் கட்டணமுமிருக்குது!”

“சப்ஸ்கிரிப்… என்ன?” தாத்தா தலையசைத்தார்.

“அதான் மாதம்தோறும் சிறிய கட்டணம் கட்டணும் தாத்தா… இல்லன்னா இது வேலை செய்யாது.”

தாத்தா தன் கையில் இருந்த இரும்பு மண்வெட்டியைப் பார்த்தார்.

“இது சப்ஸ்கிரிப்ஷன் கேட்கலே, கவி. இது என் அப்பாவோட கருவி… அவர் கையிலிருந்து என்



ை க க் கு
வந்தது. இது தண்ணீர் கேட்டது, பழைய சோறு கேட்டது, ஆனா பணம் கேட்டதில்ல!."

மாலை ஒளி இன்னும் மெதுவாகக் குறைந்தது.

பேரன் சற்றே வெட்கத்தோடு சிரித்தான்.

"தாத்தா, காலம் மாறுதே. நாமும் மாறணும்."

"ஆமா. மாறணும் கவி. ஆனா மண்ணோட தொடர்பு மாறக்கூடாது." என்றவர் மண்ணைத் தொட்டார், மெதுவாக மண்வெட்டியை விரல்களால் பிடித்து நிமிர்த்தினார்.

"இது உயிரோட இருக்கு, கவி. இதை அறிவால் புரிந்து கொள்ள முடியாது. இதை உணர்வால் தான் புரிந்துகொள்ள முடியும்."

சில நாட்கள் கழித்துஞ்

அதே
வயல்...

தாத்தா தொலைவில் நின்று கொண்டு பார்க்கிறார். பேரன் தனது டிஜிட்டல் மண்வெட்டியுடன் உழுகிறான்.

அப்போது அந்தக் கருவி ஒலி எழுப்பியது.

**"Warning! Subscription expired. Please renew."**

" இப்பவே ரினீயூ பண்ணணும்" என்று அது மிரட்டியது, சற்று நேரத்தில்

அந்தக் கருவி நின்றது.

பேரன் வருத்தமடைந்தான். அவன் வியர்வை சொட்டிய முகத்தோடு தாத்தாவை நோக்கி வந்தான்.



இருக்கணும்; உன் உரிமை பறிக்கும் எஜமானன் போல அல்ல!."

பேரன் மெல்ல தன் கைப்பிடியில் இருந்த "ஸ்மார்ட் மண்வெட்டியை" விட்டு விலகி, தாத்தாவின் பழைய இரும்பு மண்வெட்டியை தனது கையில் எடுத்தான்.

அது தாங்க முடியாத கனத்துடன் உறுதியுடன் இருந்தது, ஆனால் அதே சமயம் மனதுக்குள் அவனுக்கு ஒரு புது ஒளியைப் பாய்ச்சியது.

"தாத்தா" அவன் மெதுவாகக் கேட்டான்.

"இதுக்கு சப்ஸ்கிரிப்ஷன் இல்லையா?"

"தாத்தா, இது வேலை செய்யல!."

தாத்தா மெல்லிய புன்னகையுடன் சொன்னார்:

"மண்ணு ரொம்ப கடுமையா இருந்தா, நான் அதை நனைத்து மென்மையாக்குவேன். கருவி வேலை செய்யாம இருந்தா, அதை நனைத்தாலும் மென்மையாகாது."

அவர் பேரனைப் பார்த்தார்.

"கவி, கருவி ஒரு உதவி. அது ஒரு தந்தை இல்லை, ஒரு தாய் இல்லை. அதை உன் வாழ்க்கைக்குள் அழைக்கலாம், ஆனா உன் இதயத்துக்குள் விட்டுவிடாதே."

அந்த இரவு...

காற்றில் பச்சை மண்வாசனை கலந்திருந்தது.

அவனும் தாத்தாவும் இருவரும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தனர்.

மின்சாரம் போயிருந்தது. நட்சத்திரங்கள் மட்டும் மேலே மினுக்கின.

தாத்தா சொன்னார்..

"கவி, அறிவு நல்லது. ஆனா அது உன் நிழலாக

தாத்தா சிரித்தார்.

"இல்ல பேராண்டிஞ் இது உனக்கு ஒரு வாழ்நாள் சப்ஸ்கிரிப்ஷன் மாதிரி

ஒருமுறை வாங்கினால், உன் மூன்று தலைமுறைக்குப் போதும்."

அடுத்த நாள் காலையில், கவி தாத்தாவோட சேர்ந்து மண்ணை உழுதான்.

அந்த இரும்பு மண்வெட்டி மண்ணோடு மோதும் ஒலி, ஓர் இசை போல ஒலித்தது.

வானம் தங்கம் போல ஒளிர்ந்தது.

தாத்தா மெல்ல சொன்னார்:

"கவி விஞ்ஞானம் மனிதனாக மாறுது; மனிதன் கருவியாக மாறிடுறான். நீ மட்டும் அந்த திசையில போகாதே."

அவரது பேரன் அந்த வார்த்தையை மனசுக்குள் பதித்தான்.

அது எச்சரிக்கை இல்லை!

அது ஓர் ஆசீர்வாதம்!..


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

# அறிவோம் தமிழர்

## நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

நாமக்கல் கவிஞர் என மக்களால் அன்புடன் அழைக்கப்பெற்ற தி.வெ.இராமலிங்கம் பிள்ளை. மிகமிக எளிய சொற்களால் கவிதை பாடி, காந்தியக் கொள்கையைத் தமிழ்நாட்டில் பரப்பிய ஒரே கவிஞர். அரசியல். சமுதாயம், பண்பாடு ஆகியவை மறுமலர்ச்சி அடைந்த காலமான பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்த ஒரு அகிம்சைக் கவிஞர் தொடக்கக் காலத்தில் வன்முறை புரட்சியால் மட்டுமே சுதந்திரம் பெற முடியும் என்று எண்ணி பின்னாளில் காந்தியடிகளின் அஹிம்சை கொள்கை மட்டுமே விடுதலையைப் பெற்றுத்தர முடியும் என தன்முடிவை மாற்றிக் கொண்ட புரட்சியாளர்.

பிறப்பு: பழைய சேலம் மாவட்டம், தற்போதைய நாமக்கல் மாவட்டம் கரூருக்கும் ஈரோட்டுக்கும் இடையே அமைந்துள்ள மோகனூர் என்னும் ஊரில் 1888 ஆம் ஆண்டு அக்டோபர் 19 ஆம் தேதி பிறந்தார். அவரது தந்தை வெங்கட்டராம பிள்ளை தாயார் அம்மணி அம்மாள். அவ்வூர் ஹெட் கான்ஸ்டபிளாக பணியாற்றியவர் வெங்கட்டராம பிள்ளை.

இராமலிங்கர் பிறப்பதற்கு முன்னரே அவருக்கு முன் பிறந்தோர் ஏழு பெண்கள் ஆவர். எனவே அவரது பெற்றோர் தங்களுக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டி தமிழ்நாட்டுத் தெய்வங்களை வேண்டினார். அச்சமயம் எட்டாவது முறையாக அம்மணி அம்மையார் கருவுற்றிருந்தார். அவ்வேளையில் இராமஸ்வரத்துக்கு தீர்த்த யாத்திரை சென்ற பிராமண தம்பதிகள் வழியில் மோகனூரில் சில நாள்கள் தங்கியிருந்தனர். அவர்களை வெங்கட்டராம பிள்ளையும், அம்மணி அம்மையாரும் போட்டி போட்டுக்கொண்டு பணிவிடைகள் செய்து இளைப்பாற்றினர். இதனால் மகிழ்ச்சியில் திளைத்த அப்பெரியோர், அம்மணிக்கு ஆண்குழந்தை பிறக்கும் எனவும், பிறக்கும் குழந்தைக்கு இராமேஸ்வரத்தில் இருக்கும் இராமலிங்க சுவாமியின் பெயர் வைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர். அதன்படி எட்டாவதாக ஆண் குழந்தை பிறக்கவே அக்குழந்தை இராமலிங்கம் எனப் பெயரிட்டார். அம்மணி அம்மாள் இதிகாச புராணங்களை யெல்லாம் சொல்லி தன் மகனை வளர்த்தார். பொய் பேசுவதும், பொல்லாதவன் என்று பெயரெடுப்பதும் கூடாது என்று திரும்பத் திரும்பச் சொல்லி மகனைச் சான்றோனாக வளர்த்தார்.

கல்வி: நாமக்கல் நம்மாழ்வார் பள்ளியில் தம் தொடக்கக் கல்வியைக் கற்றார். அவர் தந்தை மோகனூரில் தலைமைக்காவலராகப் பணியாற்றிவர். பணி மாற்றலாகி கோவைக்குச் சென்றார். இதன் விளைவாக இராமலிங்கம் பிள்ளையும் தனது உயர்நிலைக்கல்வியை கோயம்புத்தூரில் பயின்றார். 1906 ஆண் ஆண்டு நடைபெற்ற பள்ளி இறிதித் தேர்வில் இராமலிங்கம் கணிதம், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களில் குறைந்த மதிப்பெண் பெற்று தோல்வி கண்டார். பிறகு 1907 ஆம் ஆண்டு நடைபெற்ற பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றார்.

திருமணம்: கல்லூரியில் படிக்கும் போதே அவரது தந்தையாரின் வற்புறுத்தலால் தந்தையின் சகோதரி கரூர் வீரப்ப பிள்ளையின் மகளான முத்தம்மாளை திருமணம் செய்து கொண்டார். எனினும் ஏதோ இனந்தெரியாத வெறுப்புணர்ச்சியால் உந்தப்பட்டு முத்தம்மாளுடன் குடும்பம் நடத்தாமலே காலம் கடத்தினார். ஒருநாள் முத்தம்மாள் இரவில் அவர் காலைப்பிடித்து கண்ணீர் விட மனம்மாறிய இராமலிங்கம் பிள்ளை தன் மனைவியுடன் சேர்ந்து வாழ்ந்தார். எனினும் குழந்தை பிறக்காமையால் அவரது தந்தை முத்தம்மாளின் தங்கையை மணக்க வேண்டினார். முத்தம்மாளும் வேண்டினார். இதனை ஏற்க மணமில்லாமல் இராமலிங்கர் தவித்தார். அப்போது 1924 ஆம் ஆண்டு முத்தம்மாள் தீராத வயிற்று வலியால் இறந்தார்.

தனிமையில் வாடிய இராமலிங்கம் பிள்ளையை நண்பர்களும் உறவினர்களும் தேற்றி அவரது மனதை மாற்றி மனைவியின் தங்கையான சௌந்தரம்மாளை திருமணம் செய்து வைத்தனர். இனிய இல்லறம் நடத்திய இவர்கள் மூன்று ஆண் குழந்தைகளையும், இரண்டு பெண்

# பெருமை


**வேல்பாண்டி**

குழந்தைகளையும் பெற்றெடுத்தனர்.

பணி: தந்தை வெங்கட்ராமன், காவல் துறையில் தலைமைக் காவலராகப் பதவி வகித்ததால், தன் மகனையும் காவல்துறையில் பணியாற்றச் செய்ய வேண்டும் என்று பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். பணி நிமித்தமாக சென்னை சென்று திரும்பிய இராமலிங்கரது தந்தை அவரை ஏதேனும் ஒரு பணியில் அமர்த்திவிட வேண்டும் என்று எண்ணி அப்போதைய சென்னை காவல் துறைத் தலைவராக (டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல்) இருந்த ராபர்ட்சன் துறையிடம் பரிந்துரைக் கடிதம் பெற்று உதவி ஆய்வாளர் பதவியை தனது மகனுக்கு பெற்றுத்தர முயன்றார். காவல் துறைப் பணியை விரும்பாத இராமலிங்கர் தனது வீட்டை விட்டு வெளியேறி 15 நாள்கள் சுற்றித்திரிந்தார். தன் மகனையும் காவல்துறையில் பணியாற்றச் செய்ய வேண்டும் என்று பெருமுயற்சி எடுத்துக் கொண்ட அவரது எண்ணம் நிறைவேறாமல் போய்விட்டது. இதனால் அவரது தந்தை அவரை மீண்டும் அழைத்து நாமக்கல் வட்டாட்சியர் அலுவலகத்தில் எழுத்தர் பணியை வாங்கித் தந்தார். இவ்வேளையில் மனமில்லாத இராமலிங்கர் சரிவர தனது பணிகளைச் செய்யாமல் பணியை உதறி வெளியேறினார்.

அதன்பின் நாமக்கல் தொடக்கப்பள்ளியொன்றில் ஆசிரியர் வேலையில் தந்தையார் அமர வைத்தார். அப்பணியிலும் ஈடுபாடு இல்லாமல் அடிக்கடி அரசியல் கூட்டங்களில் கலந்து கொண்டு புரட்சிக் கனல் தெறிக்கப் பேசி வந்தார். இதன் காரணமாக தலைமையாசிரியர் அவரை வேலையில் இருந்து நீக்கினார். அதன் பிறகே அரசியலில் முழு ஈடுபாடு காட்டி அதில் ஈடுபடலானார்.

இராமலிங்கரின் ஓவியம்: புகைப்படம் போல் அதே வடிவில் தோற்றமிருக்குமாறு வரையும் திறமைபெற்ற கவிஞர், இவரது ஆசிரியராக இருந்த ஒரு ஆங்கிலேயர், எல்லியட் என்று பெயர்,





அவர் இவரது ஆற்றலை வளர்க்க உதவினார். இவர் ஓவியங்கள் நல்ல விலை போயின. அப்படி இவர் வரைந்த ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் ஓவியமொன்றை தில்லியில் நடந்த அவரது முடிசூட்டு விழாவில் பரிசளிப்பதற்காக 1912 இல் தில்லிக்குப் பயணமானார். ஓவியத்தைப் பார்த்து மன்னர் குடும்பம் இவருக்கு ஒரு தங்கப் பதக்கத்தை அளித்தது.

ஓவியம் தவிர இவருக்கு கவிதை புனையும் ஆற்றலும் இருந்தது. 1924 ஆம் ஆண்டில் காங்கிரஸ் தலைவர் எஸ்.சீனிவாச ஐயங்கார் அறிவித்த ஒரு போட்டியில் தேசபக்திப் பாடல்களை எழுதித் தங்கப் பதக்கம் பரிசு பெற்றார். அதுமுதல் இவர் பல கவிதைகளைப் புனைந்து தள்ளினார்.

குடத்திற்குள் இட்ட விளக்காக விளங்கிய இவரது கவிதைத்திறன் 1930 இல் உப்பு சத்தியாக்கிரகத்துக்காக எழுதிய “கத்தியின்றி” பாடல் மூலம் நாடு முழுவதும் பிரபலமானார். இவரது பாடல்களை சங்கு கணேசன் தனது “சுதந்திரச் சங்கு” பத்திரிகையில் வெளியிட்டு வந்தார்.

கவிஞராகவும் ஓவியராகவும் திகழ்ந்த கவிஞர், திருக்குறளுக்குப் புதிய உரை எழுதியவர். பல்சுவைப் பாடல்கள் எழுதியவர். தவிர, அவர் சிறந்த நாவலாசிரியர். அவருடைய தன் வரலாறான “என் கதை’யே நாவல் படிப்பதுபோல் விறுவிறுப்பாகவும் சுவையாகவும் இருக்கும். இவர் எழுதிய “மலைக்கள்ளன்’, “மரகதவல்லி’, “கற்பகவல்லி’, “காதல் திருமணம்‘ ஆகிய புதினங்கள் வாசகர்களால் ரசித்துப் பாராட்டப்பட்டவை. “காந்தி அஞ்சலி” எனும் கவிதைத் தொகுதி நல்ல வரவேற்பைப் பெற்றது.

“அவளும் அவனும்‘ என்ற சிறு காவியத்தை நாமக்கல் கவிஞர் எழுதியிருப்பது பலருக்குத் தெரியாது. காவியம் என்றால் காவியத்துக்கான அமைப்புடன் கடவுள் வாழ்த்து, ஆற்றுப்படலம், நாட்டுப் படலம் என்ற லட்சணங்களுடன் எல்லாம் அமைய வேண்டும் என்ற காவிய இலக்கணத்தை மீறிய எளிய நடையில் அமைந்த கதைப் பாடல் “அவளும் அவனும்‘ அந்த நாளில் இளைஞர்களால் பாராட்டப்பட்டது. இவரது மலைக்கள்ளன் எனும் நெடுங்கதை எம்.ஜி.ரமச்சந்திரன் பானுமதி நடிக்க கோவை பக்ஷிராஜா ஸ்டுடியோவினரால் திரைப்படமாக்கப்பட்டு பெரும் வெற்றி பெற்றது. அந்தக் கதை இந்திய மொழிகள் பலவற்றிலும் தயாரிக்கப்பட்டது.

பாரதியார் பாராட்டு: நாடகக் கலையிலும் கவிஞர் நாட்டமுடையவர். அப்போது நாமக்கல்லில் வாழ்ந்து வந்த பிரபல நடிகர் எஸ்.ஜி.கிட்டப்பா, கவிஞருக்குப் பிள்ளைப் பிராய நண்பர். அவரின் நடிப்பையும், குரல் வளத்தையும் கண்டு வியந்த கவிஞர், நாடகத்தில், எஸ்.ஜி.கிட்டப்பாவுக்குப் பல பாடல்கள் எழுதிக் கொடுத்தார். எஸ்.ஜி.கிட்டப்பாவின் நாடகத்தைப்



பார்க்கப் பார்க்க இராமலிங்கத்துக்கும் நாட்டு நடப்பில் நாட்டம் ஏற்பட்டது.

காரைக்குடிக்கு பாரதியார் வந்திருப்பதாக அறிந்த நாமக்கல் கவிஞருக்கு பாரதியாரைச் சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டது. ஓவியம் வரைவதிலும் கெட்டிக்காரர் என்று பாரதியாருக்கு நாமக்கல் கவிஞரை அறிமுகப்படுத்தினர். கவிதையும் எழுதுவார் என்று குறிப்பிட்டனர். கவிதை ஒன்று சொல்லுமாறு பாரதியார் கேட்டார்.

எஸ்.ஜி.கிட்டப்பா நாடகத்துக்காக தாம் எழுதிக் கொடுத்த “தம்மரசைப் பிறர் ஆள விட்டுவிட்டுத் தாம் வணங்கிக் கை கட்டி நின்ற பேரும்‘ என்ற பாடலைப் பாடத் தொடங்கினார். பாடல் முழுவதையும் கேட்ட பாரதியார், “பலே பாண்டியா! பிள்ளை, நீர் ஒரு புலவன் என்பதில் ஐயமில்லை. “தம்மரசைப் பிறர் ஆள விட்டுவிட்டுத் தாம் வணங்கிக் கை கட்டி நின்ற பேரும்...’ பலே, பலே இந்த ஓர் அடியே போதும்’’ என்று பாராட்டித் தட்டிக் கொடுத்தார்.

1904—இல் வைஸ்சிராயாக இருந்த கர்ஸன், வங்காளத்தை இரண்டாகப் பிரித்தார். இந்தப் பிரிவினை அடிமைத்தனத்தில் மூழ்கியிருந்த பாரத மக்களைச் சுதந்திர வேட்கை கொள்ளச் செய்தது.

கவிஞர் பேச்சுத் திறத்தால் திருச்சி மாவட்டத்தில் பிரபலமாகிவிட்டார். திலகரும், காந்தியடிகளும் மக்களிடையே தேசப்பற்றுக் கனலை வளர்க்கத் தொடங்கினர். காந்தியடிகளின் அஹிம்சை, சத்தியாக்கிரகம் என்ற இரு கொள்கைகளும் கவிஞரை ஈர்த்தன. அதுமுதல் முழுக்க முழுக்கக் காந்தியக் கவிஞராக மாறிவிட்டார். 1906 ஆம் ஆண்டு முதல் நாட்டுச் சுதந்திரத்தில் வேட்கை பிறந்தது. இவர் கரூரில் தனது சகோதரி வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். 1

வேதாரண்யம் கடற்கரையில் உப்புக் காய்ச்சுவதற்கான பாதயாத்திரையை ராஜாஜி தலைமையில், பாரதியாரின் பாடல்களைப் பாடிக்கொண்டே தொண்டர்கள் அணிவகுத்து நடைப்பயணம் சென்றனர். அப்போதுதான் நாமக்கல் கவிஞர் எழுதிய “கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்’ என்ற பாடலையும் தொண்டர்கள் உற்சாகத்தோடு பாடிக்கொண்டே சென்றனர். பிற்காலத்தில் அந்தப் பாடலை எழுதியவர் மகாகவி பாரதியாரோ என்ற ஐயம் ஏற்படும் அளவுக்கு அந்தப் பாடலும், எழுதிய கவிஞரும் புகழ் பெற்றனர்.

சுதந்திரப் போராட்டத்தில் முதன் முதலாக 1932 இல் இவருக்கு ஓராண்டு சிறை தண்டனை கிடைத்தது. சுதந்திரம் நெருங்கி வந்த சமயத்தில் இவரது கவிதைகள் பெரும் புகழ்பெற்று தமிழகமெங்கும் இவருக்குப் பாராட்டும் புகழும் ஈட்டித் தந்தன.

1937—ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியினர் தேர்தலில் போட்டியிட்டனர். கவிஞர் சேலம் நகராட்சி உறுப்பினராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து கவிஞரின் காங்கிரஸ் பணி தீவிரமானது.



மகாகவி பாரதியாரைச் சந்தித்திருக்கிறார். அவரால் பாராட்டப் பெற்றிருக்கிறார்.

1945இல் இவரைப் பாராட்டி சென்னையில் நடந்த விழாவில் காமராஜ், திரு.வி.க., பி.ராமமூர்த்தி, கல்கி போன்றவர்கள் கலந்து கொண்டு இவரைப் பாராட்டினார்கள்.

அரசவைக் கவிஞர்: இந்திய சுதந்திரத்துக்குப் பிறகு 1949இல் ஆகஸ்ட் 15 சுதந்திரத் திருநாளில் அப்போதைய சென்னை மாகாண கவர்னர் பவநகர் மகாராஜா தலைமையில் இவருக்கு ‘அரசவைக் கவிஞர்’ எனும் பதவி வழங்கப்பட்டது. 1956 ஆண்டிலும் பின்னர் 1962ஆம் ஆண்டிலும் தமிழக சட்ட மேலவை உறுப்பினராக இவர் செயல்பட்டார்.

‘பத்மபூஷன்’ விருது: மத்திய அரசு 1971 இல் இவருக்கு தில்லியில் ‘பத்மபூஷன்’ விருதளித்து பாராட்டியது.

மறைவு: 84 ஆண்டுகள் நிறை வாழ்வு வாழ்ந்த தேசிய, காந்தியக் கவிஞர், காவிய ஓவியர் நாமக்கல் வெ.இராமலிங்கம் பிள்ளை 1972—ஆம் ஆண்டு ஆகஸ்டு 24 ஆம் தேதி இரவு 2 மணியளவில் மாரடைப்பு ஏற்பட்டு சென்னையில், தாம் போற்றிய தமிழ்கூறு நல்லுலகைவிட்டு விண்ணுலகு அடைந்தார்.

காங்கிரஸ் இயக்கத்துக்குக் கவிஞரின் கவிதைகள் பெரிதும் உறுதுணையாக இருந்தன. காங்கிரஸ் கவிஞர், தேசத் தொண்டர் என்றெல்லாம் தமிழகத் தேசியவாதிகளால் பாராட்டப்பட்ட கவிஞருக்கு வாழ்வளித்தது ஓவியக்கலையே. தன் வறுமையை வெளியே புலப்படுத்தாமல் கௌரவமாக வாழ்க்கையைக் கம்பீரமாக நடத்தியவர் கவிஞர். அவர் கவிதையின் பெருமையை உணர்ந்த தேசபக்தர் சின்ன அண்ணாமலை அவருடைய நூல்களை வெளியிடத் தொடங்கிய பிறகுதான் கவிஞர் வாழ்க்கையில் மெல்ல மெல்ல வறுமை விலகத் தொடங்கியது. தேவகோட்டை தியாகி சின்ன அண்ணாமலை, சென்னைக்குக் குடியேறி, “தமிழ்ப்பண்ணை’ என்ற புத்தக வெளியீட்டகத்தைத் தொடங்கினார். அதன் மூலம் நாமக்கல்லாரின் நூல்கள் பிரசுரம் செய்யப்பட்டன.

சின்ன அண்ணாமலை சிறந்த பேச்சாளர். அவரது நகைச்சுவை மிகவும் பிரபலம். சங்கப்பலகை எனும் ஒரு பத்திரிகையையும் அவர் நடத்தினார். ம.பொ.சி. தலைவராக இருந்த தமிழரசுக் கழகத்தின் தூண்களில் அவரும் ஒருவர். இவர்

நினைவு இல்லம்: ‘தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா’ என்கிற வீரநடைக்கு வித்திட்ட அவரின் நினைவாக அவர் வாழ்ந்த இல்லத்தை தமிழக அரசு நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம் ஆக்கியுள்ளது. இதில் நூலகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மேலும் சென்னையிலுள்ள அரசு தலைமைச் செயலக பத்து மாடிக் கட்டிடத்திற்கு இவரது பெயர் சூட்டியுள்ளது. தட்டாரத் தெரு என்று அழைக்கப்பட்டு வந்த இவர் வாழ்ந்த தெரு கவிஞர் இராமலிங்கம் தெரு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சேலம் அருங்காட்சியகத்தில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அவர்களின் உடைமைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

புகழ் பெற்ற மேற்கோள்கள்:

‘கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது’
தமிழன் என்றோர் இனமுன்று
தனியே அதற்கோர் குணமுண்டு’
‘தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா’
‘கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்




கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்

படைப்புகளில் சில:

மலைக்கள்ளன் (நாவல்)
காணாமல் போன கல்யாணப் பெண் (நாவல்)
பிரார்த்தனை (கவிதை)
நாமக்கல் கவிஞர் பாடல்கள்
திருக்குறளும் பரிமேலழகரும்
திருவள்ளுவர் திடுக்கிடுவார்
திருக்குறள் புது உரை
கம்பனும் வால்மீகியும்
கம்பன் கவிதை இன்பக் குவியல்
என்கதை (சுயசரிதம்)
அவனும் அவளும் (கவிதை)
சங்கொலி (கவிதை)
மாமன் மகள் (நாடகம்)
அரவணை சுந்தரம் (நாடகம்)

கவிஞரின் நாட்டுப் பற்றைப் போற்றும் வகையில் மாநில அரசு அவரை அரசவைக் கவிஞராகவும், பின்னர் தமிழக சட்ட மேலவை உறுப்பினராகவும் நியமித்துச் சிறப்பித்தது.

இன்று தமிழ், தமிழன், தமிழ்நாடு என்ற முழக்கம் எங்கும் ஒலிக்கிறது. "தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு; அமிழ்தம் அவனுடைய வழியாகும்; அன்பே அவனுடைய மொழியாகும்' என்ற நாமக்கல் கவிஞரின் வரிகளை இன்று பெருமையாக முணுமுணுக்காதவர்களே கிடையாது என்று கூறலாம்.

# சிவகாமியின்




## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

### விபரீதம் 54

மாமல்லர் தமது நிலை குலைந்த நெஞ்சைத் திடப்படுத்திக் கொண்டு, கனிவு ததும்பிய கண்களால் சிவகாமியை நோக்கினார்.

“சிவகாமி! உன்னுடைய நம்பிக்கை வீணாய்ப் போகவில்லையே! உனக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத்தானே வந்திருக்கிறேன்? நூறு காத தூரம் காடும் மலையும் நதியும் கடந்து வந்திருக்கிறேன். பசி பட்டினி பாராமல் இராத் தூக்கமில்லாமல் வந்திருக்கிறேன். நான் ஏறி வந்த குதிரை ஏறக்குறையச் செத்து விழும்படி அவ்வளவு வேகமாய் வந்தேன். சற்று முன்பு நான் கூறிய கடுமொழிகளையெல்லாம் மறந்துவிடு. யார் மேலேயோ வந்த கோபத்தை உன் மீது காட்டினேன். இத்தனை நாளைக்குப் பிறகு நம்முடைய சந்திப்பு இப்படிக் கோபமும் தாபமுமாயிருக்குமென்று நான் நினைக்கவில்லை. எவ்வளவோ ஆசையோடு எத்தனையோ மனக்கோட்டை கட்டிக் கொண்டு வந்தேன்! — போகட்டும், சிவகாமி! புறப்படு, போகலாம்!”




“பிரபு! மன்னியுங்கள்! இப்போது நான் வரமாட்டேன், என் சபதம் நிறைவேறிய பிறகுதான் வருவேன்.”

“சிவகாமி! இது என்ன வார்த்தை? என்னுடன் வருவதற்கு உனக்கு விருப்பம் இல்லையா, என்ன? தாமதிக்க நேரமில்லை.”

“இளவரசே! என் சபதத்தை நிறைவேற்றி வையுங்கள். பாதகன் புலிகேசியைக் கொன்று, வாதாபி நகரத்தைச் சுட்டெரித்து விட்டு, உங்கள் அடிமையின் கையைப் பிடித்து அழைத்துச் செல்லுங்கள். அப்போது நிழல் போல் உங்களைத் தொடர்ந்து வருவேன்.”

“சிவகாமி! உன் சபதத்தை அவசியம் நிறைவேற்றி வைக்கிறேன். ஆனால் அதை நிறைவேற்றுவது எளிதல்ல. பெரும்படை திரட்டிக் கொண்டு, தக்க ஆயுத பலத்தோடு வரவேண்டும். இதற்கெல்லாம் அவகாசம் வேண்டும். பல வருஷங்கள் ஆகலாம்...”

“பல்லவ குமாரர்தானா இப்படிப் பேசுகிறீர்கள்? வீரமாமல்லரா இப்படிப் பேசுகிறீர்கள்? புலிகேசியைக் கொன்று வாதாபியை வெற்றி கொள்வது அவ்வளவு கடினமான காரியமா? இந்தப் பேதை தெரியாமல் சபதம் செய்து விட்டேனே?... பல்லவ குமாரா! தாங்கள் காஞ்சிக்குப் போய் இராஜ்ய காரியங்களைக் கவனியுங்கள். இந்த ஏழைச் சிற்பியின் மகளைப்பற்றிக் கவலை வேண்டாம்! நான் என்ன பாண்டிய ராஜகுமாரியா, சோழன் திருமகளா தாங்கள் கவலைப்படுவதற்கு? நான் எக்கேடு கெட்டால் தங்களுக்கென்ன? என் சபதம் எப்படிப் போனால் என்ன?” என்று சிவகாமி கசப்புடன் பேசினாள்.

“சிவகாமி! நீதான் பேசுகிறாயா? நீ பழைய சிவகாமிதானா?” என்றார் மாமல்லர்.

“இல்லை, பிரபு! நான் பழைய சிவகாமி இல்லை. புதிய சிவகாமியாகி விட்டேன். என் வாழ்க்கை கசந்துவிட்டது, என் மனம் பேதலித்து விட்டது. இந்தப் புதிய சிவகாமியை மறந்து விடுங்கள். ஒரு சமயம் தங்களிடம், ‘அடியாளை மறக்க வேண்டாம்’ என்று வரம் கேட்டேன். இப்போது, ‘மறந்துவிடுங்கள்’ என்று வரம் கேட்கிறேன்!” என்றாள்




சிவகாமி.

"சிவகாமி! கேள்! நீ புதிய சிவகாமியானாலும் நான் பழைய மாமல்லன்தான். உன்னைப் பிரிந்திருந்த காலத்திலெல்லாம் ஒரு கணமேனும் உன்னை நான் மறக்கவில்லை. இரவிலும், பகலிலும், கனவிலும் நனவிலும், அரண்மனையிலும் போர்க்களத்திலும், என்ன செய்தாலும் யாரோடு பேசினாலும், என் உள்ளத்தைவிட்டு நீ ஒரு கணமும் அகலவில்லை. உன் பேரில் நான் கொண்ட பரிசுத்தமான காதலின் மேல் ஆணை வைத்துச் சொல்லுகிறேன். நீ செய்த சபதத்தை நிறைவேற்றி வைக்கிறேன். இப்போது என்னோடு புறப்படு!" என்று மாமல்லர் உணர்ச்சி மிகுதியினால் நாத் தழு தழுக்கக் கூறினார்.


கல்லையும் கனிய வைக்கக்கூடிய மேற்படி மொழிகள் சிவகாமியின் மனத்தைக் கனியச் செய்யவில்லை. பட்ட கஷ்டங்களினாலும் பார்த்த பயங்கரங்களினாலும் கல்லினும் கடினமாகியிருந்தது அவள் உள்ளம்.


"காதலாம் காதல்! காதலும் கல்யாணமும் இங்கே யாருக்கு வேண்டும்?" என்றாள் சிவகாமி.

"நிஜமாகத்தான் சொல்கிறாயா? காதலும் கலியாணமும் உனக்கு வேண்டாமா?" என்று மாமல்லர் ஆத்திரத்தோடு கேட்டார்.

"நிஜமாகத்தான் சொல்கிறேன். காதலும் கலியாணமும் எனக்கு வேண்டாம். பழிதான் வேண்டும். வஞ்சம் தீர்க்க வேண்டும். புலிகேசி சாகவேண்டும். வாதாபி எரிய வேண்டும். வாதாபி மக்கள் அலறிப் புடைத்துக் கொண்டு அங்குமிங்கும் ஓட வேண்டும். வேறொன்றும் எனக்கு வேண்டாம்!"

மாமல்லர் மீண்டும் நயமான வார்த்தைகள்






கூறினார். “சிவகாமி! உன் விருப்பத்தைத் தெரிந்து கொண்டேன். உன்னைக் காட்டிலும் நூறு மடங்கு என் உள்ளம் கொதித்துக் கொண்டிருக்கிறது. உன்னைச் சிறைப்பிடித்து வந்து அவமானப்படுத்திய பாதகனைப் பழிவாங்க என் மனம் துடித்துக் கொண்டிருக்கிறது. கட்டாயம் உன் சபதத்தை நிறைவேற்றி வைக்கிறேன். நீ மட்டும் இப்போது என்னுடன் புறப்பட்டு வந்துவிடு!”

“வரமாட்டேன், இளவரசே! ஆயனச் சிற்பியாரிடம், அவருடைய மகள் இறந்து போய்விட்டாள் என்று சொல்லி விடுங்கள்!”

“சிவகாமி! இது என்ன பிடிவாதம்? கடைசி வார்த்தையாகச் சொல்லுகிறேன், கேள்! உன்னுடைய சபதத்தை நான் கட்டாயம் நிறைவேற்றி வைக்கிறேன். ஆனால், இந்தச் சமயம் என்னுடன் நீ வராவிட்டால் என் மனம் கசந்து போய்விடும். என் அன்பை அடியோடு இழந்து விடுவாய்!”

“அன்பு வேண்டாம் சுவாமி! சபதத்தை நிறைவேற்றுங்கள்.”

“பெண்ணே! பல்லவ குலத்தினர் ஒரு நாளும் சொன்ன சொல் தவறுவதில்லை.”

“இளவரசே! ஆயனச் சிற்பியின் மகளும் சொன்ன சொல்லை மாற்றுவதில்லை!”

“ஆகா! இதென்ன அகம்பாவம்?” என்றார் மாமல்லர்.

“ஆம், இளவரசே! எனக்கு அகம்பாவந்தான். ஏன் இருக்கக் கூடாது? பாண்டியன் மகளுக்கும், சேர ராஜகுமாரிக்குந்தான் அகம்பாவம் இருக்கலாமா? நான் சிற்பியின் மகள்தான், ஆனாலும் செந்தமிழ் நாட்டு வீரப்பெண் குலத்திலே பிறந்தவள். காதலன் கழுத்திலே மாலை சூட்டிப் போர்க்களத்துக்கு அனுப்பிய மாதர் வம்சத்தில் பிறந்தவள். கண்ணகித் தெய்வம் வாழ்ந்த நாட்டில் நானும் பிறந்தேன். எனக்கு ஏன் அகம்பாவம் இருக்கக்கூடாது, பிரபு?”

சிவகாமியின் மனத்தைத் திருப்ப மேலே என்ன சொல்லலாம் என்று அவர் சிந்திப்பதற்குள், சேனாபதி பரஞ்சோதி பரபரப்புடன் உள்ளே வந்தார், மாமல்லரின் காதில் ஏதோ சொன்னார்.

மாமல்லரின் முகத்தில் ஒரு கணம் திகிலின் அறிகுறி தோன்றியது. மறுகணம் சமாளித்துக் கொண்டார்.

“சேனாபதி! இந்த மூடப் பெண்ணின் பிடிவாதத்துக்கு முன்னால் நம்முடைய திட்டமெல்லாம் சின்னா பின்னமாகிவிடும் போலிருக்கிறது!” என்றார்.

சிவகாமியின் பக்கம் கோபமாகத் திரும்பி, “பெண்ணே! நீ வருவாயா? மாட்டாயா? உன்னுடன் வாதமிட்டுக் கொண்டிருக்க நேரமில்லை!” என்றார் மாமல்லர்.

அப்போது சேனாபதி பரஞ்சோதி குறுக்கிட்டு, “அம்மணி, எங்களுடைய நிலைமையைத் தெரிந்து கொள்ளுங்கள். எதிரிகளின் கோட்டைக்குள்ளே தனியாக நாலு பேர் வந்திருக்கிறோம். கோட்டைச் சுவர் மீது நூலேணியுடன் கண்ணனும் அவன் தந்தையும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். கோட்டைக்கு வெளியில் இந்த நிமிஷத்தில், நரபலி கொடுக்கும் காபாலிகர்கள் எங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயோ அந்தக் கள்ள பிக்ஷு நாங்கள் வந்திருப்பதை அறிந்துகொண்டு, இதோ வீதி முனையில் வந்து கொண்டிருக்கிறார். தேவி! இந்த நிலைமையில் தாங்கள் இப்படி வீண் விவாதம் வளர்த்தக் கூடாது...” என்றார்.



'பெண் புத்தி பேதமையுடைத்து' என்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா? அது உண்மை என்பதை நிரூபிக்கும்படி சிவகாமி அப்போது பேசினாள்.

"ஐயா! பல்லவ குமாரரும் அவருடைய அருமைத் தோழரும் கேவலம் மண்டை ஓட்டில் பிச்சை வாங்கும் காபாலிகருக்கும், காவித்துணி தரித்த புத்த பிக்ஷுவுக்கும் பயந்து ஓடுவார்கள் என்பது இதுவரையில் எனக்குத் தெரியாமலிருந்தது. அதற்காக என்னை மன்னியுங்கள். நீங்கள் தப்பிப் பிழைப்பதை நான் குறுக்கே நின்று மறிக்கவில்லையே! தாராளமாகப் போகலாம்" என்றாள்.

பல்லவ குமாரருக்குக் காலாக்னியையொத்த கோபம் வந்தது. "அடி பாதகி! சண்டாளி! இதன் பயனை நீ அனுபவிப்பாய்!" என்று சீறினார்.

பின்னர் பரஞ்சோதியைப் பார்த்து "சேனாபதி! இந்த வஞ்சகப் பாதகியின் நோக்கம் இப்போது தெரிந்தது. கள்ள பிக்ஷுவிடம் நம்மைக் காட்டிக் கொடுத்துவிட வேண்டும் என்பது இவள் எண்ணம், வாரும் போகலாம்!" என்றார்.

அப்போது பரஞ்சோதி, "பிரபு! மன்னிக்க வேண்டும், நான் எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். ஆயனர் புதல்வி அப்படி வஞ்சகம் செய்யக் கூடியவர் அல்ல. தான் செய்த சபதத்தை முன்னிட்டுத்தான் 'வர மாட்டேன்' என்கிறார்...." என்பதற்குள்ளே, மாமல்லர் குறுக்கிட்டார்.

"தளபதி பெண்களின் வஞ்சகம் உமக்குத் தெரியாது. சபதமாம், சபதம்! வெறும் பொய்! வாதாபிச் சக்கரவர்த்தியின் மாளிகையை விட்டு வருவதற்கு இவளுக்கு விருப்பமில்லை, வாரும் போகலாம்!" என்று மாமல்லர் சேனாபதியின் கையைப்பற்றி இழுக்கத் தொடங்கினார்.

தளபதி பரஞ்சோதி நகராமல் நின்றார். "பிரபு! இது நியாயமல்ல. சிவகாமி அம்மையை இங்கு விட்டுப் போவது பெரும் பிசகு!... அவராக வருவதற்கு மறுத்தால், நாம் பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு போக வேண்டியதுதான்!..." என்றார்.

இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததும் சிவகாமியின் தேகமெல்லாம் சிலிர்த்தது. ஒரு சமயம் மாமல்லர் தன்னை விஷநாகம் தீண்டாமல் கட்டிக் காத்ததாகக் கனவு கண்டதைப் பற்றிச் சொன்னது அவளுக்கு நினைவு வந்தது. 'அந்தக் கனவு இப்போது மெய்யாகாதா? சேனாதிபதியின் யோசனைப்படி மாமல்லர் தன்னை நெருங்கி வந்து கட்டிப் பிடித்துத் தூக்கிக் கொண்டு போக மாட்டாரா?' என்று எண்ணினாள். ஆகா! அம்மாதிரி மாமல்லர் செய்திருந்தால், பின்னால் எவ்வளவு விபரீதங்கள் நேராமல் போயிருக்கும்!

விதிவசத்தினால் மாமல்லர் அவ்வாறு செய்ய மனங்கொள்ளவில்லை. "வேண்டாம், சேனாபதி! வேண்டாம், இஷ்டமில்லாத பெண்ணை நாம் பலவந்தப்படுத்தி அழைத்துப் போக வேண்டியதில்லை. இவளுக்கு நான் கொடுத்த வாக்குறுதியை ஒரு சமயம் நிறைவேற்றுவேன். பிறகு இஷ்டமானால் வரட்டும், அதுவரையில் அந்தக் கள்ள பிக்ஷுவையே கட்டிக்கொண்டு அழட்டும்!..." என்று மாமல்லர் சொல்லிக் கொண்டிருக்கும் போது சத்ருக்னனும் குண்டோ தரனும் உள்ளே ஓடோ டியும் வந்தார்கள்.

"பிரபு! பிக்ஷு வீதி முனையில் வருகிறார். அவருடன் வந்த வீரர்களில் பாதிப் பேர் வீட்டின் கொல்லைப் பக்கமாகப் போகிறார்கள்!" என்று சத்ருக்னன் மொழி குளறிக் கூறினான்.

பரஞ்சோதி மறுபடியும் சிவகாமியின் பக்கம் நோக்கிப் பரபரப்புடன், "அம்மா!..." என்றார்.

"வேண்டாம், தளபதி! வேண்டாம். இந்தக் கிராதகி நம்மைக் கள்ள பிக்ஷுவிடம் காட்டிக் கொடுக்கத்தான் பார்க்கிறாள்! வாரும் போகலாம்!" என்று மாமல்லர் இரைந்து கூறிப் பரஞ் சோதியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அம்மாளிகையின் பின்புறமாக விரைந்தார்.

(சபதம் தொடரும்)

சுற்றுச்சூழல்

# ஆதாரம் அழிக்கும்

### சாட்ஜிபிடி இவ்வளவு தண்ணீரைப் பயன்படுத்துகிறதா?


செயற்கை நுண்ணறிவின் (ஏஐ) பயன்பாடு அசுர வேகத்தில் அதிகரித்து வருகிறது. ஆனால் இந்தத் தொழில்நுட்பத்துக்கு அதிக தண்ணீர் தேவைப்படுகிறது. குளிரூட்டுவதற்கும், அதிக அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும் தண்ணீர் அவசியமாகிறது.

உலகில் பாதி மக்கள் ஏற்கனவே தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர். பருவநிலை மாற்றமும், வளர்ந்து வரும் தேவையும் இந்தப் பற்றாக்குறையை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்கிறது ஐக்கிய நாடுகள் சபை. இந்நிலையில், ஏஐ (செயற்கை நுண்ணறிவு) தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்தால், தண்ணீர் பற்றாக்குறை இன்னும் அதிகரிக்குமா?

ஏஐ எவ்வளவு தண்ணீரைப் பயன்படுத்துகிறது?

சாட்ஜிபிடியிடம் கேட்கப்படும் ஒரு கேள்விக்கு ஒரு டீஸ்பூன் தண்ணீரில் 15—ல் ஒரு பகுதி பயன்படுகிறது என்கிறார் ஓபன்ஏஐயின் தலைமை செயல் அதிகாரி சாம் ஆல்ட்மேன். ஆனால், கலிஃபோர்னியா மற்றும் டெக்சாஸைச் சேர்ந்த அமெரிக்க கல்வியாளர்களின் ஆய்வு, வேறு கருத்தைக் முன்வைக்கிறது. **GPT—3** மாதிரியில் 10 முதல் 50 பதில்களுக்கு அரை லிட்டர் தண்ணீர் (அதாவது, ஒரு பதிலுக்கு 2 முதல் 10 டீஸ்பூன் தண்ணீர்) பயன்படுவதாக அவர்கள் கண்டறிந்தனர். கேள்வியின் வகை, பதிலின் நீளம், பதில் செயலாக்கப்படும் இடம் மற்றும் கணக்கீட்டில் கருத்தில் கொள்ளப்படும் காரணிகளைப் பொறுத்து தண்ணீர் பயன்பாட்டின் அளவு மாறுபடுகிறது.

10—50 கேள்விகளுக்கு 500 மில்லி தண்ணீர் தேவைப்படுவதாக அமெரிக்க கல்வியாளர்களின் மதிப்பீடு செய்துள்ளனர். இது நிலக்கரி, எரிவாயு அல்லது அணுமின் நிலையங்களில் மின்சார உற்பத்திக்காகப் பயன்படும் தண்ணீரையும் உள்ளடக்கியது. ஆனால், சாம் ஆல்ட்மேனின் கணக்கு இதை உள்ளடக்காமல் இருக்கலாம். கேட்டபோது, ஓபன்ஏஐ தனது கணக்கீடுகளின் விவரங்களை அளிக்கவில்லை. இருப்பினும் தண்ணீர் பயன்பாடு படிப்படியாக அதிகரித்து வருகிறது.








சாரா இப்ராஹிம்

ஒவ்வொரு நாளும் ஒரு பில்லியன் (100 கோடி) கேள்விகளுக்கு சாட்ஜிபிடி பதிலளிக்கிறது. இது பல ஏஐ (செயற்கை நுண்ணறிவு) புரோகிராம்களில் ஒன்று மட்டுமே எனக் கூறுகிறது ஓபன்ஏஐ. 2027 ஆம் ஆண்டுக்குள், ஏஐ தொழில்துறை ஒவ்வொரு ஆண்டும் டென்மார்க் முழுவதும் பயன்படுத்தும் தண்ணீரை விட 4 முதல் 6 மடங்கு அதிக தண்ணீரை பயன்படுத்தும் என்று அமெரிக்க ஆய்வு ஒன்று மதிப்பிடுகிறது.“நாம் எவ்வளவு அதிகமாக ஏஐ உபயோகிக்கிறோமோ, அவ்வளவு தண்ணீரை நாம் பயன்படுத்துகிறோம்,” என்று அந்த ஆய்வு ஆசிரியர்களில் ஒருவரான கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஷோலி ரென் கூறுகிறார்.

### ஏஐ தண்ணீரை எவ்வாறு பயன்படுத்துகிறது?

மின்னஞ்சல் எழுதுவது, கட்டுரைகள் எழுதுதல் அல்லது டீப்ஃபேக் வீடியோக்கள் உருவாக்குதல் போன்ற ஆன்லைன் செயல்பாடுகள், தரவு மையங்கள் எனப்படும் பெரிய கட்டடங்களில் உள்ள கணினி சேவையகங்களால் செயலாக்கப்படுகின்றன. இந்த தரவு மையங்கள் சில நேரங்களில் பல கால்பந்து மைதானங்களைப் போன்று, பெரிய அளவில் கட்டப்படுகின்றன. கணினிகள் வழியாக மின்சாரம் பாய்வதால் இந்த அமைப்புகள் சூடாகின்றன.






இவற்றை குளிர்விக்க, பொதுவாக சுத்தமான நன்னீர் பயன்படுத்தப்படுகிறது. குளிரூட்டல் முறைகள் வேறுபடுகின்றன, ஆனால் சில முறைகள் பயன்படுத்தும் தண்ணீரில் 80% வரை வளிமண்டலத்தில் ஆவியாகிவிடுகிறது. ஷாப்பிங் அல்லது இணையத்தில் தேடுதல் போன்ற வழக்கமான ஆன்லைன் செயல்பாடுகளை விட, ஏஐ பணிகளுக்கு, குறிப்பாக படங்கள் அல்லது வீடியோக்களை உருவாக்குவது போன்ற சிக்கலான செயல்பாடுகளுக்கு, அதிக கணினி சக்தி தேவை. எனவே, இவை மிக அதிக மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றன. சர்வதேச எரிசக்தி ஏஜென்சி **(IEA)** மதிப்பீட்டின்படி, சாட்ஜிபிடியிடம் கேட்கப்படும் ஒரு கேள்விக்கு, கூகுளிடம் கேட்கப்படும் கேள்வியை விட கிட்டத்தட்ட 10 மடங்கு அதிக மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த வித்தியாசத்தை துல்லியமாக அளவிடுவது கடினம். அதிக மின்சார பயன்பாடு அதிக வெப்பத்தை உருவாக்குகிறது. இதனால், கணினிகளை குளிர்விக்க அதிக அளவு குளிர்ச்சி தேவைப்படுகிறது.

ஏஐ க்கான நீர் பயன்பாடு எவ்வளவு வேகமாக அதிகரித்து வருகிறது?


பெரிய ஏஐ (செயற்கை நுண்ணறிவு) தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்கள் ஏஐ செயல்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் தண்ணீரின் அளவை தனியாக வெளியிடவில்லை. ஆனால், அவற்றின் மொத்த தண்ணீர் பயன்பாடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கூகுள், மெட்டா, மற்றும் மைக்ரோசாப்ட் (ஓபன் ஏஐயில் முக்கிய முதலீட்டாளர்) ஆகியவற்றின் சுற்றுச்சூழல் அறிக்கைகளின்படி, 2020 முதல் அவற்றின் தண்ணீர் பயன்பாடு கணிசமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக, கூகுளின் தண்ணீர் பயன்பாடு இந்த காலத்தில் கிட்டத்தட்ட இரு மடங்காகிவிட்டது. அமேசான் வெப் சர்வீஸ் **(AWS)** இதுவரை தண்ணீர் பயன்பாட்டு புள்ளிவிவரங்களை வெளியிடவில்லை.

ஏஐக்கான தேவை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், 2030 ஆம் ஆண்டளவில் தரவு மையங்களின் நீர் பயன்பாடு கிட்டத்தட்ட இரட்டிப்பாகும் என்று சர்வதேச எரிசக்தி ஏஜென்சி **(IEA)** கணித்துள்ளது. இதில் மின்சார உற்பத்திக்கும், கணினி சிப்கள் தயாரிப்பதற்கும் பயன்படும் தண்ணீரும் அடங்கும். 2024 இல் அதன் தரவு மையங்கள் 37 பில்லியன் லிட்டர் தண்ணீரை நீர் ஆதாரங்களில் இருந்து எடுத்தன. இதில் 29 பில்லியன் லிட்டர் தண்ணீர் "நுகரப்பட்டது", அதாவது பெரும்பாலும் ஆவியாகிவிட்டது என கூகுள் கூறுகிறது. இந்த அதிகமான அளவா என்றால்? அது எதனோடு ஒப்பிடுகிறோம் என்பதைப் பொறுத்தது.இந்த அளவு தண்ணீரால், ஐ.நா. பரிந்துரைப்படி, 1.6 மில்லியன் மக்களுக்கு ஒரு நாளைக்கு 50 லிட்டர் என்ற குறைந்தபட்ச தேவையை ஒரு வருடத்திற்கு வழங்க முடியும். அல்லது, கூகுள் கூறுவதன்படி, தென்மேற்கு அமெரிக்காவில் 51 கோல்ஃப் மைதானங்களுக்கு ஒரு வருடத்திற்கு நீர்ப்பாசனம் செய்யலாம்.

வறண்ட பகுதிகளில் தரவு மையங்களை ஏன் உருவாக்க வேண்டும்?

சமீப ஆண்டுகளில், ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா, மற்றும் அமெரிக்காவின் அரிசோனா போன்ற வறட்சி பாதிப்பு உள்ள பகுதிகளில் தரவு மையங்களுக்கு எதிரான உள்ளூர் எதிர்ப்பு, தலைப்பு செய்தியாகியுள்ளது. ஸ்பெயினில், தரவு மையங்களின் விரிவாக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்காக, ‘யுவர் கிளவுட் இஸ் ட்ரையிங் அப் மை ரிவர்’ என்ற சுற்றுச்சூழல் குழு உருவாக்கப்பட்டது. சிலி மற்றும் உருகுவே ஆகிய நாடுகள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கு, தண்ணீர் பயன்பாடு குறித்த பொதுமக்களின் எதிர்ப்புகளைத் தொடர்ந்து, கூகுள் தனது தரவு மையத் திட்டங்களை இடைநிறுத்தியோ அல்லது மாற்றியோ உள்ளது.




என்டிடி டேட்டா நிறுவனம், உலகம் முழுவதும் 150—க்கும் மேற்பட்ட தரவு மையங்களை இயக்குகிறது. வெப்பமான, வறண்ட பகுதிகளில் தரவு மையங்களை அமைப்பதற்கு “ஆர்வம் அதிகரித்து வருவதாக” அதன் தலைமை நிர்வாகி அபிஜித் துபே கூறுகிறார். நிலம் கிடைப்பது, மின் உள்கட்டமைப்பு, சூரிய மற்றும் காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல், மற்றும் சாதகமான விதிமுறைகள் ஆகியவை இந்தப் பகுதிகளை ஈர்க்கக்கூடியதாக மாற்றுகின்றன என்று அவர் விளக்குகிறார்.ஈரப்பதம் அதிகமாக இருக்கும்போது, அரிப்பு (கொரோஷன்) ஏற்படுகிறது. மேலும், கட்டடங்களை குளிர்விக்க அதிக மின்சாரம் தேவைப்படுகிறது. இதனால், வறண்ட பகுதிகள் தரவு மையங்களுக்கு சிறந்த இடங்களாகக் கருதப்படுகின்றன என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். கூகுள், மைக்ரோசாப்ட், மற்றும் மெட்டா ஆகியவை தங்கள் சுற்றுச்சூழல் அறிக்கைகளில், வறண்ட பகுதிகளில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்துவதாகக் கூறுகின்றன.

அந்த நிறுவனங்களின் சமீபத்திய சுற்றுச்சூழல் அறிக்கைகளின்படி, கூகுள் பயன்படுத்தும் தண்ணீரில் 14%, “அதிக” தண்ணீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளிலிருந்தும், மற்றொரு 14% “நடுத்தர” பற்றாக்குறை உள்ள பகுதிகளிலிருந்தும் எடுக்கப்படுகிறது. மைக்ரோசாப்டின் 46% தண்ணீர், “தண்ணீர் அழுத்தம் உள்ள பகுதிகளிலிருந்து” எடுக்கப்படுகிறது.மெட்டாவின் 26% தண்ணீர் “அதிக” அல்லது “மிக அதிக தண்ணீர் அழுத்தம்“ உள்ள பகுதிகளிலிருந்து எடுக்கப்படுகிறது என்றும் அந்த நிறுவனங்கள் வெளியிட அறிக்கைகளின் படி அறியமுடிகிறது. அமேசான் வெப் சர்வீஸ் **(AWS)** தண்ணீர் பயன்பாடு குறித்து எந்த புள்ளிவிவரமும் வெளியிடவில்லை.


குளிரூட்டக்குவதற்கு வேறு வழிகள் உள்ளதா?

உலர் அல்லது காற்றால் குளிரூட்டும் முறைகளைப் பயன்படுத்த முடியும், ஆனால் இவை நீர்




குளிரூட்டல் முறைகளை விட அதிக மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றன என பேராசிரியர் ரென் கூறுகிறார். மைக்ரோசாப்ட், மெட்டா, மற்றும் அமேசான் ஆகியவை குளிரூட்டல் அமைப்புகளை உருவாக்கி வருவதாகக் கூறுகின்றன. இவற்றில், நீர் அல்லது வேறு திரவம் ஆவியாகவோ அல்லது மாற்றப்படவோ தேவையில்லாமல், கணினி உள்ளேயே சுழற்சி செய்யப்படுகிறது.

எதிர்காலத்தில் வறண்ட பகுதிகளில் இத்தகைய மூடிய வளைய அமைப்புகள் பரவலாகத் தேவைப்படும் என்று துபே கருதுகிறார். ஆனால், இந்தத் தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு தேவைப்படும் அந்த தொழில்துறை “இன்னும் ஆரம்ப கட்டத்தில்” தான் உள்ளது என்றும் அவர் கூறுகிறார். ஜெர்மனி, பின்லாந்து, மற்றும் டென்மார்க் போன்ற நாடுகளில், தரவு மையங்களில் இருந்து வெப்பத்தை மீட்டெடுத்து உள்ளூர் வீடுகளுக்கு பயன்படுத்தும் திட்டங்கள் இயங்குகின்றன அல்லது திட்டமிடப்பட்டுள்ளன.





தரவு மையங்களை குளிர்விக்க, நிறுவனங்கள் பொதுவாக சுத்தமான நன்னீரை (குடிநீர் போன்றவை) பயன்படுத்த விரும்புகின்றன. இது பாக்டீரியா வளர்ச்சி, குழாய் அடைப்பு, மற்றும் அரிப்பு ஆகியவற்றின் அபாயத்தைக் குறைக்கிறது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால், சில நிறுவனங்கள் கடல் நீர் அல்லது தொழிற்சாலை கழிவுநீர் போன்ற குடிநீருக்கு தகுதியற்ற நீர் ஆதாரங்களையும் அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன.

சுற்றுச்சூழலுக்கு நன்மை பயக்குமா ?

ஏஐ தொழில்நுட்பம் சுற்றுச்சூழலுக்கு உதவவும் பயன்படுகிறது. எடுத்துக்காட்டாக, சக்திவாய்ந்த கிரீன்ஹவுஸ் வாயுவான மீத்தேன் கசிவைக் கண்டறிய ஏஐ உதவுகிறது. எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்தும் வகையில் போக்குவரத்தை மறுவழிப்படுத்தவும் ஏஐ பயன்படுகிறது.ஏஐயால் உலகெங்கிலும் உள்ள குழந்தைகளுக்கு கல்வி, சுகாதாரம், மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவற்றில் “அளப்பரிய மாற்றத்தை” ஏற்படுத்த முடியும் என்று யுனிசெஃப் (ஐநா குழந்தைகள் நிறுவனம்) புத்தாக்க அலுவலகத்தின் உலகளாவிய இயக்குநர் தாமஸ் டேவின் கூறுகிறார்.

ஏஐ (செயற்கை நுண்ணறிவு) நிறுவனங்கள் “மிகவும் சக்திவாய்ந்த மாதிரிகளை உருவாக்குவதற்கு பதிலாக”, “திறமையான மற்றும் வெளிப்படையான” முறைகளை நோக்கி போட்டியிட வேண்டும் என தாமஸ் டேவின் கூறுகிறார். தொடர்ந்து பேசிய அவர், நிறுவனங்கள் தங்கள் ஏஐ மாதிரிகளை ஓப்பன் சோர்ஸ் ஆக்க வேண்டும். அதாவது, அனைவரும் இந்த மாதிரிகளை பயன்படுத்தவும், மாற்றியமைக்கவும் முடியும் வகையில் உருவாக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

இது பயிற்சி செயல்முறையில் பயன்படும் அதிக மின்சாரம் மற்றும் தண்ணீரின் தேவையைக் குறைக்கும் என்கிறார் டேவின்.




இந்த செயல்முறையில், பெரிய அளவு தரவு உள்ளீடு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் பதில்கள் உருவாக்கப்படுகின்றன. ஆனால், லோரெனா ஜாமே—பலாசி எனும் ஒரு சுயாதீன ஆய்வாளர் மற்றும் எத்திக்கல் டெக் சொசைட்டியின் நிறுவனர், வேறொரு கருத்தை முன்வைக்கிறார்.

பல ஐரோப்பிய அரசுகள், ஐரோப்பிய ஒன்றியம், மற்றும் ஐநா அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்கிய அவர், ஏஐயின் அதிக வளர்ச்சியை சுற்றுச்சூழலுக்கு நிலையானதாக **(sustainable)** ஆக்குவதற்கு “எந்த வழியும் இல்லை” என்று கூறுகிறார். “நாம் ஏஐ (செயற்கை நுண்ணறிவு) தொழில்நுட்பத்தை திறமையாக செய்ய முடியும். ஆனால், அதை மிகவும் திறமையாக்குவது, அதிக பயன்பாட்டை உருவாக்கும்.”“நீண்ட காலத்தில், பெரிய மற்றும் வேகமான ஏஐ அமைப்புகளை உருவாக்கும் இந்த போட்டியைத் தொடர, நம்மிடம் போதுமான மூலப்பொருட்கள் இல்லை” என்றும் அவர் கூறுகிறார்.

தொழில்நுட்ப நிறுவனங்கள் என்ன சொல்கின்றன?

கூகுள், மைக்ரோசாப்ட், ஏடபிள்யூஎஸ் **(Amazon Web Services),** மற்றும் மெட்டா ஆகியவை, உள்ளூர் நிலைமைகளைப் பொறுத்து குளிரூட்டல் தொழில்நுட்பங்களை கவனமாகத் தேர்ந்தெடுப்பதாகக் கூறுகின்றன. இந்நிறுவனங்கள் அனைத்தும் 2030—க்குள் “வாட்டர் பாசிட்டிவ்” **(water positive)** ஆக இருக்க இலக்குகளை நிர்ணயித்துள்ளன. அதாவது இதன் பொருள் என்னவென்றால் , தங்கள் செயல்பாடுகளில், எடுக்கும் தண்ணீரை விட அதிக தண்ணீரை சுற்றுச்சூழலுக்கு திருப்பி வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இதற்காக, அவர்கள், காடுகள் மற்றும் ஈரநிலங்களை மீட்டெடுக்கும் திட்டங்களுக்கு நிதியளிக்கின்றனர். நீர் கசிவுகளைக் கண்டறிய உதவுகின்றனர். நீர்ப்பாசனத்தை மேம்படுத்தும் திட்டங்களை ஆதரிக்கின்றனர்.

ஏடபிள்யூஎஸ், தனது இலக்கை 41% அடைந்துள்ளதாகக் கூறுகிறது. மைக்ரோசாப்ட் இந்த இலக்கை “நோக்கி முன்னேறி வருவதாகக்“ கூறுகிறது. கூகுள் மற்றும் மெட்டாவின் புள்ளிவிவரங்கள், அவர்கள் திருப்பி நிரப்பும் தண்ணீரின் அளவு கணிசமாக அதிகரித்துள்ளதைக் காட்டுகின்றன. ஆனால், யுனிசெஃப்பைச் சேர்ந்த தாமஸ் டேவின், இந்த இலக்குகளை அடைய இன்னும் “நீண்ட தூரம் செல்லவேண்டும் “ எனக் கூறுகிறார்.

நீர் மற்றும் ஆற்றல் திறனை மேம்படுத்த “கடினமாக உழைப்பதாக” ஓபன் ஏஐ கூறுகிறது. மேலும், “கணினி ஆற்றலை சிறப்பாகப் பயன்படுத்துவது மிகவும் முக்கியம்“ என்று வலியுறுத்துகிறது. ஆனால், தண்ணீர் பயன்பாடு குறித்து ஒரே மாதிரியான, தரப்படுத்தப்பட்ட அறிக்கைகள் தேவை. “நாம் அதனை அளவிட முடியாவிட்டால், நிர்வகிக்க முடியாது.”என்கிறார் பேராசிரியர் ஷோலி ரென்.



# மருத்துவத்

## இருமல் தீர்க்கும் சித்த மருத்துவம்

அதிகரிக்கும் காற்று மாசுபாட்டாலும், சுவாச மண்டலத் தொற்றுகளாலும் இருமல் மருந்துகளை நாடுபவர்கள் எண்ணிக்கை அண்மையில் அதிகமாகியுள்ளது. இத்தகைய சூழலில் இருமலுக்கு பயந்த காலம் மாறி, இருமல் மருந்துக்குப் பயப்பட வேண்டிய காலம் தற்போது உருவாகியுள்ளது.

கொஞ்சம் தட்டிப் போட்ட சுக்கும், சிட்டிகை மஞ்சளும், மிளகும், பனங்கற்கண்டும் சேர்ந்த சுக்கு காபியை சுவைக்காதவர் யாருக்கும் இருக்க முடியாது. அது தொண்டை கரகரப்புக்கும், இருமலுக்கும் நல்ல பலன் தரும். அண்மைக்காலமாக நவீனத்துக்கு மாறியதால் பலர் நமது பாரம்பரியத்தை மறந்துவிட்டனர்.

உண்மையில் சித்த மருத்துவம் கூறும் பல அஞ் சறைப்பெட்டி கடைச்சரக்குகள் இருமலுக்கு நல்ல பயனளிக்கக்கூடியதாக உள்ளன. சுக்கு, மஞ்சள், மிளகு, திப்பிலி ஆகியன அந்த வரிசையில் அடங்கும். தூதுவளை, வெற்றிலை, ஆடாதோடை, கண்டங்கத்திரி ஆகிய எளிய மூலிகைகளும் இருமலுக்கு பயன்தரக் கூடியன.

நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும் அதிமதுரம் வறட்டு இருமலுக்கு நல்ல பலன் தரும். சித்த மருந்தான அதிமதுர சூரணத்தில் உள்ள 'கிளிசிரிசின்' எனும் வேதிப்பொருள் தொண்டையை மென்மையாக்கி இருமலைக் குறைக்கும்; புண் ஆற்றி செய்கையும் இதற்குண்டு.

சளியுடன் கூடிய இருமலுக்கு 'ஆடாதோடை மணப்பாகு' எனும் சித்த மருந்து ஆகச்சிறப்பான மருந்து. இது நுரையீரலில் கெட்டிப்பட்ட சளியை இளக்கி வெளிப்படுத்தும். மூச்சுக்குழாயை விரிவடையச் செய்யும். அதோடு குரல்வளையில் உள்ள தசைகளைத் தளர்த்தும் என்கிறது நவீன ஆய்வுகள்.

ஆடாதோடையில் உள்ள 'வாசின் மற்றும் ப்ரோம்ஹெக்ஸின்' வேதிப்பொருள்கள் மருத்துவ குணத்துக்கு காரணமாகின்றன. ப்ரோம்ஹெக்ஸின் மூலக்கூறு நவீன மருத்துவத்தின் இருமல் மருந்துகளிலும் சேர்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது. சித்த மருந்தான 'ஆடாதோடை குடிநீரும்' இருமலைப் போக்குவதில் சிறந்தது.

மஞ்சள் ஒவ்வாமை இருமல் முதல் ஆஸ்துமா இருமல் வரை நல்ல பலன் தரக்கூடியது. மஞ்சளில் உள்ள 'குர்குமின்' வேதிப்பொருள் மூச்சுக்குழாயில் வீக்கத்தைக் குறைத்து, தசைகளைத் தளர்த்தி, சுவாசப் பாதையைச் சீராக்கும் தன்மை உடையது.






## சோ.தில்லைவாணன்

நஞ்சில்லா மஞ்சளைப் பொடித்து தேனில் கலந்து கொடுக்க இருமல் குறையும்.

திரிகடுகில் முதல் இடத்தைப் பிடிக்கும் சுக்கு, இருமலைக் குறைப்பதில் பலன் தரும். சுக்கில் ஜின்ஜெரால், சினியோல், ஷோகோல் ஆகிய பல்வேறு வேதிப்பொருள்கள் உள்ளன. இதில் உள்ள 'சினியோல்' மூளையில் முகுளத்தில் (மெடுல்லா) நேரடியாகச் செயல்பட்டு இருமலை தணிக்க உதவுவதாக நவீன அறிவியல் கூறுகிறது.

திரிகடுகில் இரண்டாவதாக உள்ள மிளகும், மூன்றாவதாக வரும் திப்பிலியும் இருமலுக்கு நல்ல தீர்வை கொடுப்பவை. சித்த மருந்தான மிளகு சூரணமும், திப்பிலி ரசாயனமும் ஒவ்வாமை (அலர்ஜி) இருமல் முதல் ஆஸ்துமா இருமல் வரை பெரும்பலன் தரக்கூடியன.

சித்த மருந்தான தாளிசாதி வடகத்தை வாயில் அடக்குவதன் மூலமும் இருமல் கட்டுக்குள் வரும். இதில் சேரும் தாளிசபத்திரி எனும் மூலிகை சாதாரண இருமல் முதல் நுரையீரல் புற்றுநோய் வரை நல்ல பலன் தருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மாறாக, தாளிசாதி சூரணம் எனும் சித்த மருந்தையும் தேனில் கலந்து எடுத்துக்கொள்ள இருமல் தீர்க்க உதவும்.

துளசி இருமலுக்கு ஆகச்சிறப்பான மூலிகை. துளசி நுரையீரலில் தங்கிய கபத்தைப் போக்கி இருமலைத் தீர்க்கும். துளசிச் சாறுடன் சிறிது தேன் சேர்த்து இருமலுக்குப் பயன்படுத்தலாம். துளசி இலைகளுடன் மிளகு சேர்த்து கசாயமாக்கி குடித்தாலும் நற்பலன் தரும். துளசியில் உள்ள நறுமண எண்ணெயும், 'யூஜெனால்' எனும் வேதிப்பொருளும் இருமலைத் தணிக்க உதவுவதாக உள்ளன.




தூதுவளை இலையுடன் மஞ்சள், மிளகு, சேர்த்து ரசம் வைத்து எடுத்துக்கொள்வது இருமலை போக்கி நுரையீரலின் வாழ்நாளை நீட்டிக்கும். கண்டங்கத்திரி மூலிகையும் நற்பலன் தரும். தூதுவளை நெய், கண்டங்கத்திரி இலேகியம் ஆகிய சித்த மருந்துகளையும் நாட்பட்ட இருமல் நோயில் பயன்படுத்திப் பயனடையலாம். நிலவேம்பு குடிநீர், கப சுர குடிநீரும் கூட நற்பலன் தரக்கூடியன.

எளிமையாக துளசி, அதிமதுரம், மஞ்சள், மிளகு, சுக்கு இவை ஐந்தும் சேர்ந்த மூலிகைக் கலவை சுவாச மண்டலத்தை அனைத்து

நோய்களில் இருந்து காக்கக்கூடியது. அவ்வப்போது இவற்றை மூலிகை தேநீராக்கி எடுத்துக்கொள்வதும் சுவாசத்தைக் காக்கும்.

கற்பூரவள்ளியும், குப்பைமேனியும் மார்பில் தங்கி சிரமம் தரும் சளியை நீக்கி இருமலைக் குறைக்கும். சிறுவர்களுக்கு கற்பூரவள்ளி இலைச்சாறுடன் தேன் சேர்த்துக் கொடுக்கும் வழக்கம் இன்னும் கிராமங்களில் இருந்து வருகிறது.

குப்பைமேனி வாந்தியை உண்டாக்கி சளியை வெளிப்படுத்தும் தன்மை உடையது. இருமலுக்கு வெற்றிலையுடன் மிளகு சேர்த்து கசாயமாக்கிக் கொடுக்கும் வழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது. தும்பை இலைச் சாறு, கரிசாலை இலைச் சாறு, குப்பை மேனி இலைச் சாறு மூன்றும் கலந்து வெறும் வயிற்றில் கொடுக்க வாந்தி உண்டாக்கி கோழையை நீக்கும். இருமலைப் போக்கும். நோயின் ஆதாரத்தை வேரோடு அழிக்கும். நாம் மறந்து போன மரபு மருத்துவங்கள் இன்னும் ஏராளம்.

தொடர்ந்து இருமல், பேசும் போது இருமல், இரவு தூங்கும் போது இருமல் என இருமல் குறித்த அறிகுறிகளை பலரும் சொல்லி வருகிறார்கள். உண்மையில் இருமல் என்பது தொண்டையில் ஏதேனும் மாசு படியாமல் இருக்க அதை வெளியேற்ற செய்யும் தன்னிச்சையான நிகழ்வு ஆகும். இதை தாண்டி சிலருக்கு பாக்டீரியல் , வைரஸ் தொற்று உண்டாகி தொடர்ந்து இருமல் வந்துகொண்டே இருக்கும். இதுதான் நோய் நிலை ஆகும்.

இருமல் வகைகள்

இருமல் இரண்டு வகையாக பார்க்கலாம். ஒன்று இருமும் போது சத்தம் மட்டும் வரும். இது வறட்டு இருமல் என்று அழைக்கப்படுகிறது. இரண்டாவது இருமலின் போது சளியோடு சேர்ந்து வெளியே வரும். சளியின் நிறத்தை கொண்டு அந்த இருமலுக்கு என்ன காரணம் என்பதை கண்டறிந்துவிடலாம். எந்த விதமான இருமலாக இருந்தாலும் அதற்கான வீட்டு வைத்தியம் என்ன என்பதை பார்க்கலாம்.



வறட்டு இருமலுக்கு தண்ணீர்

சளி இருமலை காட்டிலும் வறட்டு இருமல் அதிகம் பார்க்க முடிகிறது. இவர்கள் அதிகமாக தண்ணீர் குடிக்க வேண்டும். மருந்துகள் இல்லாமல் அடிக்கடி சிறிது தண்ணீர் குடித்து உடல் நீரேற்றமாக வைத்திருந்தாலே இருமல் படிப்படியாக குறைய தொடங்கும்.

வறட்டு இருமல் எப்போது வருகிறது, அதற்கான தீர்வுகள் என்ன?

வறட்டு இருமல் எப்போது வருகிறது, அதற்கான தீர்வுகள் என்ன?

வறட்டு இருமல் பேசும் போது வந்தால் அதற்கு காரணம் வேறு. படுக்கும் போது வந்தால் அது



**post nasal drip** என்றழைக்கப்படுகிறது. சைனஸ் பகுதியில் ஏதாவது திரவம் உருவாகியிருந்தால் அது மூக்கு தொண்டை பகுதியில் பட்டு தொற்று உண்டாகி கிருமிகள் உண்டாக கூடும்.

பேசும் போது மட்டும் இருமல் உண்டாகிறதே என்பவர்கள் தொண்டை பகுதியில் சூடு கொடுக்கலாம். அதாவது புதினா டீ, எலுமிச்சை டீ எடுத்தால் சரி ஆகிவிடும்.

அதிமதுர வேர் கடைகளில் கிடைக்கும். அதில் சிறு துண்டுகள் செய்து இ ஒரு துண்டை வாயில் வைத்து கொள்ள வேண்டும். அல்லது காலையில் வெறும் வயிற்றில் கால் டீஸ்பூன் அதிமதுர வேர் பொடி எடுத்து வெந்நீரில் கலந்து குடித்து வந்தால் வறட்டு இருமல் குணமாகும்.

வெறும் நீரில் ஆவி பிடித்தாலே இந்த சைனுசிட்டிஸ் இருமல் குறைய வாய்ப்புண்டு. இ ந்த நீரில் மஞ்சள் தூள், யூகலிப்டஸ் இலை அல்லது ஆயில், நொச்சி இலை போன்றவற்றை கொண்டு ஆவி பிடித்தால் படுத்தவுடன் வரும் இருமலை குறைக்கலாம்.

சளியுடன் கூடிய இருமல் எப்போது வருகிறது அதற்கான தீர்வுகள் என்ன?

சளியுடன் கூடிய இருமல் எப்போது வருகிறது அதற்கான தீர்வுகள் என்ன?

சளியோடு இருமல் வந்தால் துளசி இலையை கொதிக்க வைத்து சிறிது தேன் கலந்து குடிக்கலாம். இது சளியை குறைக்க செய்யும்.

கற்பூரவல்லியை சுத்தம் செய்து கழுவி மெல்லிய வெள்ளை துணியில் ஈரம் போக துடைக்கவும். இந்த இலையை வாணலியில் சூடுபட வறுத்து மென்மையாக பிழிந்தால் சாறு கிடைக்கும். இந்த சாறு எடுத்து சம அளவு தேன் கலந்து சிரப் போன்று எடுத்து வரலாம்.

தொண்டை வலிக்கு உப்பு கலந்த நீரை வாய் கொப்புளிக்க பரிந்துரைப்பார்கள். சிலருக்கு இதனால் எரிச்சல் உண்டாகும். ஏனெனில் சித்த மருத்துவப்படி உப்புச்சுவையும். புளிப்புச்சுவையும் கபத்தை அதிகரிக்கும். அதனால் இவை இருமலை அதிகரிக்கும்.

உப்பு குறைவாக சேர்க்கலாம். அல்லது மஞ்சள் கலந்த வெதுவெதுப்பான நீரில் வாய் கொப்புளிக்கலாம். சித்த மருத்துவத்தில் திரிபலா சூரணம் கிடைக்கும். இதை வாங்கி இதை கொண்டு வாய் கொப்புளித்து வந்தாலும் பலன் கிடைக்கும்.

நீர்கோர்வை மாத்திரை கடைகளில் கிடைக்கும். இந்த மாத்திரையை வாங்கி இஞ்சி சாறில் குழைத்து தொண்டையில் பற்று போட்டு வந்தால் இருமல் சரியாகும். சளி தொல்லையும் குணமாகும்.

இருமல் வந்த ஆரம்ப கட்டத்தில் ஆண்டி பயாடிக் மருந்துகளை தவிர்த்து இதையெல்லாம் செய்து வரலாம். பெரும்பாலான இருமல் மருந்துகள் இருமலை உடனே நிறுத்தி, சளியை உள்ளே கெட்டிப்படச் செய்யும். இதனால் நோய் தீராது; மீண்டும் துன்புறுத்தும். ஆகவே, நோயின் வேர் பார்த்து தீர்க்கும் மூலிகை மருந்துகளை நாடுவது நலத்துக்கு நல்லது.

தீராத இருமல் இருப்பின் நோய்க் காரணத்தைக் கண்டறிந்து முறையான சிகிச்சை மேற்கொள்வதும் அவசியம். நமது பாரம்பரிய சித்த மருத்துவத்தில் மூலிகைகள் மட்டுமின்றி பல்வேறு தாது, சீவ கலப்புள்ள மருந்துகளும் இருமல் தீர்க்க உதவுவதாக உள்ளன. இத்தகைய பாரம்பரிய மருந்துகளோடு பயணித்தால் நலம் நிச்சயம்.

பொறுப்பு துறப்பு: இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். அய்தமிழ் இந்த தகவல்களுக்கு பொறுப்பேற்காது.)



# மகிமை காணும்

### மதிப்புக்கு உரிய மதிப்பு!

ஒரு பொருளின் மெய்யான மதிப்பு எப்போது முழுமையாகத் தெரியும்? "இப்படி ஒரு கேள்வியை இலக்கியப் பயிலரங்கு ஒன்றில் பங்கேற்பாளர்களிடம் கேட்டேன். விலையைப் பொருத்தது' என்றார் ஒரு மாணவர்.

விலை மதிப்பற்றது, விலை மதிக்க முடியாதது என்றெல்லாம் சொல்லுகிறோமே? அப்படியானால் என்ற பதில் கேள்வி கேட்டதும், பயன்படுத்துவதைப் பொருத்தது என்று ஒரு மாணவி கூறினார். அது எப்படி? தங்கத்தின் விலை மதிப்பு அதிகம். அதனோடு ஒப்பிட, தக்காளியின் விலை குறைவு. தக்காளி சாப்பாட்டுக்கு உதவும். தங்கத்தைச் சாப்பிட முடியுமா என்று பதில் கேள்வி கேட்டார் மாணவர். தங்கத்தை விற்றால், தக்காளிக் கடையையே வைக்கலாம் என்று பதிலளித்தார் மற்றொருவர். சின்னத் தக்காளியின் மிகச் சிறிய விதைகூட மண்ணில் விழுந்தால் மறுபடி பல நூறு தக்காளிகளைத் தரும்; முளைக்கும். அதுபோல், தங்கம் முளைக்குமா? இத்தனைக்கும் அதுவும் மண்ணில் இருந்துதான் கிடைக்கிறது என்று மறுத்தார் மாணவி.

குழுக்களாகப் பிரித்து நடத்திய வகுப்பு என்பதால், பதில் தருபவர் எவரோ, அவர்தம் குழுவில் இருந்து பலத்த கரவொலி எழும்பிவிடும். சுவையான செய்தியாக அமைந்துவிட்டால், அது குழு எல்லை கடந்து பலரது கரவொலிகளையும் பெற்றுவிடும்.

இந்தப் பதிலுக்கு அப்படி ஒரு பொதுக்கரவொலி எழுந்தது. இது பொது நிகழ்வு இல்லை; குழு உரையாடல். பொதுநிகழ்வில்போல், இதுபோன்ற குழு உரையாடலிலும் கரவொலி எழுப்பி அங்கீகரிப்பதும், பாராட்டுவதும்கூட மதிப்பைத் தருவதுதான். எவ்வளவு பேர் எவ்வளவு சப்தமாகக் கரவொலி எழுப்பினார்கள் என்பதைப் பொருத்து ஒரு கருத்தின் மதிப்பை அளவிட்டுவிட முடியாது. பலத்த கரவொலி பெறுகிற உரையைவிட, கைதட்ட மறந்து சிந்திக்க வைக்கிற உரைதான் உயர்ந்தது; பயனுள்ளது.

கை தட்டல் அரங்கத்தில் எழுப்பப்பட்ட மறுகணமே, அவ்வொலி காற்றில் கரைந்துபோகும். ஆனால், கவனத்துக்குக் கொண்டுவரப்பெற்ற செய்தி எழுப்புகிற சிந்தனை காலம் கடந்து இருக்கும். செயல் விளைவுகளை உண்டாக்கும் என்று விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கும்போது, ஒரு பொருளின் முழு மதிப்பு, காலத்தைப்

தலைப்பு திசைமாறுகிறது, பட்டிமன்றத்தைப்போல். தங்கமா?, தக்காளியா என்று பட்டிமன்றமா இங்கே நடத்துகிறோம்? கேள்வி என்ன? எது விலை உயர்ந்தது என்பது இல்லை. ஒரு பொருளின் முழுமதிப்பு வெளிப்படுத்துவது எப்போது என்று மற்றொருவர் தெளிவுபடுத்தினார். "அது பயன்படுத்துபவரின் தகுதியை, தேவையைப் பொருத்தது என்ற பதிலும் வந்தது. பயன்படுத்தவே இல்லை என்றால், ஒரு பொருள் தன் தகுதியில் மதிப்பில் குறைந்துவிடுமா என்ன என்ற வினாவும் எழுந்தது. பயிற்சி பெறுபவர்களைக்

> Strive not to be a success, but rather to be of value.
>
> Albert Einstein




பொருத்து அமையும் என்று சொல்லலாமா என்று ஒருவர் குறுக்கிட்டுக் கேட்டார். கரவொலி எழுப்பப் போன ஒரு சிலரும் செவி மடுத்த சிந்தனையால் நிறுத்திக் கொண்டனர்.

"எங்கே, ஜோரா ஒரு தடவை கை தட்டுங்க' என்று இரண்டு நிமிஷங்களுக்கு ஒருமுறை கரவொலியை இரவலாய்ப் பெற்றுப் பேசுகிற பேச்சாளரின் கவனமெல்லாம் கரவொலியின்மீது இருக்குமே ஒழியப் பேசுகிற கருத்தில் இருக்காது என்று அதற்கும் விளக்கம் சொன்னேன்.

"ஒரு பொருளின் மதிப்பு, அதற்குச் சமமானதாகவோ மாற்றாகவோ இருக்கும் மற்றொரு பொருளின் மதிப்போடு ஒப்பிடுகிறபோது முழு மதிப்புத் தெரியும் என்று சொல்லலாமா? ஏற்கெனவே சொன்ன தக்காளியை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.


தராசில் எடை போடும்போது ஒரு கிலோ இரும்புப் படிக்கல்லுக்கு இணையாகத் தக்காளி இருந்தாலும் இரும்பின் விலை அதிகம். அதுவே, அதற்குச் சமமாகத் தங்கம் வைக்கப்பட்டிருந்தால்,


**கிருங்கை சேதுபதி**

அது இரும்பைவிட விலை அதிகம். சந்தை மதிப்பிலும், சமூக மதிப்பிலும் உயர்ந்ததை வைத்து முடிவு செய்யலாமா' என்ற வினாவும் முன் வைக்கப்பட்டது.

இந்த நேரத்தில் ஒரு குழுவிடம் இருந்து பரபரப்பும் சலசலப்பும் எழுந்தது. அது அடுத்த குழுவுக்கும் பரவியது. ஒருசில நிமிஷங்களிலேயே அது அனைத்துக்குக் குழுவுக்கும் பரவியது.

"என்னாச்சு?' "என்னோட கைப்பேசியைக் காணோம்'. ஒவ்வொருவரும் தன் கைப்பேசி காணாததுபோல் துணுக்குற்றனர். சிலர் தமது கைப்பேசி இருப்பை உறுதி செய்துகொண்டனர். "ஃபோன் பண்ணிப் பார்த்தால் தெரியும்'. "சைலண்ட்ல போட்டிருக்கேன்'; "ரொம்ப காஸ்ட்லியா?' விலை மதிப்பு இருக்கட்டும். அதில்தான் எல்லாம் இருக்கிறது.






மற்றவர்களின் கைப்பேசி எண்கள், வங்கிக் கணக்கு. வரவு செலவு, படங்கள், ஆவணங்கள் என்று தொலைத்தவர் அதில் உள்ளவற்றைப் பட்டியலிடத் தொடங்கினார். அதைவிட, அழுகை முந்திக் கொண்டுவந்தது. “அழ வேண்டாம். நாங்க எல்லாரும் சேர்ந்து, புதுசாவே வாங்கித் தந்துவிடுகிறோம்‘ என்று அந்தக் குழுவினர் ஆறுதல் சொல்ல, “ஃபோன் புதுசு வாங்கினாலும், காணாமல் போன ஃபோனில்தான் எல்லாம் இருக்கு’ என்று தொலைத்தவர் கவலையோடு சொன்னார். விளக்கம் தேடுவதைவிட, காணாமல் போன கைப்பேசியைத் தேடுவதில் கவனம் கூடியது.


“போன இடங்களை நினைவுபடுத்திப் பார்’ என்று தொலைத்தவரின் தோழி கூற, அரைமணிநேரம் தேடும் படலம் தொடர்ந்தது. கடைசியில் அது சாப்பிடும் கூடத்தில் இருந்து கண்டறியப்பட்டது. அனைவருக்கும் நிம்மதி பிறந்தது.

“ஆக, ஒரு பொருளின் மதிப்பு, அதன் விலையில் இல்லை; பயன்பாட்டில் இல்லை; அது தொலைகிறபோதுதான் முழு மதிப்பும் நமக்குத் தெரிய வருகிறது’ என்று சொன்னவுடன் அனைவரும் மகிழ்ச்சியோடு ஆரவாரமாய்க் கரவொலி எழுப்பினார்கள்.

கருத்தை அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் விரித்துச் சொல்லவும் நேர்ந்தது. இருப்பதன் மதிப்பு, இல்லாமையில்தான் முழுமையாக வெளிப்படுகிறது. நிழலின் அருமை வெயிலில் தெரிவதுபோல்.

ஆரோக்கியத்தின் மதிப்பு, நோய் வயப்படுகிறபோது தெரிகிறது. உறுப்புகளின் சிறப்பு, இழப்புகளின்போது தெரிய வருகிறது. “கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்‘ என்ற பழமொழி, கவனத்தில் பதிந்தாலும், அனுபவத்தில் வருகிறபோதுதான் அதற்கும் மதிப்பு கூடுகிறது.

“யானை இருந்தாலும் ஆயிரம் பொன். இறந்தாலும் ஆயிரம் பொன்’ என்ற பழமொழி, யானைக்குப் பொருந்திய அளவுக்கு






மனிதர்களுக்குப் பொருந்துமா என்ற கேள்வி முன்னெல்லாம் எழுந்தது. கண் தானம் முதலான உறுப்பு தானங்கள் பயன்பாட்டுக்கு வந்தபிறகு, மனித உடலின் மதிப்பும் கூடியிருக்கிறது.

உணவுப் பொருளின் மதிப்பைவிட, உணர்வுப் பொருளின் மதிப்புக் கூடுவதுபோல் தெரிந்தாலும், பசி வந்தால் என்ன ஆகும்? “பணம் பத்தும் செய்யும்‘ என்ற பழமொழியும், “பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்‘ என்கிற ஒஜவையார் பாடலடியும் ஒன்றுபோல் தெரியும். ஆனால், அவை ஒன்றாகாது. பணத்தை வைத்துக்கொண்டு அந்தப் பத்து எவையென ஆராய்ச்சி செய்யலாம்; நிரல்படுத்தலாம். ஆனால், பசியை வைத்துக்கொண்டு, பத்து எவையென்று பட்டியலிட முடியாது. கண்ணில்பட்ட பொருள்களில் பசி தீர்க்கும் பொருள் எதுவென்றுதான் தேடச் சொல்லும்.

இளம் குழந்தைக்கு, ஐநூறு ரூபாய்த் தாளைவிட, ஐஸ்க்ரீம்தான் மதிப்பில் உயர்ந்தது. பசித்தவனின் உணர்வுக்கு பண மதிப்பீட்டைவிடவும் உணவுத் தேவைதான் உயர்வுடையதாய்த் தெரியும். எத்தனை ஆயிரம் கொடுத்தாலும், இப்போது உண்ண எது கிடைக்கும் என்றே தேடச் சொல்லும். அந்த அனுபவத்தில், ஒரு புதிய உண்மை பிறக்கும். “பசி உயிர் போகுது.’ பசி உடலின் தேவையா?, உயிரின் தேவையா?

உடலோடு உயிரைப் பிணைத்துவைக்கும் உணர்வு அது. அந்த நேரத்தில் கிடைக்கும் உணவுக்கு ஒரு விலை இருக்கும். அது பண மதிப்பீட்டில் எப்படி இருந்தாலும், மன மதிப்பீட்டில் எவ்வளவு உயர்ந்தது?

சரி, பசிக்கிறபோது புசிக்கக் கிடைக்காத உணவைக் கிடைக்கிறபோதெல்லாம் எடுத்து முழுதாக உண்டுவிட முடிகிறதா? ஒப்பீட்டு நிலையிலும்கூட நம் மதிப்பீடு சரியாக இருப்பதில்லை.

உயிரின் மதிப்பு உயர்ந்தது என்று எண்ணுவது இயற்கை. அதைவிட உடலின் மதிப்பு உயர்ந்தது என்பதை ஒப்புக்கொள்ள மனம் மறுக்கும். ஓர் உடலின் உறுப்புகளை, ஏனைய உடல்களுக்கு மாற்றிவைத்துப் பயன் கொள்வதுபோல், உயிரை வேறு உடலுக்குள் புகுத்துகிற மருத்துவச் செழுமை இன்னும் கைகூடி வரவில்லை. தங்கத்தினும் தாய் உயர்ந்தவர் என்பது தெரியும். ஆனால், நடைமுறையில்? பணத்திலும் உயர்ந்த மதிப்புடையது குணம் என்று தெரிகிறது. ஆனால், தேடலில் எது முதலிடம் வகிக்கிறது?

மதிப்பு என்பது, அந்தந்த நேரத்துக்கு ஏற்பக் கூடலாம்; குறையலாம். முழு மதிப்பு என்பது அதன் தன்மை முழுமையாக உணரப்படுகிறபோதுதான் தெரிய வரும். இப்போதும்கூட, அறியப்படுகிற மதிப்பீடுகள்தான் நம்மை ஆக்கிரமிக்கின்றன. உண்மையில், மதிப்பெனப்படுவது மதிப்பிடப்படுவதில் இல்லை. மதிப்புக்கு உரிய மதிப்பு வழங்கப்படாதபோதுதான் அபூர்வமாய் வெளிப்படுகிறது.

உடலும் உயிரும் இணைந்து பயன் கொள்ளும் காலத்தின் தேவைக்குப் பயன்படும் ஒரு பொருளின் முழு மதிப்பு என்பது, அந்தக் காலத்தோடு மட்டும் முடிந்துவிடாமல், காலா காலத்துக்கும் பயன்படும்போதுதான் அதன் முழு மதிப்பும் தெரியவரும்; அத்தகைய மதிப்புக்கு உரிய மனிதராய் நம்மையும் மதிப்புக்கு உரிய நிலையில் நம் வாழ்வையும் அமைத்துக் கொள்வதில்தான் நம் மதிப்பு அடங்கியிருக்கிறது’ என்று அப்போதைக்குச் சொல்லி நிறைவுபடுத்திக் கொண்டோம். இது குறித்த உங்களின் மதிப்பீடுதான் என்ன?

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

2025

## JANUARY




## FEBRUARY





## MARCH




## APRIL




## MAY




## JUNE




## JULY




## AUGUST




## SEPTEMBER




## OCTOBER





## NOVEMBER





## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email:
editor@ithamil.com


VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
Eat the Best!!!
VARSHA
1Kg
Traditional taste that Lingers
VARSHA
VARSHA